வெளியீடு 22-10-2001 Issued 22-10-2001

842

355/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை பிப்ரவரி 1, 2001 – தொகுதி 115 – எண் 2

**Thursday the 1st February, 2001 – Volume 115 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [**Price Rs. 3.00**

# 1-2-2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 223-263 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் அளித்த வைட்டமின் 'ஏ' கரைசல் காரணமாக குழந்தைகள் பாதிக்கப்பட்டமை | 263-273 |
| திரு. இரா. விசுவநாதன் | 263-266, 272 |
| திரு. சி. ஞானசேகரன் | 267-268 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 268,269-270 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 270-272 |
| (ஆ) சிதம்பரம் வக்காரமாரி ஏரி நீரை சுத்தப்படுத்துதல் | 273-276 |
| திரு. ச. அழகிரி | 273 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 273-276 |
| **3. விதி 111-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை—** | |
| *31-1-2001* அன்று அளித்த விளக்கத்திற்குத் திருத்தம் | 276-277 |

பக்கங்கள்

4. அறிக்கைகள் அளித்தல்—

(அ) மதிப்பீட்டுக் குழு 277

(ஆ) பொதுக் கணக்குக் குழு 277

(இ) மனுக்கள் குழு 277

5.அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்)சட்டமுன்வடிவு, 2001 278

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2001 283

6. அறிவிப்புகள்—

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, (முன்மொழிதல் (ஆசெ.) 278

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2001 (ஆஇ) 283

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, வாக்கெடுப்பு— 279-282

8. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்—தொடர்ச்சி 284-373

திரு. ர.ர. ஈஸ்வரன் 284-291

*திரு. பெ. ஆசையன் 291-297

திரு. வை. சிவபுண்ணியம் 297-306

திரு. பி.ஆர். சுந்தரம் 307-320

திரு. பி. இராசமாணிக்கம் 321-325

திரு. ஜி. நிஜாமுதீன் 325-328



பக்கங்கள்

8. இடைக்கால வரவு செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்—தொடர்ச்சி

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் 330-336

*டாக்டர் வை. இராமசாமி 336-340

திரு. டி. மணி 340-348

*திரு. கே.கே. வீரப்பன் 343-352

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் 352-357

திரு. பி.என். சுப்பிரமணி 357-360

*திரு. ச. புரட்சிமணி 360-363

*திருமதி கோமதி சீனிவாசன் 363-366

திரு. தி.ப. ஆறுமுகம் 366-369

திரு. எஸ்.எஸ். மணி நாடார் 371-373

9. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்தல் 370

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 373-375

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
184874.
சென. ... C.3
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 19, விக்கிரம—திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 பிப்ரவரி 1, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்"*

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்குத் தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 141, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

141—

### தொகுதிகள் மறுவரையறை

***42757—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்குப் பின்னர் தமிழ்நாடு சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்ய மத்திய அரசு கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2001 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை தனியாக வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 81-க்கு 1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 42-வது சட்டத் திருத்தம் மற்றும் பிரிவு 82 ஆகியவற்றின்படி 2001 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் மக்கள்தொகை கணக்கெடுப்பு நிலவரம் வெளியிடப்படும்வரை ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதியின் எண்ணிக்கை மாற்றப்படாமல் இருக்க வேண்டும். எனினும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குடும்பநலத் திட்டத்தை செவ்வனே நடைமுறைப்படுத்தும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் மக்கள்தொகையின் அடிப்படையில் தொகுதிப் பங்கீடு செய்யப்பட்டால் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது. எனவே மக்களவைத் தொகுதிகளை பொறுத்தவரை ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏதும் செய்யப்படாமல் இருப்பதற்கு ஏதுவாக தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளலாம் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 22-02-1999ஆம் நாளன்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் நகல் பாரதப் பிரதமருக்கும், மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன், மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித் துறை இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் விவரம் வெளியிட்ட பிறகு, அதன் அடிப்படையில், வெவ்வேறு தொகுதிகளில் மக்கள்தொகை வெவ்வேறு விகிதாச்சாரத்தில் இருப்பதால் நிலவும் சமநிலையற்ற தன்மையை நீக்குவதற்காக, தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்காமல் அதன் எல்லைகளை மட்டும் மாற்றி அமைப்பது குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதித் துறையின் அமைச்சரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. இதுகுறித்து அவ்வப்போது மத்திய அரசுக்கு நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு வருகிறது. எனினும் மத்திய



2001 பிப்ரவரி 1]

அரசிடமிருந்து எழுத்து முறையில் இதுவரை எந்தத் தகவலும் பெறப்படவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை வைத்திருப்பதை நான் பார்க்கவில்லை. எனவே அதை முழுமையாகப் படிக்கவில்லை. அது என்ன விவரம் என்று சொன்னால், அதையொட்டி நான் துணைக் கேள்வி கேட்க வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அந்த விவர அறிக்கையைப் பார்த்துவிட்டுத்தான் அவையில் வைத்திருப்பார். துறையினர் வைத்திருந்தால், உங்களுக்குக் கொடுத்திருப்பார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** அதை நான் மறுக்கவில்லை. ஒரு கேள்விக்கு விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கும் என்று என்னால் கற்பனையில்கூட மதிப்பிட முடியவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொஞ்சம் கற்பனையைக் கடந்து உண்மையாக இருக்கிற காரணத்தால்தான் விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இது மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி வரையறைகளை மறுவரையறை செய்ய மத்திய அரசு கருதியிருக்கிறதா என்பது குறித்ததாகும். மத்திய அரசு நாடாளுமன்றத் தொகுதி (உறுப்பினர்) எல்லையை அடிப்படையாக வைத்துத் தான் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதிகள், 5, 6 என்ற முறைப்படி வகை செய்கிற, முறை செய்கிற ஒரு வழக்கமும், அந்த முறையில் ஒதுக்கப்பட்ட தொகுதிகள், தனித் தொகுதிகள், அவற்றை குறிப்பிட்டுத் தெரிவிப்பதும் மரபாகும். ஆனால் இப்பொழுது நாடாளுமன்றத் தொகுதிகளைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே உள்ள எண்ணிக்கைகளில் மாற்றம் ஏற்படக்கூடாது என்ற ஒரு கொள்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே நாடாளுமன்றத் தொகுதி அடிப்படையிலேதான் மறுபரிசீலனை செய்கிற அவசியம் ஏற்படுகிறது என்ற அடிப்படையில், மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிந்ததற்குப் பின்னர், நாடாளுமன்றத் தொகுதிகளை வரையறுப்பதற்குத்தான் அவர்கள் முதலில் முயற்சிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்கிடையில் சட்டமன்றத் தொகுதி அடிப்படையில் மக்கள்தொகை கூடுதலோ, குறைவோ, வாக்காளர் அதிகமோ, குறைவோ அந்த அடிப்படையில் மறுவரையறை செய்யக்கூடிய வாய்ப்பு எதுவும் தற்போது இல்லை.

[2001 பிப்ரவரி 1

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தில் ஜனப் பிரதிநிதிகள் அங்கம் பெறுவதற்குரிய வாய்ப்பை வழங்குகிற காலத்தில் ஒரு ஏற்ற இறக்கமான போக்கு இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். உதாரணமாக, ஒரு லட்சம் வாக்காளர்களைக் கொண்ட ஒரு சட்டமன்றத் தொகுதியும் இருக்கிறது. வில்லிவாக்கம், திருப்பூர் போன்ற 4 லட்சம், 5 இலட்சம், 7 இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளும் இருக்கின்றன. இது நடைமுறையில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றது. எனவே நடைமுறை வாழ்க்கை அனுபவம் உணர்த்துகிற படிப்பினை என்னவென்றால், இதைக் கட்டாயம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியமும் தேவையும் அதிகரித்துள்ள நிலையில்கூட இதுகுறித்து மத்திய அரசு சிந்திக்கவில்லையென்றால், அதைப் பொறுப்பற்ற நடவடிக்கையாக மக்கள் கருதக்கூடும். எனவே பொறுப்பற்ற நடவடிக்கையில் மத்திய அரசு தொடர்ந்து ஈடுபடாமல், மத்திய அரசுக்குப் பொறுப்பை உணர்த்துகிற கடமையை மாநில அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிகள் மறு ஆய்வு செய்வது என்பதும், வரையறை செய்வது என்பதும், அது ஏறத்தாழ ஆறு மாத காலப் பணி. இப்போது அண்மையிலே தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட இருக்கிறது. தேர்தல் அறிவிக்கப்பட இருக்கின்ற நேரத்தில் தொகுதி மறு ஆய்வு செய்து, மறுவரையறை செய்வது என்பதை எவ்வளவு பொறுப்புள்ள அரசாக இருந்தாலும், இந்தப் பொறுப்பற்ற காரியத்தில் ஈடுபட முடியாது. ஏனென்றால், இவற்றையெல்லாம் செய்து நிறைவேற்றிய பின்னர்தான் தேர்தலைச் சந்திக்க வேண்டும். ஆகவே வழக்கமாக ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையை, முறையாக நிறைவேற்றுவதை கடந்த 25 ஆண்டுகாலமாக ஒவ்வொரு தேர்தல் வருகிறபோதும்—அந்தப் பணி— நிறைவேற்றப்படவில்லை. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்வது என்ற கொள்கை நடைமுறைப்படுத்த முடியாமல் நின்று போய்விட்டது. இப்போது இந்த நூற்றாண்டினுடைய முதல் ஆண்டில் எடுக்கப்படுகிற மக்கள்தொகையை அடிப்படையாக வைத்து, சட்டமன்றத் தேர்தல் முடிந்து 6 மாத காலம் அல்லது ஓராண்டு காலத்திற்குள், நாடாளுமன்றத் தொகுதிகள் அடிப்படையிலே அவர்கள் பரிசீலனை செய்து, அதிலே முடிவு வந்ததற்குப் பின்னர் அடுத்த தேர்தலிலேதான் சட்டமன்றத் தொகுதி மறு ஆய்வு நடைபெறக்கூடும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.



2001 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் எண்ணிக்கையைப்பற்றி அவ்வளவு முக்கியமாகப் பேசினார். ஒதுக்கப்பட்ட தொகுதிகள் 30 ஆண்டுகளாக அதே தொகுதிகளாக இருக்கின்றன. அதையும் நாம் சிந்திக்க வேண்டும். தொகுதிகளின் எண்ணிக்கையைப்பற்றி பிரச்சினை இல்லை. ஆனால், 30 ஆண்டுகளாக அதே தொகுதிகள், அப்படியே இருக்கின்றன.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** 33 ஆண்டுகளாக என் தொகுதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்த எண்ண ஓட்டத்தில் நினைத்திருந்தேனோ அதைத்தான் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் வெளியிட்டார்கள். 30 ஆண்டுகாலம் இதே பிரச்சினை இருக்கிறது. தொகுதி, அதை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை. அடுத்து, தொகுதியை அதிகப்படுத்துவது என்கிற விஷயம் வேறு. தொகுதியினுடைய எல்லைகளையாவது மாற்ற வேண்டும். உதாரணமாக, விருத்தாசலம் நகராட்சியினுடைய எல்லையையொட்டி 25 கிலோமீட்டர் தூரம் வடக்கு தெற்கிலே என்னுடைய தொகுதி இருக்கிறது. ஆனால், மேற்குப் பகுதியில் நகராட்சி எல்லையோடு முடிந்துவிடுகிறது. விருத்தாசலம் ஒன்றியத்தைச் சார்ந்தவர்கள் வேறு தொகுதியிலே இருக்கிறார்கள். இரண்டு தொகுதிகளிலேயும் இருக்கின்றார்கள். எனவே ஒரு தலைநகரத்தை மையமாக வைத்து குறைந்தது 25 கிலோமீட்டர் அல்லது 15 கிலோமீட்டர் என்ற அளவிற்கு தொகுதியினுடைய எல்லைகளை மாற்றுவதற்காகவாவது மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்யுமா? அந்தப் பணிகளை நிறைவேற்ற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பொறுப்போடு நான் பதில் சொல்வதாக இருந்தால், இந்தச் சட்டமன்றத்திற்கான தேர்தல் தேதி ஏப்ரல், மே திங்களில் அறிவிக்கப்பட இருக்கிறது என்பதையும் இந்தச் சட்டமன்றத்தின் இறுதிக் கூட்டத்தொடர் இப்போது நடக்கிறது என்பதையும் கருத்திலே வைத்துக்கொண்டு, இதற்கிடையில் ஏதாவது மாற்றம் செய்ய முடியுமா என்றால் அப்படி எதிர்பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்கு இல்லை.

[2001 பிப்ரவரி 1

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்லிவிட்டேன் அல்லவா? நீங்கள் உட்கார்ந்துகொண்டே பேசினீர்கள். நீங்கள் சொன்ன கருத்தை நான் சொல்லியாகிவிட்டது.

வினா எண் 142, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**142—**

**சுரங்கப் பாதை**

***27998—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் ரயில் நிலையத்திற்கு அருகில் மேற்கு ரெட்ஹில்ஸ் சாலையில் சுரங்கப் பாதை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை வில்லிவாக்கம் ரயில் நிலையத்திற்கு அருகில் மேற்கு ரெட்ஹில்ஸ் சாலையில் சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் சென்னை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 143 மற்றும் 144, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் உடல்நிலை சரியில்லையென்று கடிதம் அனுப்பியிருக்கிறார். ஆகவே இவ்விரண்டு வினாக்களும் ஒத்திவைக்கப்பெறுகின்றன.



2001 பிப்ரவரி 1]

வினா எண் 145, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**145—**

**தடுப்பு அணை**

***6455—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே அணைப்பாளையம் கிராமத்திற்கு அருகில் தடுப்பு அணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 146, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**146—**

**பாசன வசதி**

***29322—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, பழைய வானாதிராஜபுரம் வாய்க்கால் தலைப்பை பாசன வசதி கருதி காவிரி ஆற்றிலிருந்து விக்கிரமன் ஆற்றில் மாற்றித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2001 பிப்ரவரி 1

பழைய வானாதிராஜபுரம் வாய்க்கால் தலைப்பை காவிரி ஆற்றிலிருந்து விக்கிரமன் ஆற்றிற்கு மாற்ற கடந்த ஆண்டு மட்ட அளவுகள் எடுக்கப்பட்டன. விக்கிரமன் ஆற்றிலிருந்து மேற்கண்ட வாய்க்காலுக்கு தண்ணீர் செல்ல மட்ட அளவுகள் அனுமதிக்காததால் மேற்கண்ட கால்வாயின் தலைப்பை விக்கிரமன் ஆற்றிற்கு மாற்றும் செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மூல வினாவில் கேட்கப்பட்டுள்ள பழைய வானாதிராஜபுரம் வாய்க்கால், புதிய வானாதிராஜபுரம் வாய்க்கால் இரண்டும் காவிரியிலிருந்துதான் பாசனத்திற்கான நீர் பெற்று வந்தன. இரண்டு வாய்க்கால்களும் தூர் வாரப்பட்ட பிறகும்கூட ஏதோ ஒரு தொழில்நுட்பக் குறைபாடு காரணமாக தண்ணீர் வராத நிலை இருக்கிறது. தலைப்பு எங்கே இருந்தாலும் காவிரியிலே இருந்து மீண்டும் தண்ணீர் கொடுத்து, இந்த ஆண்டு பாசனம் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றிலிருந்து வானாதிராஜபுரம் வாய்க்கால் பிரியும் இடத்தில் காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள படுகை அணை சீர்செய்யப்பட்டு அளவு உயர்த்தி கட்டப்பட்டுள்ளதால் தற்போது காவிரி ஆற்றிலிருந்து மேற்கண்ட வாய்க்காலில் நல்ல முறையில் பாசனத்திற்குத் தண்ணீர் செல்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 147, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**147—**

### அகல இரயில் பாதை

***37302—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகூர்-பெங்களூர் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக்கும் திட்டத்தின் இன்றைய நிலை என்ன?



2001 பிப்ரவரி 1]

(ஆ) இதனை விரைவுபடுத்த மாநில அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது திருச்சிராப்பள்ளியிலிருந்து பெங்களூருக்கு அகல இரயில் பாதை உள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து தஞ்சாவூர்வரை அகல இரயில் பாதை அமைக்கப்பட்டு 1-1-1998 முதல் போக்குவரத்து நடைபெற்று வருகின்றது. தஞ்சாவூரிலிருந்து நாகூர்வரை உள்ள இரயில் பாதை, அகல இரயில் பாதையாக மாற்றப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கேற்றவாறு பணி நடைபெற்று வருகிறது.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-ல் நாகூரிலிருந்து தஞ்சாவூர்வரையிலான பாதையை அகல இரயில் பாதையாக மாற்றுவதற்கான பொருட்கள் எல்லாம் அங்கே வந்து இறங்கின. மீண்டும் அவற்றை அங்கிருந்து அப்புறப்படுத்தி வேறு இடத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதனால் பணி தடைபட்டு இருக்கின்றது. நிதி ஒதுக்கி இருக்கிறோம் என்று மத்திய அரசு கூறி வருகின்றது. ஆனால் எந்த நிதியும் ஒதுக்காததனால் கடந்த 4 ஆண்டுகளாக இந்தப் பணி தடைபட்டு, நாகூர்-பெங்களூர் பேசஞ்சர் இரயிலும் நிறுத்தப்பட்டு மக்கள் அவதிக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். ஆகவே இதுபற்றி இந்த அரசு மத்திய அரசுக்கு எழுதி உடனே அதை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலிருந்து நாகூர்வரையிலான இரயில் பாதையை அகலப்படுத்துவதற்காக 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த அரசு மேலும் நிதியை ஒதுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-இராமேஸ்வரம், விருதுநகர்-கொல்லம் ஆகிய இரண்டு அகல இரயில் பாதைத் திட்டங்களை கடந்த ஆண்டு ஆரம்பிப்பதாக மத்திய அரசு அறிவித்தபோது சுமார் 15 கோடி ரூபாய்தான் ஒதுக்கியது. இப்போது அந்த வேலை ஆரம்ப கட்டத்திலே இருக்கிறபடியால் மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 பிப்ரவரி 1

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற கருத்துக்களை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு புகைவண்டித் தடங்களை வேண்டி மத்திய அரசுக்கு மாநில அரசு அவ்வப்போது கடிதங்கள் எழுதி இருக்கிறது. நேரடியாகவும் சென்று வலியுறுத்தி இருக்கிறது. நிதி ஒதுக்கீடு கிடைக்கிறபோது பணிகளைத் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நீங்கள்தான் அனுமதி கேட்டீர்கள். நீங்கள் துணை வினா கேட்கவில்லை என்றால் நான் வேறு யாரையாவது கூப்பிடுவேன். (குறுக்கீடு) திரு. பழனிசாமியைக் கூப்பிட்டால், திரு. சுப்பராயன் எப்படி எழுந்து நிற்பது? (குறுக்கீடு) திரு. பழனிசாமி, நீங்கள் கையைத் தூக்கினீர்கள். நீங்கள் துணை வினா கேட்கிறீர்களா, இல்லையா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள இரயில் பாதைகளை, அகல இரயில் பாதைகளாக விஸ்தரிக்க மத்திய அரசிடமிருந்து நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி மிகமிகக் குறைவாக இருக்கிறது. அதிகப்படியான நிதியைப் பெறுவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியும் மத்தியிலே ஆட்சியிலே இருக்கிறது; திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்கிறது. இதை அவர்கள் மூலமாகவும் வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். நிச்சயமாக வருங்காலங்களில் அதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னக இரயில்வேயில் திருவனந்தபுரத்தில் ஒரு கோட்டமும், மதுரையில் ஒரு கோட்டமும் இருக்கின்றது. இடைப்பட்ட திருநெல்வேலியில் இரயில்வே கோட்டம் இல்லை. ஆகையினால், E.Q. release பண்ண வேண்டுமென்று சொன்னால்கூட, திருவனந்தபுரம் அல்லது மதுரைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, வளர்ந்து வருகின்ற திருநெல்வேலியைத் தலைமை இடமாகக்கொண்டு ஒரு கோட்டம் அமைப்பதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2001 பிப்ரவரி 1]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே அவர்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மூலமாக எழுப்ப வேண்டிய கேள்விகளை எல்லாம் இங்கே எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, நீங்கள் வைத்து இருக்கிற கோரிக்கைகளை இந்த அரசு முதலிலேயே வலியுறுத்தி மத்திய அரசுக்குச் பரிந்துரையாக அனுப்பி இருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம், அவினாசி, திருப்பூர், தாராபுரம் மற்றும் பழனி வரையிலும்—சாம்ராஜ் நகரிலிருந்து பழநி வரையிலும்—ஒரு அகல இரயில் பாதைத் திட்டம் தொடங்கப்படுவதாகப் பரவலாகப் பேசப்பட்டது. அந்தத் திட்டம் குறித்து மத்திய அரசிடம் மாநில அரசு ஏதாவது பேசி இருக்கிறதா? தற்போது அந்தத் திட்டத்தினுடைய கதி என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அதுபோன்ற குறிப்பு ஏதும் அனுப்பப்பட்டதாக என்னிடம் குறிப்புகள் எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே உற்சாகமாக இருப்பார்கள் என்று சொன்னால், அதுபற்றி அவர்கள் எழுதிக் கொடுத்தால், அதையும் அனுப்புவதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலிருந்து தாம்பரம்வரை அகல இரயில் பாதை இல்லாத காரணத்தால் தஞ்சாவூர், கும்பகோணம், சிதம்பரம் ஆகிய ஊர்களில்

[2001 பிப்ரவரி 1

ஏறுகிறவர்களெல்லாம் தாம்பரத்திலே இறங்கி, அதன் பிறகு மின்சார இரயிலில்தான் சென்னைக்கு வர வேண்டியிருக்கிறது. எனவே தஞ்சாவூரிலிருந்து தாம்பரம் வரை அகல இரயில் பாதை ஆக்குகிற திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அப்படியென்றால் அந்தப் பிரச்சினை எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலிருந்து விழுப்புரம் வரை—எனக்கும் அந்த விழுப்புரம் தொகுதி இருக்கிற காரணத்தால்—நாங்களும் மாண்புமிகு உறுப்பினரைப் போல அதிலே ஆர்வமாக, நீண்டகாலமாக அதைப்பற்றி வலியுறுத்தி வருகிறோம். அதனுடைய நீளம் 192 கிலோமீட்டராக இருக்கிறது. அதனுடைய Project cost 223 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு அந்த அமைப்புக் கூட்டத்திலேயிருந்து ஒரு clearance எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் செய்வதாகவும் உறுதி அளித்திருக்கிறார்கள்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** தலைவரவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் பரிந்துரையின்பேரில் திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடியிலிருந்து போளூர் வழியாக விழுப்புரம்வரையில் செல்லும் அகல இரயில்ப் பாதை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? அதே சமயத்தில் அரக்கோணத்திலிருந்து, திண்டிவனம், செய்யாறு, வந்தவாசி வழியாகச் செல்கின்ற புதிய இரயில்ப் பாதை அமைக்கும் திட்டமும் எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்திலிருந்து காட்பாடிவரையிலான இரயில்ப் பாதையை அகலப் பாதையாக மாற்ற வேண்டுமென்பதை கொள்கை அளவிலே மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கான நிதியொதுக்கீடு செய்தவுடன் அந்தப் பணிகள் தொடங்கப்படலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் புதிய இரயில் தடங்களை ஏற்படுத்தும்



2001 பிப்ரவரி 1]

நிலையிலோ, நமது மாநிலத்திலே மயிலாடுதுறை-தரங்கம்பாடி-காரைக்கால் இரயில்த் தடத்தை எடுத்துவிட்டார்கள். அந்த இடம் அப்படியே இருக்கின்றது. ஆகவே, அதை மீண்டும் கோரி, மயிலாடுதுறை-தரங்கம்பாடி-காரைக்கால்-நாகூர் என்ற புதிய அகல இரயில்ப் பாதைத் திட்டத்தைக் கொண்டுவந்தால் நாம் முன்னேறுவதற்கு வாய்ப்பாக அமையும். அந்தத் திட்டத்தினை மீண்டும் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கொண்டுவருவதற்கு இந்த அரசால் எதுவும் முடியாது. நீங்கள் கருத்துரு கொடுப்பீர்களேயானால் அதைப் பரிந்துரை செய்கிற அதிகாரம் மட்டுமே மாநில அரசுக்கு இருக்கிறது. அதைச் செய்வதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**148—**

**தொழிற் பயிற்சி நிலையம்**

***37408—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியத்தில் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை ஒன்றியத்தில் அரசினுடைய தொழிற் பயிற்சி நிலையம்

எதுவும் இல்லை. ஆகவே அங்கே அரசின் சார்பாக ஒரு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் இயக்கப்படுகின்ற அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில்தான் 4 இருக்கின்றன. அதிகபட்சமாக, சென்னையிலே 4, அடுத்தபடியாக திருநெல்வேலி மாவட்டத்திலேதான் 4 இருக்கின்றது. தனியார் மூலமாக நடத்தப்படுகின்ற தொழிற் பயிற்சி நிலையங்கள் அங்கே 27 இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள ஒன்றியத்திலேயே ஒரு தனியார் தொழிற் பயிற்சி நிலையமும் இருக்கின்றது. தனியார் தொழிற் பயிற்சி நிலையம் இல்லாத ஒன்றியங்களிலே, தனியார் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அனுமதி அளிக்கலாம் என்று மாண்புமிகு கலைஞர் அவர்கள், அதற்கான உத்தரவையும் பிறப்பித்து, அதற்கான பணிகள் மட்டும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலேகூட கிட்டத்தட்ட 116 ஒன்றியங்களில் 125 I.T.I.-க்கள் இந்த 3 ஆண்டுகளில் தொடங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 149, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**149—**

### சேது சமுத்திரக் கால்வாய்

***31077—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்தில் தமிழக அரசின் பங்கு என்ன என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதை விரைவுபடுத்த தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க மத்திய அரசு சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக முந்தைய காலங்களில் தயாரிக்கப்பட்ட சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கைகள் தற்போதைய வளர்ச்சியடைந்துள்ள தொழில்நுட்பம் மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப இல்லாததால் புதிதாக தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஆய்வு அறிக்கைகள் தயாரிக்க வேண்டியுள்ளது. இந்த ஆய்விற்காக மைய அரசு ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கி உலக அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியுள்ளது. இத்திட்டத்திற்காக சிறிது சிறிதாக நிதி ஒதுக்காமல் இதை 9ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள். மேலும், இத்திட்டத்தின் முனைவராக தமிழக அரசு சார்பில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் நியமிக்கப்பட்டு மத்திய அரசுக்குத் தேவையான ஒத்துழைப்பு நல்கப்பட்டு வருகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் பேரறிஞர் அண்ணா கண்ட கனவு. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசிடம் வற்புறுத்தி 5.00 கோடி ரூபாய் ஆய்வறிக்கைக்காகப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த ஆய்வறிக்கை எப்போது முடிவடையும்? இந்தத் திட்டம் வெற்றியடைந்தால் சரக்கு மற்றும் ஆட்களை ஏற்றி வரக்கூடிய கப்பல் தமிழகத்தின் வழியாக வரும்போது, இதனால் தமிழகத்திற்கு மற்றும் உலக நாடுகளுக்கு இலங்கையைச் சுற்றி வரக்கூடிய காலதாமதம் மற்றும் எரிபொருள் மிச்சம். இது தமிழகத்திற்கு பல கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய திட்டம். இந்தத் திட்டத்தை விரைவிலே முடிக்க நம்முடைய முதல்வர் மூலமாக, தமிழக அரசின் மூலமாக மத்திய அரசுக்குத் தெரிவித்த கடிதத்திற்கு எந்த வடிவிலே பதில் வந்திருக்கிறது என்பதை இந்த அவையின் மூலமாக, உங்கள் மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுசமுத்திரத் திட்டம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கனவு. எனவேதான்

1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், மத்திய அரசிடத்திலே சில திட்டங்களை வலியுறுத்துவதற்கு 'எழுச்சி நாள்' என்று ஒன்றை அறிவித்து அதிலே சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம், காவிரி வட்ட எண்ணெய்த் திட்டம் இவற்றை முன்வைத்து அந்த நிகழ்ச்சி முதலமைச்சர் அண்ணா அவர்களாலேயே நடத்தப்பெற்றது. நம்முடைய மாண்புமிகு பேராசிரியர், கலைஞர் போன்றவர்கள் எல்லாம்கூட அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பல இடங்களிலே பேசினார்கள். முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் சிவகங்கையில் எழுச்சி நாள் பொதுக் கூட்டத்தில் பேசினார்கள் என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். அண்ணா அவர்கள் வலியுறுத்திய, திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்திய அந்த 4 திட்டங்களில் மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன. சேதுசமுத்திரத் திட்டம் ஒன்றுதான் வரவில்லை. எனவேதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இப்போதுள்ள பிரதமர் மாண்புமிகு வாஜ்பேயி அவர்களுக்கு 1998-லே கடிதம் எழுதினார்கள். அதற்கு முன்பே 1997-லே அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது நம்முடைய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு டி.ஜி. வெங்கட்ராமன் அவர்கள் அந்தத் துறையினுடைய பொறுப்பில் இருந்த காரணத்தினால், அவர் ஒரு ஆய்வுக்கு, 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். அது National Environmental Engineering Research Institute (NEERI), Nagpur என்று சொல்லக்கூடிய அந்த நிறுவனத்தின்மூலம் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையும் கொடுக்கப்பட்டது. எனவேதான் மீண்டும் கலைஞர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதிய பிறகு, இப்போது மத்திய அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இப்போதுள்ள, இப்போது இருக்கக்கூடிய சுற்றுப்புறச் சூழ்நிலை, பொருளாதார நிலைமைக்கு ஏற்றாற்போல அதற்கான மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற காரணத்தினால் மத்திய அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக—Global tender—உலகளாவிய டெண்டர்—கேட்கப்பட்டிருக்கிறது. அதனுடைய முடிவு தெரிந்தவுடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இந்தத் திட்டம் நிறைவேறுமானால் கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு வருவதற்கு கொழும்பு நகரைச் சுற்றிக்கொண்டு 755 கடல் மைல்கள்



பயணம் செய்வதறக்குப்பதிலாக 402 கடல் மைல்களில் வர முடியும். கன்னியாகுமரியிலிருந்து விசாகப்பட்டினத்திற்குப் போவதற்கு கொழும்பைச் சுற்றி இப்போது 1014 கடல் மைல்கள் போக வேண்டியிருக்கிறது, இந்தத் திட்டம் நிறைவேறினால் 719 கடல் மைல்களில் போக முடியும். அதுபோல கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தாவிற்குப் போவதற்கு கொழும்பு வழியாக இப்போது 1357 கடல் மைல்கள் ஆகிறது, இந்தத் திட்டம் நிறைவேறினால் 1098 கடல் மைல்களிலே போக முடியும். அதுபோல தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு இப்போது கொழும்பு வழியாக 769 கடல் மைல்கள் ஆகிறது. இந்தத் திட்டம் நிறைவேறினால் 335 கடல் மைல்களில் போக முடியும். அதுபோல தூத்துக்குடியிலிருந்து விசாகப்பட்டினத்திற்கு இப்போது கொழும்பு வழியாக 1028 கடல் மைல்கள். இந்தத் திட்டம் நிறைவேறினால் 652 கடல் மைல்கள். தூத்துக்குடியிலிருந்து கல்கத்தாவிற்கு கொழும்பு வழியாக 1371 கடல் மைல்கள். இந்தத் திட்டம் நிறைவேறினால் 1031 கடல் மைல்கள். இதனால் எரிபொருள் மிச்சப்படுகிறது. செலவு மிச்சப்படுகிறது. தமிழ்நாடு அரசுக்கு, இந்திய அரசுக்கு ஏராளமான அந்நியச் செலாவணி, அதாவது Foreign exchange கிடைக்கும். தொழில் வர்த்தகமும் பெருகும்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் அண்ணா அவர்களாலே வலியுறுத்தப்பட்ட திட்டம், சமீபத்திலே கூட தலைவர் அவர்களும், தாங்களும் கலந்துகொண்டு இதுபற்றி ஒரு கருத்தரங்கம் மதுரையிலே நடந்ததை நான் பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். இந்த சேது சமுத்திரம்தான் இந்தியாவினுடைய சூயஸ்கால்வாய் என்று சொல்லப்படுகின்ற அளவில் இருக்கிறது. இது நிறைவேற்றப்பட்டால் சென்னையிலிருந்து தூத்துக்குடிக்கு கடல் மார்க்கமாகச் செல்லலாம். மேலும், நாங்குனேரியில் டைடல் பார்க் வருகின்ற நேரம். Free Zone ஏற்படுத்தித் தருகின்ற நேரம். 11 ஆம் தேதி தலைவர் திறந்துவைக்க இருக்கிறார். இப்படி தொழில் வளம் பெருகுகின்ற நேரத்தில் இந்த சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை உடனடியாக ஆய்வு செய்து நிறைவேற்ற தமிழக அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். நம்முடைய

[2001 பிப்ரவரி 1

தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இதுகுறித்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். 8-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. ஆனாலும் காலம் கடந்துவிட்டது. இருப்பினும், கொஞ்சம் கொஞ்சமாக, சிறிது சிறிதாக நிதி ஒதுக்குவதற்குப் பதிலாக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதற்காக இந்தத் திட்டத்தை 9-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்றுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியதைத் தொடர்ந்து நானும் ஒரு கடிதத்தை மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு எழுதியிருக்கிறேன். தொடர்ந்து கடல்சார் வாரியமும், தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *150*, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**150—**

### கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்தல்

***36727—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் கூட்டுறவு அச்சகத்தை மேலும் மேம்பாடு செய்து இலாபகரமாக இயக்கிட, குறிப்பாக நுகர்பொருள் வாணிபக் கழகம், ஏனைய அரசு நிறுவனங்கள், அனைத்து உள்ளாட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமான அச்சடிக்கும் பணியினைக் கூட்டுறவு அச்சகத்தில் அச்சடிக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2001 பிப்ரவரி 1]

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன். அரசால் அண்மையில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி ஒளிவின்மை சட்டம் 1998-ல், பிரிவு 16-டி மற்றும் இதற்கான விதிகளில், பிரிவு 33-ன்படி ரூபாய் இரண்டு இலட்சத்திற்குக் குறைவான பணிகளில் ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றாமல் நேரடியாகச் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதால், தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு அச்சகம், தஞ்சாவூரிலுள்ள அரசு, அரசு சார்பு நிறுவன அலுவலகங்களை அணுகி ரூபாய் இரண்டு இலட்சத்திற்குக் குறைவான அச்சுப் பணிகளை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளலாம். இதற்கென தனி அரசு உத்தரவு தேவையில்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவே நாட்டுயர்வு என்ற நடைமுறையைப் பின்பற்றுகிறது இந்த அரசு. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்கள் நடைபெற்று தலைவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னால் அதை நவீனமயமாக்க வேண்டும், பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறுகின்ற ஓர் அச்சகமாக ஆக்க வேண்டும் என்ற எண்ணம் இப்போது வந்திருக்கிறது. அந்த வகையிலே நான் முன்பே இந்தச் சபையிலே கேட்டிருக்கிறேன். அப்போது நவீனமயமாக்குவது குறித்து முன்மொழிவு அனுப்பினால் அனுமதி அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலே முன்மொழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அதை நவீனப்படுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். அதேசமயத்தில் அது நலிவடையாமல் இருப்பதற்கு—G.O. போட முடியாது—மற்ற துறைகள் இந்த அச்சகத்தில் அச்சடித்தால் இந்த அச்சகம் உருப்படும் என்கின்ற வகையில் அந்த அனுமதியை அளித்து, மற்ற இலாகாக்கள் கூட்டுறவு அச்சகத்தை அணுகி—இந்த அச்சகத்தில் அச்சிடுவதற்கான வழிவகைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அரசு சார்பு நிறுவனங்கள் ஏற்கெனவே கூட்டுறவு என்று சொன்னால் விலை அதிகமாக இருக்கிறது, தனியாரிடம் சென்று அச்சிடும்போது அல்லது வேறு பொருள்களை வாங்குகின்றபோது தரமான பொருளாகவும் இருக்கிறது, விலையும் குறைவாக இருக்கிறது என்று பல இடங்களிலேயிருந்து கருத்துக்களைத்

[2001 பிப்ரவரி 1

தெரிவித்திருக்கின்றன. ஒரு காலத்திலே கூட்டுறவு நிறுவனங்களிலே வாங்கினால் பொருள்கள் சரியாக இருக்கும் என்ற நிலை இருந்தது. அப்போது அரசு ஆணையிட்டு கூட்டுறவுத் துறையிலேதான் வாங்க வேண்டுமென்று சொல்லியிருந்தது. இன்றைக்கு கூட்டுறவுத் துறையாக இருந்தாலும்கூட அது தனியாரோடு போட்டி போட்டுக்கொண்டு அந்த அளவுக்கு விலை குறைவாகவும் நல்ல பொருளாகவும் கொடுக்க வேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்தோடும், நுகர்வோர் பலன் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும்தான் அரசு ஒப்பந்தப்புள்ளி முறையிலேயே இருக்கலாம் என்ற ஒரு முடிவை எடுத்திருக்கிறது. இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலுள்ள அச்சகங்களிலே பல்வேறு அரசு நிறுவனங்கள் அச்சடிக்க வேண்டுமென்று சொல்வோமானால், அரசு நிறுவனம்தானே, நம்மிடம்தானே தருகிறார்கள் என்று அவர்கள் போலித்தனமாக எந்த வேலையும் செய்யாமல் இருக்கின்ற ஒரு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதனால் இருக்கின்ற வியாபாரப் போட்டியிலே அவர்களும் போட்டி போட்டுத்தான் முன்னேற வேண்டும். அந்த நிலைதான் எங்களுடைய நிலை. ஆனால் அதேநேரத்தில் கூட்டுறவு அச்சகங்கள் நவீனப்படுத்தப்பட வேண்டும் என்கிறபோது, அதிகமான வேலைப்பளு இருக்குமானால், அதற்கு முன்மொழிவு அளிக்கப்படுமானால், நிச்சயமாக தஞ்சாவூர் கூட்டுறவு அச்சகத்தை நவீனப்படுத்துவதற்கு உரிய நிதியுதவி அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 151, திரு நா. பெரியசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**151—**

**ஆக்கிரமிப்பை அகற்றுதல்**

***27987—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெருந்துறை கிராமத்தில் குயவன்குட்டை கசிவுநீர்த் தேக்கத்தின் வடிகால் பகுதிகளில் ஆக்கிரமிப்பு உள்ளதை அரசு அறியுமா?



2001 பிப்ரவரி 1]

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்றி வடிகால் அமைய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி குட்டையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், பேரூராட்சி மூலம் வடிகால் சாக்கடை அமைக்கவும் நடவடிக்கைகள் தொடங்கப்பெற்றுள்ளன.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற குயவன்குட்டைப் பகுதி நகரத்தின் மையப் பகுதியிலே இருக்கக்கூடிய மிக முக்கியமான பகுதி. கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகின்ற இந்தப் பிரச்சினையில், அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து, அதற்கென்று ஒரு சிறப்பு நிதி ஒதுக்கி, உடனடியாக நிறைவேற்றித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த நீர்ப்பிடிப்பான சாக்கடைப் பகுதியிலே 22 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். இதிலே 15 பேருக்கு அந்தப் பகுதியிலேயே, நிலம் சொந்தமாக இருக்கிறது. மீதி 7 பேருக்குத்தான் மாற்று இடம் தர வேண்டும். ஆகையினாலே ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலே அரசு உறுதியாக இருக்கிறது. அதேநேரத்தில் வடிகால் சாக்கடை அமைத்து, அந்தச் சாக்கடைக் கழிவுநீரை அகற்றுகின்ற முயற்சியில் இப்போது அரசு ஈடுபட்டிருக்கிறது. ஏறத்தாழ ஒன்பதே முக்கால் இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த நிதியொதுக்கீடு முடிவடைந்ததற்குப் பிறகு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பெற்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிற எண்ணம் நிறைவேறும்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடனே செய்கிறேன் என்று அமைச்சர் சொல்லிவிட்டாரே. அப்புறம், இரண்டாவது கேள்வி கேட்க வேண்டும் என்று கேட்கிறீர்களா?

[2001 பிப்ரவரி 1

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தொடர்பான இன்னொரு கேள்வி. அந்தக் கழிவுநீர்க் குட்டையில் உள் பகுதியிலே இருக்கிற ஆக்கிரமிப்பு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கழிவுநீர் வழிந்தோடக்கூடிய வடிகால் பகுதியும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. வடிகால் பகுதி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிற காரணத்தினால்தான் அங்கு நீர் தேங்கக்கூடிய அபாயமே ஏற்பட்டது. அந்த ஆக்கிரமிப்பையும் அகற்றி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Classification of land -- நில மாற்றத்தில் அது நீர்ப்பிடிப்பு நிலமாக இருக்கிறது. எனவே யாருமே ஆக்கிரமிப்பு செய்ய முடியாது. ஏற்கெனவே குடியிருப்புகள் இருந்தாலும், அதை வரன்முறைப் படுத்தவும்-regularise-முடியாது. ஆகையினாலே, நிச்சயமாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**152—**

## பட்டா வழங்குதல்

***30787—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், விஜயமாநகரம் கிராமத்தில் வசிக்கும் குடும்பத்திற்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட நிலமானது வருவாய்த் துறையில் சேர்க்கப்பட்டும், தரிசாகவே கணக்கிடப்படுவதால் அடிக்கடி ஏற்படும் பிரச்சினையைத் தவிர்த்திட நில உடமைதாரர்களுக்குப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2001 பிப்ரவரி 1]

(அ) மற்றும் (ஆ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு நில எடுப்பு செய்ததால், இடம் பெயர்ந்து பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு விருத்தாசலம் வட்டம், பரூர் கிராமம் (விஜயமாநகரம்) மற்றும் புதுக்கூரைப்பேட்டை கிராமங்களில் வனப் பகுதி நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்குப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வருடக்கணக்கான பிரச்சினை அல்ல; இது அரை நூற்றாண்டுப் பிரச்சினை. நான் பிறப்பதற்கு முன்பாக உருவாக்கப்பட்ட கிராமங்கள் இவை. இயற்கையான கிராமங்கள் அல்ல. 1952-ஆம் ஆண்டு—நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் உருவாக்கப்பட்ட நேரத்தில் புது வேளாங்குளம், இளவரசம்பட்டு, வெண்ணங்குழி, ஆதாண்டார் கொல்லை, வளையசெட்டிக்குப்பம், கோவில்குப்பம் மற்றும் புதுக்கூரைப்பேட்டை ஆகிய கிராமங்களில்தான் நிலக்கரி இருக்கிறது; எனவே அந்தக் கிராமங்களை ஒப்படையுங்கள் என்று சொன்ன நேரத்தில் அவர்கள் ஒப்படைத்துவிட்டார்கள். அவர்களுக்கு அரசாங்கம் மாற்று இடம் கொடுத்தது. வீடு கொடுத்தது. அந்த மக்கள்தான் இந்தப் பட்டாவை 1952-லேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது இப்போது புஞ்சைத் தரிசாக இருக்கிறது. யார் வேண்டுமானாலும் அனுபவ ரீதியாக வரி செலுத்திக்கொண்டு, யார் வேண்டுமானாலும் யாருக்கும் கிரயம் கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்படக்கூடிய காரணத்தினால், சட்ட-ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. எனவே இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 20 சர்வேயர்களை நியமனம் செய்து, அந்தந்த ஊருக்கு தனித்தனியாக 10 சர்வேயர்களைப் பிரித்து, ஒரு சர்வேயருக்கு 500 ஏக்கர் என்று ஒதுக்கிக் கொடுத்து, ஒரு நல்ல தீர்வைக் காண்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். விஜயமாநகரம் கிராமத்தில் 2500 ஏக்கர் பட்டா கொடுக்க வேண்டும். புதுக்கூரைப்பேட்டை கிராமத்தில் 1500 ஏக்கருக்குப் பட்டா கொடுக்க வேண்டும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆலோசனையையோ அல்லது அரசுக்கு உகந்த ஆலோசனையையோ பெற்று, விரைந்து பட்டா கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958-62 ஆம் ஆண்டு வாக்கிலே நெய்வேலி பழுப்பு நிலக்கரி

[2001 பிப்ரவரி 1

நிறுவனத்திற்கு நில எடுப்பு செய்யப்பெற்றது. இந்த நிலஎடுப்பு செய்யப்பட்டதன் காரணமாக, அந்தப் பகுதியைச் சார்ந்த, உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்த மக்கள் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று சொன்னாலும், அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கான ஏற்பாட்டிலே வனத் துறைப் பகுதியில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வருவாய்த் துறையிலேயும் அது நஞ்சை தரிசு நிலமாக—Conversion—மாற்றப்பட்டுவிட்டது. அதில் எல்லாம் இப்போது பிரச்சினை இல்லை. இந்தக் குறிப்பிட்ட பகுதியிலே 849 பேர் possession and enjoyment—அனுபோகத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதிலே சிலர் ஒரு ஏக்கரிலிருந்து 3 ஏக்கர்வரைக்கும், சிலர் 4 ஏக்கரிலிருந்து 5 ஏக்கர்வரைக்கும் வைத்திருக்கிறார்கள். எனவே அந்த மொத்த விஸ்தீரண நிலப் பகுதியிலே இருக்கக்கூடிய 849 பேருக்கும் சமபங்கீடாகக் கொடுக்க வேண்டும். இதற்கு கிராமக் கணக்கு மாற்றப்பட வேண்டும். 10(1) சிட்டா, அதிலே சேர்க்கப்பட வேண்டும். இந்தக் காரியங்கள் அந்தக் காலத்திலிருந்து இதுவரைக்கும் செய்யப்படாமல் தொடர்ந்து நீடித்துக்கொண்டு வருகின்றன. கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினருடைய இந்த மனுவின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கின்ற முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கிராமக் கணக்கு தயாரிக்கப்பட்டு, 10(1) சிட்டாவிலே இணைக்கப்பட்டு, அதற்கான பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, விரைவிலே பட்டாக்கள் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஓரளவுதான் சம்பந்தம் உள்ள கேள்வி. நெய்வேலி இரண்டாம் நிலக்கரிச் சுரங்கத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு இன்னும் 30 கோடி ரூபாய் நஷ்ட ஈட்டுத் தொகை தர வேண்டியிருக்கிறது. மாநில அரசாங்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை அமைத்து, அந்தக் கமிட்டி நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தோடு பேசி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆயினும்கூட, இன்னும் 30 கோடி ரூபாய், அந்த ஏழை மக்களுக்கு வழங்கப்படவில்லை. உடனடியாக மாநில அரசாங்கம் இதிலே தலையிட்டு, அந்தப் பணத்தை வாங்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் குறிப்பிட்டதைப்



)01 பிப்ரவரி 1]

பால அந்த நிதியைப் பெற்றுத்தர வேண்டுமென்பதிலே தமிழக மதல்வரும், இந்த அரசும் அக்கறையோடு இருக்கிறது. ஆனால், துகுறித்து ஒரு தனிக் கேள்வி போடாமல் திடீரென்று இந்தக் கேள்வியைப் போட்டிருக்கின்ற காரணத்தாலே, இதுகுறித்த பிரச்சினையிலே நிலவரங்கள் என்ன என்பதை மாண்புமிகு றுப்பினர்களுக்குத் தெரிவிக்க முடியாமல் இருக்கிறேன். எனவே அவர் னிக் கேள்வி போடுவாரேயானால், தகவல்களைத் தயாரித்து, அரசு ரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் மிக நீண்ட கேள்வியைக் கேட்டுவிட்டீர்களே? இப்பொழுது என்ன திரும்பவும் கேட்கப் போகிறீர்கள்?

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். இந்தச் சட்டமன்றத்திலே, என்னுடைய கன்னிப்பேச்சிலே, இந்தப் பிரச்சினையைப் பேசிட, மாண்புமிகு முதல்வர் அவர்கள், High Level கமிட்டியை நியமனம் செய்தார்கள். அதனுடைய அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் அதிலே உறுப்பினர். நாங்கள் எல்லாம் சேர்ந்து பேசி, இப்பொழுது 50 கோடி ரூபாய் என்.எல்.சி. நிறுவனத்தால் வழங்கப்பட்டுவிட்டது. 300 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மீதித் தொகை 30 கோடியும் 700 பேருக்கு வேலைவாய்ப்பும்தான் வழங்கப்படவில்லையென்பதை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அதை நம்முடைய தமிழ்நாடு அரசு விரைந்து செய்வதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகிரி அவர்கள் உறுப்பினராக இருந்தும் சொல்லத் தவறிய சில பகுதிகளை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதற்காக நன்றி. அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 153, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2001 பிப்ரவரி 1

153—

**நீதிமன்றத்திற்குக் கட்டடம்**

***29514—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரில் நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் அரசு சொந்தக் கட்டடம் கட்டித் தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரில் நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கான இடம் இன்னும் தேர்வு செய்யப்படாததால், தற்போது நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரும் வாய்ப்பு எழவில்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரிலுள்ள நடுவர் நீதிமன்றம் சார்-பதிவாளர் அலுவலகத்தின் வளாகத்திலேயும், உரிமையியல் நீதிமன்றம் அங்கிருந்து முக்கால் கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மதுரபள்ளி தெருவிலேயும் அமைந்து உள்ளது. ஆனால் 11-10-1999 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரக்கோணம் நகரத்தினுடைய மேற்குப் பகுதியிலே பொறியியல் தொழிற்சாலைக்கு அருகாமையிலுள்ள, அரக்கோணம் நகரத்திற்கு அருகாமையிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான சர்வே எண் 418, 419, 420 ஆகிய அம்மனூர் ஊராட்சிக்குள் அடங்கியுள்ள புறம்போக்கு நிலத்திலே இடம் ஒதுக்கலாம் என்றும், அதற்குரிய கட்டணத் தொகை எவ்வளவு என்பதை நிர்ணயித்து, அதை ஆய்வு செய்து உடனடியாக அறிக்கை அனுப்ப வேண்டுமென்று D.R.O. அவர்களுக்கும், வட்டாட்சித் தலைவருக்கும் அனுப்பப்பட்டது. இவற்றையெல்லாம் மாவட்ட நீதிபதிகூட ஆய்வு செய்து கொடுக்கலாம் என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். எனவே அதற்குரிய இடத்தை உடனடியாகத் தேர்வு செய்து எல்லா இடங்களிலும் அழகான நீதிமன்ற வளாகங்கள் கட்டும்போது, அரக்கோணம் நகரத்திலே அந்த இடம்கூட கொடுக்கப்படும் நிலைமையில் இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து அதற்கான கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2001 பிப்ரவரி 1]

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்திலே நீதிமன்றக் கட்டடத்திற்காக ஏற்கெனவே 62 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாயிலே திட்டமிடப்பட்டு இடம் தேர்வு செய்யப்படாத காரணத்தால் கடந்த காலத்திலே இது கைவிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் 1997-ல் அதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உயர்நீதிமன்றத்திலேயிருந்து இதற்கான செயற்குறிப்பு எதுவும் இன்னும் அரசுக்கு வரவில்லை. எவ்வளவு இடம், எவ்வளவு தொகை, எவ்வளவு செலவினம், என்பதுபற்றிய விவரங்கள் இன்னும் அரசுக்கு வரவில்லை. அவை வந்தவுடன் நிச்சயமாக இது அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

154—

**நெசவாளர்களுக்கு வீடு**

***39097—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், குடியாத்தம், சத்துவாச்சாரி பகுதிகளில் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் சத்துவாச்சாரி, குடியாத்தம், பனப்பாக்கம், விளாம்பாக்கம் போன்ற பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் வீடு இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திலும் வீடு கட்டுவதற்காக பணத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வைத்துக்கொண்டிருக்கக்கூடிய பணத்தை எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு வழங்கி, வீடு கட்டிக் கொடுப்பதிலே என்ன சிரமம் அரசுக்கு இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட துறை மூலமாக நிலங்களைக் கையகப்படுத்தி இருக்கிறார்கள். இந்தத் துறையில் வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய பணத்தை உடனடியாக அவர்களுக்குக் கொடுத்து, சத்துவாச்சாரி, குடியாத்தம், பனப்பாக்கம், விளாம்பாக்கம் ஆகிய 4 இடங்களிலும் குறைந்தபட்சம் 4,000 வீடுகளையாவது எங்களுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்குக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் 4 பகுதிகளுக்கும் 4,000 வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்கிறார். 4,000 வீடுகளுக்கு அவர் இடம் அளிக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால், இதுவரை யாரும் இதுகுறித்து விண்ணப்பிக்காத இந்த நிலையில், இடத்தோடு விண்ணப்பிக்கின்ற அந்தப் பணியை நம்முடைய ஞானசேகரன் அவர்கள் செய்து கொடுத்தால், நிச்சயம் 4,000 வீடுகள் கட்டுவதற்குரிய பணத்தை மாநில, மத்திய அரசின் உதவியோடு பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உடனே இப்படிக் குதித்தால் என்ன அர்த்தம்? திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கம் மூலமும் தனியார் மூலமும் நெசவு செய்யும் தொழிலாளர்கள் 75 சதவீதம் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். எனவே master weaver அமைத்துள்ள கூட்டுறவுச் சங்கம் மற்றும் தனியார் துறை தொழிலகத்தில் வேலை செய்யும் அனைத்து ஏழை கைத்தறி நெசவாளர்களுக்கும் தறியுடன் கூடிய வீடு கட்டிக் கொடுக்க 50,000 ரூபாய் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி கட்டப்படுகின்ற வீடுகள் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்திலே யார் யார் அந்தப் பணியைச் செய்து கொண்டு இருக்கிறார்களோ, அந்த நெசவாளர்களுக்குத்தான் இதுவரை பயன்பட்டு வருகிறது. தனியாரிடம் பணிபுரிகின்ற நெசவாளர்கள் அப்படிப்பட்ட கோரிக்கையை வைத்து இன்று நமது வாரியத்தின் மூலம் வேறு சில உதவிகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வீடு கட்டுவதைப் பொறுத்தவரையில் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்குத்தான் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற, கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்கெனவே அங்கத்தினராகச் சேர்ந்து அதிலே தொழிலை செய்துகொண்டு இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு அரசாங்கம் எவ்வளவு ரூபாய் கடனாக வீடு கட்டுவதற்குக் கொடுக்கிறது? எவ்வளவு ரூபாய் மானியம் அளிக்கிறது? பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக நிலம் கையகப்படுத்த நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் நிறைய பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே நெசவாளர்களுக்குச் சொந்தமாக இடம் இல்லை. அவர்களில் சிலர் வாடகை வீட்டிலேயும் சிலர் மரத்தடியிலேயும்கூட தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்வு அளிக்கின்ற முகத்தான், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக நிலத்தைக் கையகப்படுத்தி, அவர்களுக்குப் பட்டா கொடுத்து, உடனடியாக இந்தத் திட்டத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நெசவாளர்களுக்கு மானியம் அளிக்கவோ அல்லது அவர்கள் கடன் பெற உதவியைச் செய்யவோ வாய்ப்பு இல்லை. கூட்டுறவு நெசவாளர் சங்கத்திலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு நகர்ப்புறமாக இருந்தால் மத்திய அரசினுடைய மானியம் ரூ. 20,000-மும் மாநில அரசினுடைய மானியம் ரூ. 7,000-மும்,

[2001 பிப்ரவரி 1

ஹட்கோ கடன் ரூ. 40,000-மும், பயன்பெறுவோர் பங்கு ரூ. 5,000-மும் ஆக 72,000 ரூபாய் வீடு கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே கிராமப்புறத்திலே மத்திய அரசு மானியம் ரூ. 18,000, மாநில அரசினுடைய மானியம் ரூ. 7,000, ஹட்கோவினுடைய கடன் ரூ. 40,000, பயன் பெறுவோர் பங்கு ரூ. 3,000 ஆக 68,000 ரூபாய் அளிக்கப்படுகிறது. தனிப்பட்ட நெசவாளர்களுக்கும் இந்த வீடு கட்டும் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றால் மேலும் சில விதிமுறைகள், சட்டங்கள் இவற்றையெல்லாம் உருவாக்கினால்தான் அந்தப் பணியைச் செய்ய இயலும். இதற்குப் பதிலாக தனியாரிடம் நெசவு செய்கின்ற நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாக சேர்ந்துகொள்ளவோ அல்லது விருப்பம் இருந்தால் தனியாக ஒரு சங்கத்தை அவர்கள் உருவாக்கிக்கொள்ளவோ முயன்றால், அவர்களுக்கு 365 நாட்களுக்கும் கொடுக்கக்கூடிய உற்பத்தித் திட்டம் எங்களிடம் இருக்கின்ற இந்த வேளையில் தனியாரைப் பற்றி கவலைப்படாமல் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தினுடைய அமைப்பிற்குள்ளேயே வரக்கூடிய அந்த அணுகுமுறையையும் இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது. அந்த ஆலோசனையின் பேரிலே நெசவாளர்கள் சங்கத்தை உருவாக்கி, உற்பத்திக்கும் நல்ல திட்டத்தை நாங்கள் தந்து அவர்களுக்குத் தேவையான அனைத்து சலுகைகளையும் தரக்கூடிய வாய்ப்பை உருவாக்குகின்ற திட்டத்தைத்தான் இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 155, திரு. ஆ.செ. மணிக்கண்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**155—**

**பத்திரப்பதிவு அலுவலகம்**

***36998—திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) களமருதூர் மையப் பகுதியில் சார் பதிவாளர் அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2001 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) களமருதூர் மையப் பகுதியில் புதியதாக சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர், உளுந்தூர்பேட்டை, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியப் பகுதிகளிலிருந்து தொலைதூரம் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால், 3 ஒன்றியங்களின் மையத்தில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அருகில் இருக்கக்கூடிய ஆத்தூர், ஆதனூர் மற்றும் களமருதூர் ஆகிய 3 கிராமங்களிலிருந்தும் உளுந்தூர்பேட்டைக்குச் செல்வதற்கு பஸ் வசதிகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால் குறிப்பாக 2,000 ஆவணங்கள் பதிவானால்தான் ஒரு புதிய பதிவுத் துறை அலுவலகம் திறப்பதற்கு சாத்தியமாக இருக்கும். 3 கிராமங்களைச் சேர்த்து மொத்தம் ஓர் ஆண்டுக்கு ஆவணங்கள் பதிவு 250 தான் அங்கே நடைபெறுகின்றன. 2,000 ஆவணங்கள் பதிவில்லாத சூழ்நிலையில், புதிய அலுவலகம் திறந்தால் வருவாயைவிட செலவுதான் கூடுதலாக இருக்கும் என்று எனக்குக் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இப்போது சாத்தியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 156, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**156—**

**முருங்கைக்காய் பவுடர்**

***39047—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் முருங்கைக்காயிலிருந்து பவுடர் செய்யவும், ஆயில் தயாரிக்கவும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் முருங்கைக்காயிலிருந்து பவுடர் செய்யவும், ஆயில் தயாரிக்கவும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதியிலே, 567 கிராமங்களை உள்ளடக்கிய 3 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட அந்தப் பகுதியிலே ஏராளமான முருங்கைக்காய்கள் விளைந்துகொண்டு இருக்கின்றன. கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலேகூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலே இதுகுறித்து நான் பேசியபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட நகைச்சுவையாக பாக்கியராஜ் அவர்களைக் கொண்டுவந்து அங்கே முருங்கைக்காய் தொழிற்சாலை திறக்கலாம் என்றுகூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் அங்கே நல்ல மண் வளம் இருக்கின்ற காரணத்தினால், 2 அடி முதல் 2½ அடி நீளம் வளரக்கூடிய நல்ல முருங்கைக்காய்களை அங்கே அதிகமாக விளைவிக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதி மக்கள் அவற்றை விற்பனை செய்வதற்காக சந்தையில் வாரந்தோறும் எடுத்துச் சென்று விற்றுக்கொண்டிருக்கிறார்கள். வாரம் ஒருநாள் ஒவ்வொரு சந்தை என்று வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய வியாபாரிகள் லாரிக் கணக்கிலே, பல இலட்சக்கணக்கான ரூபாயைக் கொண்டுவந்து வாங்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆக, அந்தப் பகுதியிலே முருங்கைக்காய் மட்டுமல்ல முருங்கைக் கீரைகூட விற்பனை அதிகம் ஆகின்றது. முருங்கைக்காய் B.P.-க்கு மிகச் சிறந்தது என சித்த மருத்துவத்திலே சொல்கின்றார்கள். இந்நிலையிலே முருங்கைக்காய் பவுடரிலிருந்து B.P.-க்கான Capsule தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன். ஆக, இந்த அளவிலே முருங்கைக்காய் என்பது அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். எப்படி தஞ்சை மாவட்டம் நெல் களஞ்சியமாக இருக்கின்றதோ அதேபோன்று அரவக்குறிச்சிப் பகுதியிலே முருங்கைக்காய் என்பது



விவசாயிகளுடைய முக்கிய பயிராக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலனை செய்து—எங்கள் பகுதியிலே வேறு எந்தத் தொழிற்சாலையும் இல்லை—தொழிற்சாலை இல்லாத இடத்திலே தொழிற்சாலையை உருவாக்குவதற்கும், அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கும், விவசாயிகளுக்காக முருங்கைக்காய் பவுடர் செய்யும் தொழிற்சாலையை, கோவை, திருச்சி, மதுரை போன்ற Agriculture, Horticulture Research Station-னிலிருந்து அதை ஆய்வு செய்து...

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன கேள்வி? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொள்கை அளவிலே எந்தத் தொழிற்சாலையும் ஆரம்பிப்பது இல்லை என்பதை நான் பலமுறை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் நிச்சயமாக முட்டையிலிருந்து பவுடர் எடுப்பதிலே எப்படி தனியாரும் பொதுத் துறை நிறுவனமும் சேர்ந்து ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கின்றார்களோ, அதைப்போலச் செய்யலாம். அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல பாக்கியராஜ் திரைப்படத்திலே முருங்கைக்காயினுடைய பலன் மற்றும் இன்னும் அதில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன என்பதை மக்கள் தெரிந்துகொண்ட காரணத்தினால், மக்கள் சாப்பிடுவதற்கே முருங்கைக்காய் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாட்டிலே தொழிற்சாலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 4 கேள்விகளைச் சேர்த்துப் பேசிவிட்டீர்கள். திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் இஸ்மாயில் அவர்கள் எப்போது பார்த்தாலும் முருங்கைக்காய், முருங்கைக்காய் என்றே சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அவருக்கு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. அவர் வெளியூர் போனால் முருங்கைக்காய் சாப்பிட முடியவில்லை; பவுடர் ஆக வேறு சாப்பிட வேண்டுமென்று

கேட்கிறார்கள். அப்படி அதிலே என்னதான் விசேஷம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டப்பேரவை சக உறுப்பினர் அவர்கள் முருங்கைக்காய் குறித்து சொல்லியிருக்கின்றார்கள். முருங்கைக்காய் தமிழகத்தில் மட்டுமல்ல, சிலோன், சிங்கப்பூர், ஹாங்காங் போன்ற வெளிநாடுகளுக்குக்கூட ஆகாய விமானம் மூலமாக ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு இன்றையதினம் அதை வெளிநாட்டு வியாபாரிகள் வந்து வாங்கிச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தகவல் சொல்லப்பட்டு 3 ஊராட்சி ஒன்றியங்களிலேயிருந்தும் புள்ளிவிவரங்கள் -- எத்தனை ஏக்கரா பரப்பளவில் இந்த முருங்கைக்காய் விளைகின்றது. அதனால் எத்தனை விவசாயிகள் பயனடைகிறார்கள் என்பது குறித்த புள்ளிவிவரங்களைக் கேட்டிருக்கின்றார்கள். அருள்கூர்ந்து தொழிற்சாலை உருவாக்குகின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் விரிவாகச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் சொன்னதைப்போல, முருங்கைக்காய் சாப்பிடுவதால் என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைப் பத்திரிகையிலும், திரைப்படங்களிலும் பார்த்திருக்கின்றோம். அவர் சாப்பிட்டுத் தெரிவித்தால் அதனுடைய அடிப்படையிலே எதிர்காலத்திலே இதுகுறித்து முடிவு எடுக்கலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக்காயினுடைய அவசியத்தை வயதானவர்கள்தான் புரிந்துகொள்ள முடியும். (பலத்த சிரிப்பு) இப்போது நிறைய மாண்புமிகு



உறுப்பினர் பெருமக்களெல்லாம் வெளிநாடுகளிலேயிருந்து வரும் வயாகரா போன்ற மாத்திரைகளை வாங்கிச் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) ஆகவே உள்ளூரிலேயே மிக எளிதாக, இயற்கையாகக் கிடைக்கின்ற, உடம்பிற்குக் கெடுதல் இல்லாத முருங்கைக்காயைப்பற்றி சித்த வைத்தியத்திலே நிறையச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான் நம்முடைய சக சட்டமன்ற உறுப்பினர் கேட்ட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தனியாக வகுப்பு எடுங்கள். இது என்ன கேள்வியா?

**திரு. ப. மோகன் கந்தசாமி:** ஆகவே உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல ஒரு தொழிற்சாலையை அமைத்து அதனை ஆய்வு செய்வதுகூட நலம் என்று நினைக்கிறேன். ஆகவே அதுபோன்று ஒரு தொழிற்சாலையை அமைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் முருங்கைக்காயைச் சாப்பிடுவதால் என்னென்ன பலன்கள் ஏற்படுகின்றன என்பதை முழுமையாக உணர்ந்து இந்த அவைக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே அதனுடைய பலனை எல்லோரும் அனுபவிக்கலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக்காயால் என்ன பலனோ தெரியவில்லை. ஆனால் முருங்கைக்காயினுடைய விலையை இங்கே பேசிய பேச்சின் மூலமாக மார்க்கெட்டிலே ஏற்றிவிட்டார்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157, திரு. செங்கை சிவம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**157—**

### சினிமா வாரியம்

***25523—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் நலிவடைந்து வரும் தமிழ் சினிமாவைக் காப்பாற்ற தனி வாரியம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ் சினிமாவைக் காப்பாற்றுவதற்காகத் தனி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*முற்பகல் 10-25*

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் சினிமா நலிவுறுவதற்குக் காரணமாக உள்ள திருட்டு வீடியோக்களைத் தடுக்க நம்முடைய அரசு எடுக்கும் நடவடிக்கைகள் என்ன? யாரேனும் தண்டிக்கப்பட்டுள்ளார்களா? மத்திய அரசு சினிமாத் துறையைப் பொதுப் பட்டியலில் சேர்க்க முயற்சிக்கிறது. இதன்மீது அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடியோ திருட்டைக் கட்டுப்படுத்துவதற்காக மாநில காவல் துறை குற்றப் பிரிவு இயக்குநருடைய தலைமையில் ஒரு தனிப் பிரிவுப் படை அமைக்கப்பட்டு இந்தக் குற்றங்கள் எல்லாம் இப்போது தீவிரமாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. சமீபகாலத்தில் படத் தயாரிப்பாளர்களும், நடிகர்களும் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வீடியோத் திருட்டை ஒழிப்பதற்காக மிகத் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் உள்ளூர் காவல் துறையிலே புகார் செய்யலாம் என்று சொல்லப்பட்டு, தனிப் பிரிவுப் படை மூலம் அவையெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்த ஆண்டு வீடியோ குற்றத் தடுப்பு காரணமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளுடைய எண்ணிக்கை தனிப் பிரிவு மூலமாக 249-ம், உள்ளூர் காவல் துறையின் மூலமாக 500-ம் ஆக 749 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை மொத்தம் 822 பேர். குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களுடைய மதிப்பு ரூ. 3 கோடியே 74 இலட்சத்து 7 ஆயிரத்து





850 ஆகும். அது மாத்திரம் அல்லாமல் திரைப்படத் துறையைப் பொதுப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று மத்திய அரசு விரும்பினாலும், 21 ஆம் தேதி நடைபெற்ற இந்திய செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் தமிழக அரசின் சார்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்கின்ற வகையில் திரைப்படத் துறையைப் பொதுப் பட்டியலில் சேர்க்கக் கூடாது என்று நாம் வலியுறுத்தி இருக்கிறோம். அதேபோல, பல மாநிலங்களும் வலியுறுத்தி இருக்கின்றன. இவை குறித்து ஆராய்வதற்காக 9 மாநில செய்தித் துறை அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழு மத்திய செய்தித் துறை அமைச்சருடைய தலைமையில் அமைக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 158, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**158—**

### முள்ளுக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை

***27732—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதி, முள்ளுக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆண்டிமடம் தொகுதியில், முள்ளுக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைய அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதியிலே உள்ள முள்ளுக்குறிச்சி

[2001 பிப்ரவரி 1

பகுதிக்குப் பக்கத்திலே 10 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேலேதான் ஆர்.எஸ். மாத்தூரிலே கால்நடை மருந்தகம் இருக்கிறது. இந்த முள்ளுக்குறிச்சியைச் சுற்றியுள்ள பகுதிகளிலே கால்நடைகளுடைய எண்ணிக்கை அதிகம். அண்மையிலேகூட பல தொற்று நோய்களுக்கு ஆளாகி ஆடு, மாடுகள், கோழிகள் முதலானவை எல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்தப் பகுதியிலே அந்தக் கால்நடைகளுக்கான ஒரு மருத்துவ முகாம்கூட அரசு நடத்தினால் அது அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பெருமக்கள் பலனடைவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். முள்ளுக்குறிச்சிப் பகுதியிலேயிருந்து ஆர். எஸ். மாத்தூருக்கு வருவதற்கு சரியான சாலை வசதிகள் கிடையாது. ஆகவே, முள்ளுக்குறிச்சியிலே வருங்காலத்திலாவது கால்நடை மருந்தகம் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் முள்ளுக்குறிச்சி, ஆண்டிமடம் தொகுதியிலே வருகிறது. இங்கு கால்நடைக் கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ தற்போது இல்லை. இந்த நிதியாண்டில், 2000-2001-ல் புதிய கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை தொடங்குவதற்கு அரசின் சார்பில் நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. பொதுவாக, ஒரு இடத்தில் கால்நடைக் கிளை நிலையமோ அல்லது கால்நடை மருந்தகமோ ஏற்கெனவே செயல்பட்டு வந்தால் அந்தக் கால்நடை மருந்தகத்திற்கு சிகிச்சைக்கு வருகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு பகுதி-2 திட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் பரிசீலிக்கப்பட்டு கால்நடைக் கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகவும், கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகின்றன. வினாவில் குறிப்பிடப்படுகின்ற முள்ளுக்குறிச்சி என்ற ஊரில் கால்நடைக் கிளை நிலையமே இல்லாத நிலையில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறு இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த முள்ளுக்குறிச்சியில் 8-1-2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டம் நடைபெற்று அங்கு 1,907 கால்நடைகள் பயன்பெற்றிருக்கின்றன. இதுபோல ஆண்டிமடம் தொகுதியில் 5 கால்நடை மருந்தகங்களும், 5 கால்நடைக் கிளை நிலையங்களும், அதற்கு 5 பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 159, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**159—**

## திருநீர்மலையில் கால்நடை மருத்துவமனை

***33421—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, திருநீர்மலை பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநீர்மலை பகுதி விவசாயிகள் நிரம்பி இருக்கிற பகுதி. அந்தப் பகுதியிலே ஆயிரக்கணக்கான கால்நடைகள் இருக்கின்றன. அவை மருத்துவம் பெறுவதற்கு சிட்லப்பாக்கம் வரை—குறைந்தபட்சம் 12 கிலோமீட்டர்—செல்ல வேண்டியிருக்கிற காரணத்தால் அங்கே ஒரு மருத்துவமனை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற திருநீர்மலையில் ஏற்கெனவே ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகின்றது. மேற்படி கால்நடைக் கிளை நிலையத்தின் மூலம் அப்பகுதி கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் புதிய கால்நடை மருந்தகம் தொடங்குவதற்கு அரசின் சார்பில் நிதி எதுவும் தற்போது ஒதுக்கப்படவில்லை.

எதிர்காலத்தில் பரிசிலிக்கலாம் என்றாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்களுடைய தொகுதியான தாம்பரம் தொகுதியில்தான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற 234 தொகுதிகளிலும் இல்லாத அளவுக்கு கால்நடைக் கிளை நிலையங்கள் 16 இருக்கின்றன. அதைப்போல கால்நடைக் கிளை நிலையங்கள் 16-க்கும் 16 பார்வைக் கிளை நிலையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக்கொண்டு, அதை எதிர்காலத்தில் பரிசிலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 160, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**160—**

**பெண்கள் உயர்நிலைப் பள்ளி**

***36743—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதிதிராவிடர் நல அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து பிரித்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதிதிராவிடர் நல அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து பிரித்து பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதிதிராவிடர் நல அரசு மேல்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 2000-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படிக்கின்றார்கள். அதிலே 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்புவரை படிக்கின்ற மாணவிகள் மட்டும் 600-க்கு மேல் இருக்கிறார்கள். எனவே அங்கே போதுமான இடம் இல்லையென்ற காரணத்தினாலும்,



மாணவிகளுடைய நலனைக் கருதியும், ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாகவே, பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக அதைப் பிரித்துக் கொடுக்க, மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞானசம்பந்தர் ஞானப்பால் அருந்திய இடம் சீர்காழி என்பார்கள். அதனால் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அமுதபிள்ளைதான் பால் குடிக்கும் என்ற பழமொழியை நினைவுபடுத்துகின்றார்கள். பால் நினைந்தூட்டும் தாயாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் தடைபடா பெண் கல்வித் திட்டம் என்று அறிவித்து, பெண்கள் கல்வியின் முன்னேற்றத்திற்காக ஆண்டுக்காண்டு 6 கோடி ரூபாய் வழங்கி வருகின்றார்கள். அப்பேற்பட்ட முதல்வர் அவர்களுடைய ஆட்சி ஐந்தாவது முறையாக மீண்டும் அமரக்கூடிய காலத்திலே உங்களுடைய பிரச்சினை, கோரிக்கை, முன்மொழிவு பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் அளித்த வைட்டமின்-ஏ கரைசல் காரணமாகக் குழந்தைகள் பாதிக்கப்பட்டமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, வைட்டமின்-ஏ திட்டத்தின்கீழ் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை அளித்த மருந்தால் நத்தம் மற்றும் காரியாப்பட்டி பகுதிகளில் குழந்தைகள் இறந்தது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. இரா. விசுவநாதன் அவர்களும், ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும் கொடுத்திருக்கின்றார்கள். இதனைச் சிறப்புக் காவன ஈர்ப்பாக அனுமதித்து, முதலில் திரு. இரா. விசுவநாதன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எங்கள் பகுதியிலே நடைபெற்றுள்ள ஒரு

முக்கியமான சம்பவத்தை தங்கள் வாயிலாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மதுரையில் உள்ள புகழ்பெற்ற அரவிந்த் கண் மருத்துவமனையும், அமெரிக்காவைச் சேர்ந்த John Hopkins University என்ற நிறுவனமும் இணைந்து வைட்டமின்-ஏ திட்டம் என்ற பெயரில் குழந்தைகளின் உயிர்காக்கும் சக்தியை அதிகரிக்கும் ஆராய்ச்சி மருந்து என்ற பெயரில் சாதாரண ஏழை எளிய தாய்மார்களைத் தேர்வு செய்து அவர்களுடைய ஆறு மாதக் குழந்தைகளுக்கு இந்தச் சொட்டு மருந்தை வழங்கி, அந்த மருந்தைப் பற்றிய ஆராய்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனுடைய விளைவாக நத்தம் பகுதியில் ஏறத்தாழ 6000-க்கும் அதிகமான குழந்தைகளுக்கு இந்தச் சொட்டு மருந்து வழங்கியிருக்கிறார்கள். பல்வேறு கிராமங்களிலே ஆராய்ச்சிக்காக இந்த மருந்து வழங்கப்பட்டதில் எங்கள் பகுதியிலே ஏறத்தாழ 350-க்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்திருக்கின்றன என்ற துயரமான, வருத்தமான சம்பவத்தை இந்த நேரத்திலே உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எங்கள் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள் எங்களிடம் புகார் மனுக்களை எழுத்து மூலமாகவே அளித்திருக்கிறார்கள். வைட்டமின்-ஏ திட்டம் என்ற பெயரில், சொட்டு மருந்து வழங்குகிறோம் என்று ஒவ்வொரு கிராமத்திற்கும் வந்திருக்கிறார்கள். குறிப்பாக, இங்கே நான் எழுத்து மூலமாக, புகார் மனுக்களை எல்லாம் அரசுக்கு அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அதிலே.... (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பொதுவாகச் சொல்லிவிட்டு, அதைக் கொடுங்கள். ஏற்கெனவே நீங்கள் பெரிய ஆதாரங்களைக் கொடுத்து, அது அமைச்சரிடம் கொடுத்தாகிவிட்டது. அதற்கு மேலேயா வைத்திருக்கிறீர்கள் இப்பொழுது?

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் எங்கள் பகுதியிலே கொந்தளிப்பான சூழ்நிலைகளெல்லாம் சில கிராமங்களிலே ஏற்பட்டது. குறிப்பாக, சாத்தம்பாடி கிராமம், அந்தக் கிராமத்திலே பல குழந்தைகள் இறந்திருக்கின்றன. அதேபோல நத்தம், எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதியிலே வசிக்கின்ற பல குழந்தைகள் இறந்திருக்கின்றன. அதேபோல அங்கேயிருக்கின்ற சத்தம் விளாம்பட்டி பகுதியிலும் சில குழந்தைகள்





இறந்திருக்கின்றன. நத்தம் பகுதியிலே இருக்கின்ற பல கிராமங்களில் இந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறோம் என்று சொல்லி சொட்டு மருந்து வழங்கும்போது மருத்துவ அறிவு பெற்ற உதவியாளர்கள் மூலமாக அல்லது டாக்டர்கள் மூலமாக மருந்துகள் வழங்குவது இல்லை. மாறாக பி.ஏ., பி.எஸ்ஸி.,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு முக்கியமான கருத்தை விட்டுவிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். எனக்கு வந்த தகவல், நீங்களும் சொல்ல வேண்டிய தகவல், இது சோதனைக்காக-on experimental basis-கொடுக்கப்படுகிற மருந்து என்று சொல்கிறார்கள். அதைச் சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** அந்த subject வருகிறது. அதாவது வெளிநாட்டு நிறுவனமும், இங்கே இருக்கின்ற தனியார் நிறுவனமும் சோதனைக்காக இந்த மருந்துகளைக் கொடுத்து, அதனால் ஏற்படுகின்ற பின் விளைவுகளைப் பற்றித்தான் ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த மருந்தைக் கொடுத்தவுடன், ஒரு form கொடுக்கிறார்கள். மருந்து கொடுத்தவுடன் அந்தக் குழந்தைக்கு ஜன்னி வருகிறதா, சளி ஏற்படுகிறதா, காய்ச்சல் வருகிறதா, வாந்தி வருகிறதா என்பதையெல்லாம் ஒவ்வொரு மணித் துளியிலும் என்ன மாறுதல் ஏற்படுகிறது என்பதை எல்லாம் அவர்கள் பாரத்திலே கேட்டிருக்கிறார்கள். அதே பாரத்திலே இறப்பு பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லச் சொல்கிறார்கள். ஆகவே இந்த மருந்து கொடுத்தால் இறக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அவர்கள் தெரிந்தே இந்த மருந்துகளை அளித்து வருகிறார்கள் என்பதற்கு அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்தப் படிவமே சான்றாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல அங்கே மருத்துவ சிகிச்சைக்காக அவர்கள் நியமிக்கின்ற களப் பணியாளர்கள் மருத்துவ அறிவு பெற்றவர்கள் அல்ல. அவர்கள் பி.ஏ., பி.எஸ்ஸி. படித்த சாதாரணப் பட்டதாரிகளைப் பயன்படுத்துவதால் அவர்களுக்கு மருத்துவ அறிவு—knowledge—இல்லை. அவர்களைப் பயன்படுத்துவதினாலே பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் மருத்துவ அறிவு பெற்றிருந்தால் பாதிப்பு ஏற்பட்டவுடன் உடனே சிகிச்சை அளிக்க முடியும். இந்தத் திட்டத்தை அமல்படுத்தும்போது மருத்துவர்களைக் கொண்டு செய்யாமல் சாதாரண பி.ஏ., பி.எஸ்.ஸி. படித்தவர்களை வைத்து இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதே இந்தத் திட்டத்தில் தவறு ஏற்படுவதற்கு மூல காரணமாக இருக்கக்கூடும் என்றுகூட நான் அஞ்சுகிறேன்.

[திரு. இரா. விசுவநாதன்] [2001 பிப்ரவரி 1

அதேபோல ஆராய்ச்சி செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, அமெரிக்க நிறுவனமான John Hopkins University- இலேயிருந்து ஏறத்தாழ 11 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக அந்த மருத்துவமனை பெற்றிருக்கிறது என்ற செய்தியைக்கூட நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே சென்னையிலேகூட பாம்புக் கடிக்கு விஷ முறிவு மருந்து என்று கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சி செய்வதிலே King Institute-இலே 20-க்கும் மேற்பட்ட குதிரைகள் இறந்தது குறித்துகூட தமிழகத்திலே ஒரு பிரச்சினை உருவானது என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். குதிரைகள் இறந்ததற்கே வருத்தப்பட்ட நாம், குழந்தைகள் எண்ணற்ற அளவிலே இந்த ஆராய்ச்சியின் மூலமாக இறந்திருக்கின்றன என்று சொல்லும்பொழுது உள்ளபடியே இந்த நிகழ்ச்சியைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஆனால், தனியார் நிறுவனம் மூலமாக இதைச் செய்திருந்தாலும்கூட அரசுக்கும் இதற்கும் நேரடித் தொடர்பு இல்லை என்றாலும்கூட அரசுக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு இதிலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு—அந்தச் சொட்டு மருந்து கொடுத்ததன் காரணமாக இறந்த குழந்தைகளின் பெற்றோருக்குத் தகுந்த நிவாரணம் அந்த நிறுவனம் வழங்க வேண்டும். அதேபோல ஒரு முறையான விசாரணைக்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது இந்தப் பிரச்சினை குறித்து அந்த சம்பந்தப்பட்ட மருத்துவமனையிலேயே நீங்கள் விசாரணை செய்தால் உண்மையான செய்திகள் உங்களுக்கு வர முடியாது. உண்மையான செய்திகள் நமக்குக் கிடைக்காது. ஆகவே, இந்த மருத்துவமனையிலேயே அவர்களை விசாரிப்பதை விட்டுவிட்டு தனியாக ஒரு முறையான விசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்து உண்மை நிலையைக் கண்டறிந்து, இந்த நிலையைத் தடுத்து நிறுத்திட வேண்டும். இந்த ஆராய்ச்சியைத் தடுத்து நிறுத்துவதோடு தவறு நடந்திருந்தால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். முறையான விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான நஷ்டயீட்டுத் தொகையை அந்த நிறுவனத்திலிருந்து அரசு மூலமாக வாங்கித் தர வேண்டுமென்று கேட்டு இந்த நிகழ்ச்சியை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



2001 பிப்ரவரி 1]

முற்பகல் 10-40

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவில் இருக்கக்கூடிய John Hopkins University மதுரையில் இருக்கக்கூடிய அரவிந்த் கண் மருத்துவமனையோடு இணைந்து ஒரு சோதனை ஓட்டத்தை நம்முடைய தமிழகத்திலே, குறிப்பாக நத்தம், காரியாபட்டி என்கின்ற இரண்டு ஒன்றியங்களிலே நடத்தி, 600 குழந்தைகளுக்கு சொட்டு மருந்தை 'A' Vitamin-கொடுத்து சோதித்துப் பார்த்ததில், ஏற்கெனவே, 350 குழந்தைகள் அந்தப் பகுதியிலே இறந்து விட்டன என்கிற.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 350, 500 இதெல்லாம் வாய்மொழியாக வருவது. அவர் சொன்னார் என்று நீங்களும் 350 என்று சொல்வதா? குழந்தைகள் இறந்திருக்கிறார்கள் என்ற செய்தி வருகிறது. நான் இதிலே அரசியல் இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். சும்மா ஏதோ புள்ளிவிவரம் எடுத்ததுமாதிரி, 350, 400 என்று சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? இதில் அடிப்படை உண்மையை நீங்கள் பேசமாட்டேன் என்கிறீர்கள். அதைத்தான் அவரிடமும் சொன்னேன். Experimental basis-ல் கொடுத்ததாலே விளைவுகள் வரலாம். நீங்கள் அதைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு குழந்தையாக இருந்தாலும் சரி, 350 குழந்தைகளாக இருந்தாலும் சரி, விலைமதிப்பற்ற மனித உயிருக்கு நாம் எவ்வளவு மதிப்பை அளிக்க வேண்டும்? ஒவ்வொரு குழந்தையையும் பாதுகாக்க வேண்டும் என்கிற ஒரு மாபெரும் பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. ஆனால் இப்படி சோதனை என்கிற பெயரால், 11 கோடி ரூபாயை அந்த அரவிந்த் கண் மருத்துவமனை பெற்றுக்கொண்டு, சோதனை என்று நம்முடைய தமிழகத்திலே, குறிப்பாக மதுரை, நத்தம் பகுதியிலே ஏற்றுக்கொண்டு, இவ்வளவு குழந்தைகளுடைய இறப்புக்கு நாம் காரணமாக இருக்க வேண்டுமா என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோதனை என்கின்றபோது அவர்களுடைய நாட்டிலே அவர்கள் செய்யட்டும். அமெரிக்க நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் மருந்து தயாரிக்கின்றார்கள். சோதனை ஓட்டத்தை எல்லாம் அந்த நாட்டிலேயே அவர்கள் முடித்துக்கொண்டு பிறகு நம்முடைய நாட்டிற்கு வந்திருக்கலாம். அதை விட்டுவிட்டு, நாம்தான் இளிச்சவாயர்கள் என்கிற நிலையில் இங்கு கொண்டு வந்து, இங்கே 11 கோடி ரூபாயைக்

கொடுத்துவிட்டு, இங்கே ஒரு நிறுவனத்தைப் பிடித்துக்கொண்டு, நத்தம், காரியாபட்டி போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களை ஏமாற்றுகிற வேலையிலே இப்படிப்பட்ட நிறுவனங்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இவ்வளவு குழந்தைகள் இறப்பு என்று வந்து, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் கொந்தளித்து, மனுக்கள் எல்லாம் போட்டு போராடியும்கூட, தமிழக அரசு அதைத் தடுத்து நிறுத்துவதற்கு இதுகாறும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது உண்மையிலேயே வேதனை அளிக்கிறது. நம்முடைய அரசு குதிரை இறந்தாலும் கண்டுகொள்வதில்லை; அதேபோல குழந்தைகள் இறந்தாலும் கண்டு கொள்வதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் சொன்னதுபோல அரசாங்கம், தன்னுடைய பொறுப்பிலே இருந்து தட்டிக்கழித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த நிலையை நாம் அனுமதிக்கக்கூடாது. இந்த அவையினுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்த பிறகாவது நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உடனடியாக இதிலே தலையிட்டு, முடிந்தால்— முடிந்தால் என்ன—கண்டிப்பாக, உடனடியாக உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து ஒரு நீதி விசாரணைக்கே உத்தரவிடலாம். குழந்தைகள் பல பேர் இறந்துவிட்டதாகப் புகார் வந்திருக்கக்கூடிய ஒரு நிலையில் இனியும் தாமதிக்காமல் நீதி விசாரணைக்கு நம்முடைய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறந்த குழந்தைகளுக்கு ஈடாக ஒரு இலட்சம் ரூபாயை ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, உடனடியாக இந்தச் சோதனை திட்டத்தை நம்முடைய தமிழகத்தில் நடத்தக்கூடாது; எக்காரணத்தைக் கொண்டும் John Hopkins University இங்கே அதைச் செய்யக்கூடாது என்று நீங்கள் தடை விதிக்க வேண்டும். கிரிமினல் வழக்குகளைத் தொடுத்தாவது அவர்களை நீங்கள் உள்ளே பிடித்துப் போட வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒன்றும் அறிவிப்பு கொடுக்கவில்லையே! நீங்கள் டாக்டர் என்பதால் இரண்டு நிமிடங்கள் பேச அனுமதிக்கிறேன்.



**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம், காரியாபட்டி பகுதிகளிலே Vitamin-A பற்றிய சோதனையை அயல்நாட்டு நிறுவனத்தோடு இணைந்து அரவிந்த் கண் மருத்துவமனை நடத்தியதில் பல குழந்தைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிந்து, இந்த அவையினுடைய கவனத்திற்கு சில விஷயங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். Vitamin-A வழக்கமாக ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே இப்போது நடைமுறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் பிறந்த உடனேயே இந்த Vitamin-A மருந்து கொடுப்பதால், குழந்தைகளுடைய நலனில் ஏதாவது மாற்றம் ஏற்படுகிறதா என்பதைப்பற்றி அறிவதற்காக இப்போது அந்தச் சோதனை நடத்தப்பட்டிருப்பதாக அறிகிறோம். வழக்கமாக ஆறு மாதங்களுக்கு மேலான குழந்தைகளுக்கு Vitamin-A கொடுக்கும்போதே வயிற்றுப் போக்கு, மூளை பாதிப்பு போன்றவற்றிற்கு ஆளாவது வழக்கம். எனவே, இப்படிப்பட்ட ஒரு சோதனையை பிறந்த குழந்தைக்கு, முதல் நாள், இரண்டாவது நாள் அல்லது மூன்றாவது நாள் என்று கொடுக்கின்றபோது இதற்கு ஏற்கெனவே அரசினுடைய அனுமதியை முறையாக இந்த நிறுவனங்கள் பெற்றிருக்கின்றனவா என்பதை நாம் அறிய வேண்டும்.

முற்பகல் 10-45

அடுத்தது, இந்த நிறுவனம் இந்தச் சோதனையில் ஈடுபட்ட பிறகு, எத்தனை குழந்தைகள், என்னென்ன பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள், எத்தனை குழந்தைகள் இறந்திருக்கிறார்கள் அல்லது வேறு பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பது பற்றிய சரியான தகவல் இருக்கிறதா என்பதையும் இந்த அவையிலே அறிவிக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். அடுத்தது, வழக்கமாக இதுபோன்ற சோதனைகள் எல்லாம், முதலிலே, மனிதனிடத்திலே செய்யப்படுவது கிடையாது. வழக்கமாக rats, guinea pigs அதாவது எலிகள், குரங்குகளிடத்திலே செய்வதுதான் வழக்கமான நடைமுறைகள் அதை மீறி இப்போது பிறந்த குழந்தைகளிடத்திலே செய்வது எந்த விதத்திலே முறையானது என்று தெரியவில்லை. எனவே இதையெல்லாம் ஒரு முக்கியமான பிரச்சினையாகக் கருதி, அதுவும் குறிப்பாக நத்தம், காரியாபட்டி பகுதிகளிலே கல்வியறிவு இல்லாத மக்கள் மத்தியிலே சோதனை செய்யப்படுவது உண்மையிலே ஏற்புடையதல்ல. வழக்கமாக இதுபோன்ற

சோதனைகளெல்லாம் நல்ல பயிற்சி பெற்ற, தெளிவுற்ற மக்கள் மத்தியிலேதான் செய்யப்பட வேண்டும். அதையும் தாய்மார்கள், பெற்றோர்கள் ஏற்றுக் கொண்டால்தான் செய்ய வேண்டும். ஆனால் ஆங்கிலத்திலே எழுதப்பட்டு இருக்கிறது—சில உறுத்தல்கள்—அதிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், முதல் டோஸை ஏற்றுக்கொள்ளாவிட்டால், இரண்டாவது டோஸை எப்படியாவது கட்டாயப்படுத்தியாவது கொடுங்கள் என்பதைப்போல அவர்களுடைய கள அலுவலர்களுக்குக்கூட சொல்லப்பட்டிருக்கிறது. இதெல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. இதுவொரு சீரியஸான பிரச்சினை என்று கருதுகிறேன். எனவே அரசு இதில் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கும், இதிலே உண்மை நிலை என்ன என்பதைக் கண்டுபிடிப்பதற்கும், அதே சமயத்தில் ஒரு நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டு இருக்கிறதா என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையினுடைய உறுப்பினர்கள் திரு. விசுவநாதன் அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்கின்ற முறையில், மதுரையில் உள்ள கண் மருத்துவமனை மேற்கொண்ட ஒரு ஆய்வுத் திட்டம் என்ற முறையில் நடைபெற்ற அந்தப் பணிகள் காரணமாக குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எடுத்துச் சொன்ன அந்த முறையில் அவர்களுடைய உணர்வை நான் மதித்தாலும்கூட நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறித்து, செயல்பட்ட முறைகள் குறித்து நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் விசாரித்து அறிந்து அரசுக்குத் தெரிவித்திருக்கிற செய்தியை முதலிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வைட்டமின் 'ஏ' பற்றாக்குறையினால் குழந்தைகளுக்கு—இது இயல்பாக ஏற்படுகின்ற ஒன்று—மாலைக் கண் நோய் போன்ற கண் நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளன. இந்நோயினைத் தவிர்க்கும்பொருட்டு வைட்டமின் 'ஏ' கரைசல் அளிக்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவனம்



பரிந்துரைத்த அளவுகோலின்படி, The World Health Organisation சொன்ன அளவுகோலின்படி, யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன்—இது தனிப்பட்ட கம்பெனி அல்ல—யூனிசெப் உலகம் முழுவதும் சுகாதார நலத் திட்டத்தை பெருமளவிற்கு செயல்படுத்துவதற்குத் தூண்டுகோலாக இருக்கிற அமைப்பு. அந்த யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் பிறந்த குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' கரைசல் அளித்து ஆய்வு செய்ய மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை அனுமதி கோரியது. அம்மருத்துவமனையின் கோரிக்கையில் உள்ளடங்கியுள்ள சட்டம் மற்றும் நெறிமுறைகளை ஆராயும் பொருட்டு குழந்தைகள் நல மருத்துவர்கள் மற்றும் பிற வல்லுநர்களைக் கொண்ட நன்னெறிக் குழு—Ethical Committee—ஒன்று அமைக்கப்பட்டது. அது தகுதியுள்ள மருந்துதானா, என்ன முறையில் செய்வது என்பதை முறைப்படுத்தித் தெரிவிக்க நன்னெறிக் குழு என்பது Medical Court என்ற அடிப்படையில் Ethical Committee ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு மேற்கொண்ட ஆய்வுக்கு மறுப்பின்மை அளித்தது, ஒப்புதல் அளித்தது. அதாவது மறுப்பின்மை—No objection—அதன் அடிப்படையில் ஆய்வுக்கு உட்பட விருப்பம் உள்ள பெற்றோர்களின் குழந்தைகள் மட்டுமே, அதாவது பெற்றோர்களிடத்திலே சொல்லி, அவர்களுடைய இசைவு பெற்று அந்தக் குழந்தைகள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் குழந்தைகள் அடுத்த 6 மாதங்களுக்கு, இரு வாரங்களுக்கு ஒருமுறை கண்காணிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் பிறந்த குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' கரைசல், மருந்து அளித்து ஆய்வு செய்ய மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

*முற்பகல் 10-50*

பொதுவாக வைட்டமின் 'ஏ' கரைசல் வழங்கப்படுவதால் இறப்பு ஏற்பட வாய்ப்பில்லை. இது ஜெனரல். பென்சிலின் ஊசி போட்டுகூட இறந்து போகிறவர்கள் உண்டு. இதை முன்கூட்டி எவ்வளவுதான் அறிந்திருந்தாலும் கூட, எத்தனை முறை பென்சிலின் போட்டவரும் பின்னர் ஒரு முறை போடுகிறபோது காய்ச்சலுக்கு ஆளாகி இறக்கிற நிலை உண்டு என்பதை நான் அறிவேன். பொதுவாக வைட்டமின் 'ஏ' கரைசல் வழங்கப்படுவதால் இறப்பு ஏற்பட வாய்ப்பில்லை.

[பேராசிரியர் க. அன்பழகன்] [2001 பிப்ரவரி 1

மேற்கண்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் மாவட்ட சுகாதார துணை இயக்குநர்களைத் தொடர்பு கொண்டபோது, அப்பகுதிகளில் வைட்டமின் 'ஏ' கரைசல் உட்கொண்டதால் - இங்கே சொல்லப்பட்ட நத்தம், காரியாபட்டி, பகுதிகளில் உட்கொண்டதால்—குழந்தைகள் எதுவும் மரணமடையவில்லை என்றும், அதனால் அங்கு பதட்ட நிலை நிலவவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். இது அரசுக்குக் கிடைத்திருக்கிற குறிப்பு. ஒருவேளை இதற்கு மேலும் ஏதாவது, உறுப்பினர் சொன்ன அடிப்படையில் குழந்தைகளுக்கு உயிரிழப்பு ஏற்பட்டு இருக்குமானால்—'இருக்குமானால்' என்று நான் சொல்கிறபோது மறுப்பதாகவும் பொருளல்ல. இருக்குமானால், அந்தந்த மாவட்டங்களிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அறிக்கையைப் பெற்று, அப்படி ஏதேனும் ஏற்பட்டு இருக்குமானால், மருத்துவத் துறையைச் சார்ந்த உயர்நிலைக் குழு ஒன்றின் மூலமாக தகுந்த விசாரணை நடத்தி, அங்கேயுள்ள அந்த முறைகளில் ஏதாவது குறை ஏற்பட்டிருக்கிறதா அல்லது இது பரிசோதனைக்கே உரியது அல்லவா? அப்படி ஒரு குறை ஏற்பட்டு இருக்குமானால், அதற்குப் பின்னர் என்ன செய்வது? ஒருவேளை குழந்தைகள் இறந்திருக்குமானால், அதற்கு என்ன ஆய்வுத் திட்டம் என்ற பெயரால்—குழந்தைகள் இறப்பதற்கு நியாயமாக அனுமதிக்க முடியாது. குழந்தைகள் இறப்பு என்பது உள்ளபடியே நிகழ்ந்திருக்குமானால், கலெக்டருக்கு, அங்கிருக்கிற மருத்துவத் துறை அதிகாரிகட்கு, அரசுக்கு பல புகார்கள் வந்திருக்க வேண்டும். வரவில்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, நடந்திருக்குமானால், இந்த மருந்தால்தான் அந்தக் குழந்தை இறந்திருக்கிறதா, குழந்தை இறக்க வேறு காரணம் உண்டா, இந்த மருந்து கொடுத்த முறையிலே தவறா அல்லது இந்த மருந்தை உட்கொண்ட குழந்தை பின்னர் வேறு மருந்தைச் சாப்பிட்டு இந்த விளைவுக்கு ஆளாயிற்றா, இவ்வளவையும் விசாரிக்க வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்துக்கள் அடிப்படையில் தேவைப்படக் கூடிய முறையில் உண்மையை அறிவதற்கு மேலும் இந்த அரசு முயற்சிக்கும் என்று நான் உறுதி கூறி என்னுடைய பதிலை நான் முடிக்க விரும்புகிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** குழந்தை இறந்ததற்கான ஆதாரம் இருக்கிறது.



2001 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. விசுவநாதன், நீங்கள் கொண்டு வந்து அமைச்சரிடம் கொடுங்கள். (குறுக்கீடு) நான் அதையெல்லாம் மறுக்கவில்லை கொண்டுவந்து கொடுங்கள். அமைச்சரிடம் பிறகு கொடுங்கள்.

### (ஆ) சிதம்பரம் வக்காரமாரி ஏரி நீரை சுத்தப்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து சிதம்பரம், நகரத்திற்கு வக்காரமாரி ஏரியிலிருந்து வரும் குடிநீரை வடிப்பான் மூலம் சுத்தப்படுத்துவது குறித்து திரு. அழகிரி அவர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இது பேசஅனுமதிக்கப்பட்டு இருந்தது. இருந்தாலும், அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் என்ற அடிப்படையில் மிகச் சுருக்கமாக அதைச் சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரம் மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சிகளுக்கு சிதம்பரத்திற்கு அருகாமையில் இருக்கிற வக்காரமாரி ஏரியிலிருந்து தண்ணீர் வருகிறது. ஆனால் அந்தத் தண்ணீர் அசுத்தமாக இருக்கிறது. காரணம், அந்தத் தண்ணீரை பில்டர் செய்வதற்கான வடிப்பான்கள் அங்கே செயல்படவில்லை. இதன் காரணமாக மஞ்சள் காமாலை நோயால் ஏராளமான மக்கள் அவதியுறுகிறார்கள். நகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு வடிப்பான் அமைப்பதற்கான தொகை அவர்களிடம் இல்லை. இரண்டு கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். எனவே மாநில அரசாங்கம் அந்த வடிப்பான் (filter) அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து, மஞ்சள் காமாலை நோயிலிருந்து சிதம்பரம் நகரம் மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சிகளில் இருக்கிற இலட்சக்கணக்கான மக்களைக் காப்பாற்றுவதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சென்ற 4-5-2000-ல் ஒரு கவன ஈர்ப்பு இந்த அவையில் கொடுத்தார்கள். அதற்கு முன்னும், அதற்குப் பின்னும் சிதம்பரம் நகராட்சியில், ஒரு நகராட்சி செய்கின்ற காரியத்தையெல்லாம் அரசே செய்திட முடியும் என்பது அவ்வளவு பொருத்தமானது அல்ல. அதற்கென சில விதிமுறைகள் இருக்கின்றன. அரசு தலையிடுவதற்கான சில விதிமுறைகள் இருக்கின்றன. இதுவரையிலே இப்படிப்பட்ட ஒருநிலை இருக்கிறது என்பதை நகராட்சி

[திரு. கோ.சி. மணி] [2001 பிப்ரவரி 1

மன்றமோ, நகராட்சி மன்றத்தில் பொறுப்பேற்று இருக்கிறவர்களோ இந்த அரசுக்கு எந்தவித தகவலும் தெரிவிக்கவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டாவது முறை இதை இங்கே கொண்டு வந்திருக்கிற காரணத்தால், அவருடைய பேச்சில் மஞ்சள் காமாலை நோய் வருவதாகவும், அது சுகாதாரமற்ற தண்ணீர் என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அந்தத் தண்ணீரைப் பொறுத்தவரையில் இரண்டு முறை சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அதை பரிட்சார்த்தமாகப் பார்த்தபோது, அப்படிப்பட்ட நோய் வருவதற்குக் காரணமில்லை. ஆனாலும் திறந்தவெளி தண்ணீரை எடுத்து, தொட்டியிலே ஏற்றி, அதிலே பவுடர் கலந்து, சுத்தப்படுத்திக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலேதான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10-55

1915ஆம் வருடத்தில் இந்தத் திட்டம் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டு அப்போதிருந்த விஞ்ஞான முறைப்படி அது அமைக்கப்பட்டது. அந்த அழுத்த, பில்டர் என்பது இன்றைக்கு இந்தியாவில் எந்தப் பகுதியிலேயும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தியாவில் அதற்கான உதிரி பாகங்கள் விற்பனையிலும் இல்லை. வெளிநாடுகளில்கூட அந்த வடிவமைப்புகள் புதியதாக மாற்றப்பட்டிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. எனவே அந்த பில்டரைப் பொறுத்தவரையில் இப்போது நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆனாலும், அவருடைய கோரிக்கையை மட்டும் மனதிலே வைத்து, நான் துறை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லி இதற்கு வேறு திட்டம் எதையாவது செய்யலாமா என்று யோசித்தபோது இடையிலே ஒரு திட்டத்தை நாம் கொண்டுவந்து 6 கோடியே 97 இலட்சம் ரூபாய்க்கு நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் திட்டம் சிதம்பரத்திற்கும், அதுபோலவே அண்ணாமலை நகர் பேரூராட்சிக்கும் குடிதண்ணீர் வழங்குகிற திட்டமாகவும் இரண்டு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்குகின்ற காரணத்தால் கூட்டுக் குடிநீர்த் திட்டமாகவே எடுத்து அது இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலவரப்படி 16 மணி நேரம் அது இயங்கினால் 36 லட்சம் லிட்டர்தான் தண்ணீர் கொடுக்கப்படும். அதற்கு முன்னால் இருப்பதிலுள்ள 30 லட்சம் லிட்டரும் வந்து சேருகிறது. இது இரண்டையும் சேர்த்து நபருக்கு 90 லிட்டராக கணக்கு சொல்லப்பட்டு கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆனால் அது 2021 வரையில் மக்கள் எந்த அளவுக்கு உயருகிறார்களோ அந்த



2001 பிப்ரவரி 1] [திரு. கோ.சி. மணி]

அளவுக்கு 90 லிட்டர் கொடுக்கக்கூடிய அளவுக்கு நம்மிடத்திலே தண்ணீர், நீர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரேயொரு பம்ப்செட்டை மட்டும் மாற்றினால் அதிலே மூன்று மணி நேரம் கூடுதலாக்கினால் 90 லிட்டர் தண்ணீரை அந்தப் புதிய திட்டத்தின் மூலமாகவே வழங்க முடியும். அப்படிப்பட்ட யோசனையையும், அப்படிப்பட்ட கோரிக்கையையும் அந்த நகராட்சி மன்றம் இந்த அரசுக்கு அனுப்பிவைக்கவில்லை. அப்படி அனுப்பிவைக்காத நிலை இருந்தாலும், அந்தத் திட்டத்தையே விரிவாக்கவேண்டுமென்றால்தான் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவாகும். ஆனால் இந்த பம்ப்செட் திறனை மட்டுமே உயர்த்தினால் ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய்க்கு ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான் இன்றும் அதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறேன். இப்போது சாதாரணமாக, தோராயமாக, நான் கேட்டபோது 60 இலட்சம் ரூபாய் கூடுதலாகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைக்கொண்டு, 17 மணி நேரம் ஓடிக்கொண்டிருக்கும் அந்த பம்ப்செட்டை 20 மணி நேரமாக அதிகரித்தால் இதன்மூலம் 90 லிட்டரை வழங்கலாம். அந்தத் தண்ணீர் தேவையே இல்லை. அப்படியில்லையென்றால் இந்தத் தண்ணீரை குடிநீருக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை அறிவித்து, அதற்கு ஒரு நேரத்தை அறிவித்து இரண்டும் தனித் தனியாகக் கொடுத்தால் குடிநீருக்காக இந்தத் தண்ணீரையும் மற்ற உபயோகத்திற்கு அந்தத் தண்ணீரையும் எடுத்துக்கொள்கிற வாய்ப்பும் அதிலே இருக்கிறது. இந்த இரண்டு காரியத்தையும் இப்படிச் செய்வதென்றால் செலவேயில்லை. ஆனால் புதிதாக ஒரு பம்ப்செட்டை நிறுவி 60 இலட்சம் ரூபாய் செலவு செய்வதில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலேயும் வரலாம், குறைவும் வரலாம். அந்தச் செலவு செய்தால், பம்பிங் நேரத்தை உயர்த்தி தனித்தே இந்தத் திட்டத்தின் மூலம் 90 லிட்டரும் வழங்கலாம். எந்த முறையைக் கையாளுவதாக இருந்தாலும் ஜனநாயக முறைப்படி, விதிமுறைகளின்படி. அந்த நகராட்சி இந்த அரசாங்கத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும். அப்படித் தொடர்புகொண்டால் ஒருகால் வருகிற நிதிநிலை அறிக்கையிலே அதைச் சேர்த்து அந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் மானியம் வழங்க முடியுமா என்பதையும், அப்படியில்லையென்றால் வேறு நிதி நிறுவனத்திடம் கடன் பெற்றோ அல்லது கடனும், இந்த அரசு மானியமும் கொடுத்தோ அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம். அதைத் தனித் திட்டமாக இல்லாமல் இந்தத் திட்டத்தை முறைப்படுத்தி வழங்கலாம் என்பது இந்த அரசினுடைய யோசனையாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்காக முடிந்தவரையில் நான் சொன்ன காரியங்களை நகராட்சி மூலம் அவர் அங்கே நிறைவேற்ற முற்படுவாரேயானால் அரசு ஒத்துழைக்கும் என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

## 3. விதி 111-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை

### 31-1-2001 அன்று அளித்த விளக்கத்திற்குத் திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 111-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-1-2001 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை, 2001-2002 பொது விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசேந்திரன் என்கிற தீரன் விவாதிக்கும்போது, கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் ஆற்றிய உரையில் அடிப்படைத் தன்மைக்கு மாறாக பிழை ஏற்பட்டுள்ளது. அப்பிழைக்கு உட்பட்ட உரையின் பகுதியும் அதற்கான திருத்தமும் கீழே வருமாறு:

முற்பகல் 11-00

"அந்த ஆணை, பல அடிப்படையான நியாயங்கள் நிலைபெற வேண்டும் என்பதற்காகத்தான் வெளியிடப்பட்டது. இருந்தாலும் அதனுடைய உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் பல பேர் இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு ஏன் வீண் சந்தேகம் என்பதற்காக, அந்த ஆணை கைவிடப்பட்டுவிட்டது'' என்று தெரிவித்தேன்.

**திருத்தம்:** அந்தப் பதிலை இவ்வாறு திருத்தி நான் அறிவிக்கின்றேன்.



"அந்த ஆணை எண் 22, பள்ளிக் கல்வித் துறை, பல அடிப்படையான நியாயங்கள் நிலைபெற வேண்டும் என்பதற்காகத்தான் வெளியிடப்பட்டது. அந்த ஆணை கைவிடப்படவில்லை" என திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை, திரு. டி. குண்டன்.

**திரு. டி. குண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயக்கூர்திகள் சட்டங்கள் மற்றும் நிர்வாகம், காட்டுவளம் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் 34 மற்றும் 35-வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 316 முதல் 320 வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கை, திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2000-2001 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 28, 29 மற்றும் 30-வது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல். 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, முன்மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Clause 2 of Art. 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for further grants for the financial year 2000-2001."



## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2000-2001, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000-2001 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 31-1-2001 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2000-2001 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

நிறைவேற்றப்பெற்ற 2000-2001 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | | ரூபாய் ஆயிரத்தில் |
|---|---|---|
| | அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
| 2. | மாநில ஆயத்தீர்வைத் துறை | 2 |
| 3. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 5,55,52 |
| 4. | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 8 |

| | | |
|---|---|---|
| 6. | ஆவணப் பதிவு | 96,02 |
| 7. | மாநிலச் சட்டமன்றம் | 44,84 |
| 8. | தேர்தல்கள் | 27,10,78 |
| 9. | மாநில ஆட்சித் தலைவர் அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 44 |
| 11. | மாவட்ட நிருவாகம் | 33 |
| 12. | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 1 |
| 13. | நீதி நிருவாகம் | 19 |
| 14. | சிறைச்சாலைகள் | 11 |
| 15. | காவல் துறை | 80 |
| 16. | தீயணைப்புப் பணிகள் | 7 |
| 17. | கல்வி | 1,72,12,38 |
| 18. | மருத்துவம் | 82 |
| 19. | மக்கள் நல்வாழ்வு | 60 |
| 20. | வேளாண்மை | 80 |
| 21. | மீனளம் | 10 |
| 22. | கால்நடை வளர்ப்பு | 26 |
| 23. | கூட்டுறவு | 3 |
| 24. | தொழில்கள் | 5,45,22 |
| 25. | கைத்தறியும் துணித் தொழிலும் | 1,80,64 |
| 26. | கதர்-கிராமத் தொழில்கள் | 6,18,11 |



| | | |
|---|---|---|
| 27. | ஊரக வளர்ச்சி | 18 |
| 28. | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 12 |
| 29. | சமூக நலன் | 65,93,68 |
| 30. | பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 10,63,98 |
| 31. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 25 |
| 32. | வீட்டு வசதி | 6 |
| 33. | நகர்ப்பகுதி வளர்ச்சி | 1 |
| 34. | நுகர்பொருள் வழங்கல் | 10 |
| 35. | பாசனம் | 1,44,63,90 |
| 36. | பொதுப்பணிகள்-கட்டடங்கள் | 9 |
| 37. | சுற்றுச்சூழல் | 7,08,81 |
| 38. | சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 10,41,09 |
| 39. | சாலைப் போக்குவரத்துப் பணிகள் | 1,26,83 |
| 40. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 45,98,76 |
| 41. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 3,74,92,63 |
| 42. | பல்வகை | 18 |
| 43. | எழுதுபொருள்-அச்சுத் துறை | 3 |
| 44. | காட்டுவளத் துறை | 14 |
| 46. | செய்தி, திரைப்படத் தொழில்நுட்பவியல் | 7,28,64 |
| 47. | ஊரகத் தொழில்கள் | 4,26,57 |

| | |
|---|---|
| 48. குடிநீர் வழங்கல் | 33,18,56 |
| 49. நகராட்சி நிருவாகம் | 7 |
| 50. சுற்றுலா | 1,18,01 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 2,90,54 |
| மொத்தம் அ. வருவாய்க் கணக்கில் செலவு | **9,29,41,40** |

**ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**

| | |
|---|---|
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 2,02,50 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 51 |
| 55. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 22,79,16 |
| 56. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 12 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 3,45,72 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 12,81 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 1,75,70,52 |
| மொத்தம் ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | **2,04,11,34** |

**இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்**

| | |
|---|---|
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 27,43,64 |
| பெருமொத்தம் | **11,60,96,38** |



## 6. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும், ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—
தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2001.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 11-05*

## 8. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம், திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குப் பேசிக் கொண்டிருக்கும்போது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***

**திரு. ரா. ஈஸ்வரன்:** சட்டப் பேரவையினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையிலேயோ, அல்லது இடைக்கால நிதிநிலை அறிக்கையிலேயோ தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மைகளும் சொல்லப்படவில்லை.

சில தினங்களுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் சைக்கிள் பஞ்சர் ஆகிவிட்டது என்று இந்தச் சட்டமன்றத்தில் கூறினார்கள். 1996 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநில காங்கிரஸ் ஆகியவற்றிற்கு இடையே கூட்டணி ஏற்பட்ட நேரத்தில், எங்களுடைய ஐயா மூப்பனார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஜாமீன் கொடுத்து, தவறுகள் நடக்காது, வாக்களியுங்கள் என்று சொன்னார்கள். அதன் காரணமாக பெருவாரியான வாக்குகள் பெற்று, சட்டமன்றத்திலே வந்து அமைச்சரவை அமைத்து உள்ளீர்கள். அந்த நேரத்தில் ஐயா மூப்பனார் அவர்களுக்கு இந்திய நாட்டினுடைய பிரதமராக வருகின்ற ஒரு வாய்ப்பு இருந்தது. மற்ற மாநிலங்கள் எல்லாம் அதற்கு முழுமையான ஆதரவு கொடுத்தன. ஆனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் மத்தியில் இருக்கக்கூடிய தொழில் துறை அமைச்சர் அவர்களும் அதற்கு முழுமையாக ஆதரவு கொடுக்கவில்லை என்பதை தமிழகத்தில் இருக்கக்கூடிய த.மா.கா. உட்பட சர்வ கட்சிகளின் சார்பாக வருத்தப்பட்டதுண்டு. அது மட்டுமல்லாமல்...



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இதுபோன்ற ஆதரவு கொடுக்கவில்லை என்று ஆதாரமில்லாமல் செய்திகளைச் சொல்வது இங்கே சரியாக இருக்காது. சில யூகங்களை, சில பத்திரிகைகளிலே வந்ததை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசக் கூடாது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** நான் அதை யூகத்தின் அடிப்படையில் சொல்லவில்லை. நானும் 15 தினங்கள் டெல்லியிலே இருந்தேன். அனைத்து மாநிலங்களும் ஆதரவு கொடுத்தன. அனைத்து பத்திரிகைகளிலும்கூட இந்த மாதிரி செய்திகள் வந்தன என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அவர் எதைக் கருதுகிறாரோ, எதை நினைக்கிறாரோ அல்லது எதை விரும்புகிறாரோ, எது இந்த நேரத்திற்கு நல்லது என்று திட்டமிடுகிறாரோ அதை அவர் பேசலாம். ஆனால் எனக்குத் தெரிந்த உண்மை என்ற முறையில், அவர் சொல்கின்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரோ அல்லது மத்திய அமைச்சரோ மூப்பனார் அவர்கள் இந்தியாவின் பிரதமராவதற்கு எதிராக இருக்கவில்லை. ஆனால் எதிர்ப்பாக ஒரு மகத்தான சக்தி அன்றைக்கு இருந்த காரணத்தால், அதைத் தவிர்க்கக்கூடிய வழியில்லை என்பதைத்தான் அவர்கள் அன்றைக்குக் கண்டார்கள். ஒருவேளை அப்படியொரு செல்வாக்கு மறுபடியும் வருமானால் நிச்சயமாக தி.மு.க. தலைவரோ, அதேபோல தொழில் அமைச்சரோ ஆதரித்து, அவர்களுக்கு அந்த உயர்நிலை கிடைக்க துணை நிற்பார்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே இருக்கக்கூடிய ஒட்டுமொத்த மக்களின் விருப்பம். தலைவர் வரக்கூடிய வாய்ப்பை....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த எண்ணம் இருந்திருக்குமானால், அப்பொழுதே அவர்கள் கூட்டணியை விட்டுச் சென்றிருக்கலாம். இப்போது காரணமாக வேண்டுமென்று எதையோ ஒன்றைப் பிடித்துக் கொண்டிருக்கக்கூடாது. அதற்குப் பிறகும் இந்தக் கூட்டணியிலே ரொம்ப நாள் இருந்தார்களே! அப்பொழுதெல்லாம் இவர்கள் ஏன் இதைச் சொல்லவில்லை? சட்டமன்றத் அதற்குப் பிறகு நடந்தது அப்பொழுது சொல்லாமல் இப்பொழுது சொல்வது---உரலை நினைத்துக்கொண்டு அலையை இடிக்கக்கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கக்கூடாது என்று சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதவிக்காக ஒரு கூட்டணியை முறிப்பது தமிழ் மாநில காங்கிரசினுடைய பாரம்பரியம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் எதற்காக இந்தக் கூட்டணியை முறித்தோம் என்று சொன்னால் பாரதிய ஜனதாவோடு நீங்கள் சேர்ந்த ஒரே காரணத்திற்காகத்தான் இந்தக் கூட்டணியிலிருந்து விலகினோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்று மின்சாரத் துறையைப் பொறுத்த அளவில் தமிழகத்தில் மின்சாரக் கட்டுப்பாடு இல்லை, பகலில் விவசாயிகளுக்கும் வீடுகளுக்கும் கட்டுப்பாடு இல்லாமல் 6 மணி நேரம் கிடைக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை, இருந்தாலும் சொல்லக்கூடிய கடமை எனக்கு இருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலே மாதம் சுமார் 10 தினங்களுக்கு குறிப்பிட்ட நேரங்களில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. எனவே மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மக்களை ஏமாற்றுகிறாரா அல்லது மின்சாரத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அமைச்சரை ஏமாற்றுகிறார்களா என்று எனக்குப் புரியவில்லை.

அதுமட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக திருச்சியிலே போட்ட மகாநாட்டிலே தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு கரும்புக்கு டன்னுக்கு 1000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் சொன்ன நாளிலிருந்து இதுவரைக்கும் அந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியவில்லை. அதுமட்டுமல்ல, சில மாதங்களுக்கு முன்னால் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் 10 புள்ளி பிழிதிறன் கொண்ட கரும்புக்கு டன்னுக்கு 1000 ரூபாய் கொடுப்பதாக அறிவித்தார்கள். ஆனால் ஒரு டன்னுக்கு 1000 ரூபாய் கொடுப்பதாக அறிவித்ததை இதுவரைக்கும் அமல்படுத்தவில்லை. அதற்கு என்ன காரணம்? சட்டமன்றத்திலே எல்லா உறுப்பினர்களும் கரும்பு பற்றிப் பேசி 1000 ரூபாய் டன்னுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்தக் கணக்குப் பிரகாரம் பார்த்தால் என்னுடைய



தொகுதியிலே தரணி சர்க்கரை ஆலையில் 9.2 பிழிதிறன் கொண்ட கரும்பு வருகிறது. அந்தக் கணக்கு பிரகாரம் பார்த்தால் 900 ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டும். சில ஆலைகளில் 8.5 பிழிதிறன் இருக்கிறது. அந்தக் கணக்குப் பிரகாரம் பார்த்தாலும் 850 ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால் ஏன் கொடுக்க முடியவில்லை? தமிழகத்தில் 5 ஆண்டுகால ஆட்சி முடிய இன்னும் நான்கு மாதங்கள்தான் இருக்கின்றன. அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சரோ அல்லது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களோ, தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் மேல் ஒரு அக்கறை இருந்தால் அதற்கு நல்ல முடிவு சொல்லியிருக்க வேண்டும். இதுவரைக்கும் அதற்கு சரியான பதில் சொல்லாததற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் அரியானாவில் 8.5 பிழிதிறன் கொண்ட கரும்புக்கு ஒரு டன்னுக்கு 1000 ரூபாய் கொடுக்கிறார்கள், Purchase Tax 10 ரூபாய்க்கு மேல் அங்கே கிடையாது. ஆந்திரா, கர்நாடகம், உத்தரப்பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் எல்லாம் கரும்புக்கு Purchase Tax 10 ரூபாய்தான். ஆனால் இங்கே ஒரு டன்னுக்கு 75 ரூபாய் பிடிக்கப்படுகிறது. Cess 5 ரூபாய். அப்படிப் பார்த்தால் ஒரு டன் கரும்புக்கு விவசாயிகள் கொடுக்கக்கூடியது 80 ரூபாய். அந்த 80 ரூபாயை ஊக்கத் தொகையாகக் கொடுத்தால்கூட விவசாயிகளுக்கு திருப்திகரமாக இருக்கும். ஆனால் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்லிக்கொண்டே விவசாயிகளைப் பழிவாங்கக்கூடிய தன்மையில் விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அதற்கு சரியான விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் போன சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கட்சி சார்பற்ற முறையில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 40 கிலோ மீட்டர் பணிகள் எடுக்கப்படும் என்று வாக்குறுதியளித்தார்கள். ஆனால் இதுவரைக்கும் என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே 15 கிலோ மீட்டர்தான் எடுக்கப்பட்டிருக்கிறது. மீதிக்கு 'நிதி இல்லை' என்று சொல்கிறார்கள். போன மாதம்கூட என்னுடைய தொகுதியினுடைய அருகாமையிலே ஒரு பாலம் திறப்பு விழாவிற்காக மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். அவர்களிடமும் நேரடியாக தொகுதியிலுள்ள பிரச்சினை குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சுமார் 5 ஆண்டுகாலம் முடியப்

போகிறது. 120 கிலோ மீட்டருக்கு ரோடுகளைச் செப்பனிட வேண்டும். ரோடுகளைச் செப்பனிட நிதி வழங்க வேண்டுமென்று பலமுறை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி இல்லையே, நிதி இல்லையே என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-15*

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மன்றத்திலேயும் தெரிவித்திருக்கிறேன், நேரிலும் தெரிவித்திருக்கிறேன். பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளிலேயும் அரசு நிகழ்ச்சிகளிலேயும் தெரிவித்து இருக்கிறேன். வெறும் 15 கிலோமீட்டர்தான் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது தவறான செய்தி. குறைந்தது அந்தத் தொகுதியில் O.D.R. என்று சொல்லக்கூடிய இதர மாவட்டச் சாலைகள் இருக்கக்கூடிய நீளத்திற்குத் தக்கவாறு விகிதாச்சார அடிப்படையில் குறைந்தது 30 கிலோ மீட்டரும், அதிகப்படியாக 50 கிலோ மீட்டரும் ஒவ்வொரு தொகுதியிலும் எடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே முதல் பகுதி பணி முடிந்திருக்கிறது. இரண்டாவது பகுதிக்கு இப்போது டெண்டர் விடப்பட்டிருக்கிறது. டெண்டர் விடப்பட்டதிலே பணம் இல்லையென்று யாரோ சொன்னார்கள் என்பதை வைத்துக்கொண்டு அமைச்சர் சொன்னார் என்று சொல்லக்கூடாது. பணம் கொடுப்பதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அரசாணை பிறப்பிக்கப்பட்டதற்குப் பிறகு, அரசு பணம் கொடுத்தே தீரும். எனவே பணம் இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லை. எனவே அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. என்ன செய்வீர்களோ தெரியாது மார்ச் 31-க்குள்ளாக இரண்டாவது Phase சாலைப் பணிகளையும் முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் உறுப்பினருடைய தொகுதியிலும் பணிகள் நடைபெறுகின்றன. இல்லை என்று தவறான செய்தியைச் சொல்லக்கூடாது.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கிளைக் கழகச் செயலாளருடைய இல்லத் திறப்பு விழாவிற்கு வருகை தந்தபோது, நான் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த சாலைகள், எவ்வளவு கிலோ மீட்டர்கள் இருக்கின்றன என்று நேரடியாக மனு கொடுத்திருக்கிறேன். சென்ற மாதம் அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோதும் நேரடியாக சொல்லியிருக்கிறேன்.



**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே இருக்கக்கூடிய சாலைகள் முழுவதையும் போட வேண்டுமென்ற ஆசை அவருக்கு இருப்பதிலே எனக்கு வருத்தமில்லை. அவர்களுக்குக் கேட்க உரிமையுண்டு. ஆனால் இருக்கின்ற எல்லா சாலைகளையும் 5 ஆண்டு காலத்திற்குள்ளே போட்டு முடிக்க முடியும் என்று நான் சொல்லமுடியாது. நான் ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன். இதர மாவட்டச் சாலைகள் என்பது தமிழ்நாட்டில் 40 ஆயிரம் கிலோ மீட்டர் இருக்கிறது. இந்த 40 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளும் கடந்த 18 ஆண்டுகளில் நொறுங்கிப்போய்விட்டன, உடைந்துபோய்விட்டன. பஸ்கள் போகமுடியவில்லை. இதைச் சீர் செய்வதற்கு முதற்கட்டமாக 400 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த 400 கோடி ரூபாய் செலவழித்து சாலைகளைப் போட்டாலே போதும்; அவ்வளவுதான் முடியும். அதில் 12 ஆயிரம் கிலோ மீட்டர் இப்போது போடுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மீதம் 28 ஆயிரம் கிலோ மீட்டர் பாக்கி இருக்கிறது. அந்த 28 ஆயிரம் கிலோ மீட்டரில் உங்கள் தொகுதிக்கான விழுக்காடு இருக்கும் அல்லவா? அதையும் போடவில்லை என்று சொல்லுவது தவறு.

**திரு. ரா. ஈஸ்வரன்:** சங்கரன்கோயில் நகராட்சி, புளியங்குடி நகராட்சி சாலைகள் ஏற்கெனவே ஒருவழிச் சாலைகளாக இருக்கின்றன. அதேமாதிரி, விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்திலிருந்து திருநெல்வேலி வரைக்கும் உள்ள சாலையில் 70 சதவீதம் இருவழிச் சாலையாக இருக்கிறது. 30 சதவீதம் ஒரு வழிச் சாலையாக இருக்கிறது. இதை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் பல முறை வலியுறுத்தியும் இது நாள்வரை கவனிக்கப்படவில்லை.

புளியங்குடி ஒரு பெரிய நகராட்சி; சங்கரன்கோயில் நகராட்சியில் உள்ள சாலை பிரிட்டிஷ் காலத்தில் போடப்பட்ட சாலை. அது இன்னும் ஒருவழிச் சாலையாகவே இருக்கிறது. இப்போது மக்கள்தொகை அதிகரித்துள்ளது, வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் இன்னும் அந்தச் சாலை எடுத்துக்கொள்ளப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நேரடியாக வந்திருக்கிறார்கள். இங்கே கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்களிடம் நான் ஏற்கெனவே இரண்டு தொடக்கப் பள்ளிகள் கேட்டிருந்தேன். அவற்றைக் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்ததை சொல்லத்தான் செய்வேன்.

செய்தார்கள், மேல்நிலைப் பள்ளி கேட்டேன், கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் குடிதண்ணீர் திட்டங்கள் கேட்டேன். 3 பேரூராட்சிகளுக்குக் கொடுக்கப்பட்டு திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நகராட்சிக்கு 12 கோடி ரூபாய் திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. செய்ததை நான் சொல்லத்தான் செய்கிறேன்; மறுக்கவில்லை. முடியாத வேலைகளில் குறை இருப்பதைச் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

அதேமாதிரி, பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில், செண்பகவல்லி என்ற ஒரு ஆறு இருக்கிறது. அது கேரளத்திற்கும் தமிழகத்திற்கும் மையமாக இருக்கிறது. சுமார் 15 ஆண்டுகள் ஆகின்றன. அதன் உடைப்பை அடைப்பதற்காக 10 லட்சம் ரூபாய்க்குமேல் மதிப்பீடு தமிழக அரசால் தயார் செய்யப்பட்டது. 5 இலட்சம் ரூபாயை முன்பணமாக தமிழக அரசால் செண்பகவல்லி அணை உடைப்பை அடைப்பதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் 15 ஆண்டுகள் ஆகியும் அந்தத் திட்டப் பணிகள் நிறைவேறவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், பொதுப்பணித் துறை அமைச்சரிடமும் நேரடியாகப் பலமுறை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இதுவரையில் நிறைவேறவில்லை.

*முற்பகல் 11-20*

அதேமாதிரி உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம், 23 கோடி ரூபாயில் பகுதி-2 திட்டத்தில் அறிவிக்கப்பட்டு அதனுடைய எல்லா மதிப்பீடுகளும் தயார் நிலையில் உள்ளன. சுமார் 51 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படவில்லை. ஏதோ அறிவித்த மாதிரி இருக்கிறது. ஆனால் இன்னும் அந்தத் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருந்தால் பதில் கூறுவார்கள் என்று நினைக்கிறேன். சபையில் இல்லை. ஏனென்றால் சென்ற ஆண்டு பூலித்தேவன் கோட்டை திறப்பு விழாவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21 கோடி ரூபாய் ஒதுக்கி அறிவித்தார்கள். இன்று முழுமையான மதிப்பீடு, அதற்கு 51 கோடி ரூபாய் ஆகின்றது. வனத் துறையிலிருந்து அதற்குரிய எல்லாவற்றுக்குமே அனுமதி வழங்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் வேலை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. ஆகையினாலே அந்த வேலையை



உடனடியாக நிறைவேற்ற வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* 5 நிமிடம் கொடுங்கள். அடுத்து நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகத்தில், ஒரு நாளைக்கு 10 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். மாதம் ஒன்றிற்கு மூன்று கோடி ரூபாய்க்கு மேல் அந்தப் போக்குவரத்துக் கழகத்திலே நஷ்டம் ஏற்படுகிறது. போக்குவரத்து வாகனங்கள் நடுவழியிலே நிற்கின்றன. தகரங்கள் அப்படியே ஆடிக்கொண்டிருக்கின்றன. பேருந்திலே ஏறும்போது வேஷ்டியை கிழிக்கிறது. மோசமான நிலைமையில் இருக்கிறது. பல நேரங்களில் அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளிடம் வலியுறுத்தியும் கூட, நடுவழியில் எல்லாம் பெருவாரியான வாகனங்கள் நின்றுகொண்டிருக்கின்றன. தனியார் வாகனங்கள் முழுவதுமே—இரண்டு வாகனங்கள் வைத்திருப்பவர்கள் மறு வருடம் கூடுதலாக ஒரு வாகனம் வாங்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. நாளொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் நஷ்டம் என்றால் அதற்கு என்ன காரணம் என்ற விளக்கத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. ஆசையன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. திரு. பெ. ஆசையன்.

***திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசு கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு முன்னவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சிக்கு முந்தைய ஆட்சியினுடைய போக்கினை நான் நினைத்துப் பார்க்கிறேன். நாங்கள் இப்படிப்பட்டவர்கள்; எங்களை ஆட்டவும் முடியாது, அசைக்கவும் முடியாது என்று ஆட்சியைத் தொடங்கினார்களே, அதுபோல அல்லாமல், என்னைக் கடலிலே தூக்கிப் போட்டாலும், தமிழ் மக்கள் நீந்தி வருவதற்குப் பயன்படுகின்ற கட்டுமரமாக மாறுவேன்; என்னை அடுப்பில் இட்டுக் கொளுத்தினாலும், தமிழ் மக்கள் உணவு சமைக்கப் பயன்படும் விறகுக் கட்டையாக மாறுவேன்; என்னைத் தேங்காயாக எறிந்தாலும் தமிழ் மக்களுக்கு தின்பண்டமாக மாறுவேன் என்று சொல்லி, தன் அரசியல் வாழ்வை அமைத்துக்கொண்டு, பல்லாயிரக்கணக்கான துன்ப துயரங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு, எதிர்பாராமல், கைமாறு கருதாமல்,

தமிழ் மக்களுடைய எழுச்சியை மட்டும் முன்னிறுத்தி, பல வடுக்களையெல்லாம் தாங்கி வைத்துக்கொண்டு, தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் இந்த அவையிலே முன்நிறுத்தி, இந்த ஆட்சியைத் தொடங்கி இருக்கிற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களை எண்ணிப் பார்த்து, அவர்களுக்கு என் நன்றியை இந்த நேரத்திலே காணிக்கையாக்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

இந்த ஆட்சி அடிமட்டத் தளத்தில் இருக்கிற மக்களையும், குக் கிராமத்து மக்களையும் எண்ணிப் பார்க்கிற ஆட்சி. அப்படி இருக்கின்ற காரணத்தினாலேதான், பல குக்கிராமங்களைக் கொண்டிருக்கிற ஆண்டிப்பட்டி தொகுதியில், அதிலேயும் மலை சார்ந்த பகுதியாக இருக்கின்ற கடமலைக்குன்று சேர்ந்திருக்கிற மேற்படி வருச நாட்டுப் பகுதியில் குக்கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற, குறிப்பாக 14 கிராமங்களைச் சேர்ந்திருக்கிற மக்களை எண்ணிப்பார்த்து, அவர்களுக்கு சாலை அமைத்துத் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு, கடமலைக்குன்றிலிருந்து கோரையூத்து வரை இருக்கின்ற வெள்ளி மலைச் சாலைக்கு 2 கோடி ரூபாய் நிதியினை வழங்கி பெருமைப்படுத்தியிருக்கிற நமது மாண்புமிகு முதல்வர் அவர்களாலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த 2001-2002 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால நிதிநிலை அறிக்கையை ஆதரித்து அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய எதிர்க்கட்சியைச் சார்ந்து இருக்கிறவர்களெல்லாம், பல்வேறு கருத்துக்களைக் கடந்த நாட்களிலே தெரிவித்திருக்கிறார்கள். அவர்களின் தினந்தோறும் மிக வேகமாகப் பெருகி வருகிற பல்லாயிரக்கணக்கான தேவைகளை எட்டிப் பிடித்து பணியாற்றுவதிலே, சேவையைச் செய்வதிலே ஒரு தொய்வு இருக்கலாம். ஆனால் இதுவரை செய்யப்பட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான சேவைகளிலேயும், எந்தவிதமான குறைகளையும் பேசிட முடியவில்லை என்பதைத்தான் இப்போது நாம் உள்ளப்பூர்வமாகவே அறிந்துகொண்டிருக்கிறோம். இங்கே பேசியவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். இது இயல்பாகவே, ஒரு அரசாங்கத்தாலே செயல்படுத்தப்படுகிற காரியம்தான் என்றுகூட தெரிவித்தார்கள். அதுமாத்திரமல்லாமல், தந்தை பெரியாரின் சமூக நல கருத்துக்களைச் செயல்படுத்துவதிலே ஏதோ இந்த அரசு மாறுபட்டு இருப்பதைப்போல தெரிவித்தார்கள். அதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.



முற்பகல் 11-25

கடந்த 1989-90ஆம் ஆண்டில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலமைச்சராகவும், நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கல்வி அமைச்சராகவும் இருந்தபோது, என்னுடைய சாதாரண தொகுதியிலே 10 தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கினார்கள். ஒரு மேல்நிலைப் பள்ளியைத் தந்தார்கள். இப்போது 3 பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதேபோல 5 தொடக்கப் பள்ளிகளைத் தந்திருக்கிறார்கள். அது சாதாரண மலைப்பகுதி என்ற காரணத்தினால்—அந்த மலைப் பகுதியிலே 116 ஆசிரியர்களைக் கொண்டிருந்த பள்ளிகளில், இப்போது கூடுதலாக 130 ஆசிரியர்களை ஒரு ஒன்றியத்திலேயும், அது போல ஆண்டிப்பட்டி-பெரியகுளம் சார்ந்திருக்கிற ஒன்றியப் பகுதியில், 200-க்கு மேற்பட்ட ஆசிரியர்களை புதிதாகப் போட்டு சுமார் 300-க்கு மேற்பட்ட புதிய ஆசிரியர்களை, அந்தப் பகுதியிலே நியமித்திருக்கிறார்கள். நான் சொல்ல வருவது என்னவென்றால், இன்றைக்கு 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த ஆட்சியிலே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 40 ஆயிரம் ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள் என்பதற்காக, 40 ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வொளி தந்திருக்கிறார்கள், வேலை வாய்ப்பு தந்திருக்கிறார்கள், விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள் என்று ஒருபுறம் பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டைக்கூட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இன்னும் ஒரு பகுதியிலே 40 ஆயிரம் ஆசிரியர்களை நியமனம் செய்திருக்கிறார்கள் அந்த 40 ஆயிரம் ஆசிரியர்களை நியமனம் செய்திருக்கிறபோது, எங்களுக்கெல்லாம் பெரும் அளவிலே வேலைப்பளு குறைந்திருக்கிறது என்று சக ஆசிரியர்கள் சொல்கிறார்கள். அதைப் பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டுதலைக்கூட அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இது போன்று 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதன் மூலம், இன்னொரு ஆட்சியாக இருந்திருக்குமேயானால், 400 கோடி ரூபாய் மக்களுடைய பணம் லஞ்சமாகப் பெறப்பட்டிருக்குமே, அது தடுக்கப்பட்டிருக்கிறது இந்த ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) என்றெல்லாம் சொல்கிறார்கள், பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டைக்கூட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இவர்களுடைய சிந்தனைகள் எல்லாம் வேறு ஒரு வகையிலே இருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடங்களில், 40 ஆயிரம் ஆசிரியர்கள் வரை இல்லாமல்

இருந்திருக்கிறார்களே, அது எந்த எந்த இடங்களிலே இருந்திருக்கிறது, குக்கிராமங்களில், சாதாரண கிராமங்களிலேதான் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பெரும் அளவில் நிரப்பப்படாமல் இருந்திருக்கிறார்கள். அங்கே படிப்பவர்கள் எல்லாம், ஏழைகள். தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பழங்குடியினர். இப்படிப்பட்டவர்கள் படிக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள்தான் இத்தகைய ஆசிரியர்கள் இல்லாமல் கல்வி போதிக்கப்படாமல் கிடந்திருக்கிறது. அந்த நிலை நீடித்திருக்குமேயானால், இன்னும் ஒரு 10 ஆண்டுகள் நீடித்தால், அந்தச் சமூகத்தைச் சார்ந்திருக்கிற மக்கள் கல்வி அறிவு இல்லாமல் போய் இருண்டு போய் இருப்பார்களே. நான் கேட்கிறேன். 10, 15 ஆண்டு காலம் இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலேயே இருந்திருந்தால், இந்தப் பள்ளிக்கூடங்கள் எப்படி இருந்திருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் 30 ஆண்டுகளுக்கு முன்னால் கைகொடுக்காமல் இருந்திருந்தால், அவர்கள் தொடர்ந்து இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக உழைப்பதற்கு வாய்ப்பு கொடுக்காமல் இருந்திருந்தால், இன்னும்கூட சொல்லப்போனால், தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகவும், இப்போது நம்முடைய அவை முன்னவர் அவர்களை கல்வி அமைச்சராகவும், இந்த மக்கள் ஆதரவு தந்து அமர்த்தியிருக்காவிட்டால், கடந்த ஆட்சி இன்னும் ஒரு 10 ஆண்டு காலத்திற்கு நீடித்திருக்குமேயானால், 20, 30 ஆண்டு காலத்தில் இந்த ஆசிரியர்கள் நிரப்பப்படாமல் போயிருந்தால், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பழங்குடியினர் கல்வி அறிவு இல்லாமல் போய் இருண்டு போய் இருப்பார்கள். ஒரு காலத்திலே சொன்னார்களே, சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் கல்வியைக் கற்றுக்கொடுக்கக்கூடாது என்று. மதம் கொண்ட யானைக்குக்கூட கல்வியைக் கொடு, ஒரு வெறி கொண்ட குதிரைக்குக்கூட கல்வியைக் கொடு, ஆனால் ஒரு சூத்திரனுக்கும், பஞ்சமர்க்கும் கல்வியைக் கொடுக்காதே என்று சொன்ன அந்த வர்ணாசிரம தத்துவம் இருக்கிறதே அது அல்லவா இன்றைக்கு ஆக்கிரமித்துக்கொண்டு வளர்ந்திருக்கும். அது அல்லவா இன்றைக்கு கோலோச்சியிருந்திருக்கும். அதையெல்லாம் முறியடித்துவிட்டுத்தான் இந்த முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய அன்பிற்குரிய, மரியாதைக்குரிய த.மா.கா. உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். சில கருத்துக்களைச் சுட்டிக்காட்டி கடந்த காலத்திலே இருந்த கூட்டணிப் பிரிவுகளைப்



றி எல்லாம் பேசினார்கள். இந்த ஆட்சி தொடங்கப்பட்டபோது, ாடர்ந்து வந்த 6 மாத காலத்திற்குப் பின்னாலே ஏற்பட்ட ழ்வுகளை நான் எண்ணிப் பார்க்கின்றேன். இந்த அவையிலேதான் ான்னார்கள். இங்கே த.மா.கா. உறுப்பினர்கள் பல பேர் இந்த வையிலே என்ன சொன்னார்கள்? செய்வதைச் சொல்வோம் என்று ான்னீர்கள். சொன்னதைச் செய்வோம் என்று சொன்னீர்கள். ர்தலிலே என்ன வாக்குறுதி கொடுத்தீர்கள்? ஊழலற்ற ஆட்சி ருவோம் என்றீர்கள். ஊழலுக்குத் துணை போக மாட்டோம் என்று சான்னீர்கள். ஊழல் வாதிகள்மீது நடவடிக்கை எடுப்போம் ன்றெல்லாம் சொன்னீர்கள். நாங்கள் இப்போது கேட்கிறோம். முந்தைய ாலத்தில் ஆட்சிபுரிந்த அந்த முதலமைச்சர்மீதும், அந்த மைச்சர்கள்மீதும் அந்த ஊழல்வாதிகள்மீதும் ஏன் இன்னும் டவடிக்கை எடுக்கவில்லையென்று கடுமையாக எச்சரித்தார்கள்.

முற்பகல் 11-30

அந்த நாளை நினைத்துப் பார்க்கின்றேன். அன்றைக்கு எச்சரித்து விட்டு என்ன சொன்னீர்கள்? நீங்கள் எல்லாம் சொன்னது, நீங்கள் அ.இ.அ.தி.மு.க.வோடு பேரம் பேசிக்கொண்டீர்களா? ஜெயலலிதாவோடு கை கோர்த்துக்கொண்டீர்களா? அ.இ.அ.தி.மு.க. அவைத் தலைவருக்கும், உங்களுக்கும் நட்பு இருக்கிறதா? ஏன் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவில்லை? ஊழல்வாதிகள் தண்டிக்கப்பட ஏன் ஏற்பாடு செய்யவில்லை என்றெல்லாம் கண்டனம் தெரிவித்துப் பேசி, இந்த அவையை விட்டு வெளிநடப்புச் செய்தீர்கள். அதுமாத்திரமல்ல. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் அதே கோரிக்கையை வைத்துவிட்டு, இந்த அவையிலே கண்டனம் தெரிவிப்பதைப்போல உரையாற்றிச் சென்றது. அதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறோம். ஆனால் இப்பொழுது என்ன நிலை? நீங்கள் இன்றைக்கு எப்படி கை கோர்த்து இருக்கிறீர்கள்? இது நியாயம்தானா? ஆகவே இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஊழலுக்குத் துணை போகமாட்டோம் என்று ஒரு கட்சியை ஆரம்பித்துவிட்டு, இன்றைக்கு ஊழலோடு கை கோர்ப்பது எந்த வகையில் நியாயம்? இதற்குத் தேவையற்ற ஒரு காரணத்தைச் சொல்லக் கூடாது. நான், இந்த ஆட்சிமீது குறை சொல்பவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். நீங்கள் வேண்டுமானால் சொல்லலாம், எப்படிச் சொல்லலாம்? பெரும்பகுதியான சாலைகள்போடப்பட்டுவிட்டன. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால்கூட பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயில்—இங்கே வாய்ப்பு இல்லாத காரணத்தினால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. அனைத்துச் சாலைகளும் போடப்பட்டு விட்டன. 165-க்கு மேற்பட்ட மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டிகள், 70 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள்,

ஏராளமான நெடுஞ்சாலைப் பாலங்கள், கோடிக்கணக்கான ரூபாய்க்கு பாலங்கள்—இந்தப் பணிகள் எல்லாம் முடித்து, நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வளவு இருக்கிறபோது, நீங்கள் வேண்டுமானால் சொல்லலாம், இத்தனை சாலைகளையும் போட்டிருக்கிறீர்களே, அந்த விடுபட்டுப்போன ஒரு சாலையை ஏன் போடவில்லை என்று கேட்டு நீங்கள் பேசலாம். இத்தனை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டியிருக்கிறீர்களே, அதைச் சரியாக இயக்கவில்லையே பஞ்சாயத்தில், அதிலே குறை இருக்கிறதே ஒரு இடத்தில் என்று வேண்டுமானால் பேசலாம். இத்தனை பஸ்களைக் கொடுத்திருக்கிறீர்களே, அதிலே ஒன்று பழையதாக இருக்கிறதே என்று வேண்டுமானால் பேசலாம். இப்படி ஒவ்வொரு வகையிலேயும் நீங்கள் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனாலும் இந்த ஆட்சியைப் பற்றி குறை சொல்வதற்கு உங்களால் முடியுமா என்றால் இல்லை. இப்படித்தான் பேச முடியும். எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஒரு தடை இருக்கிறது. ஒன்றும் செய்யப்படவில்லை; ஒரு காரியத்தில் தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டிக்கொண்டு பொழுது போக்கலாமே தவிர, இந்த ஆட்சியின் நான்கரை ஆண்டு காலப்போக்கை எந்த வகையிலும் குறை சொல்ல முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே அந்த அடிப்படையிலேதான் இந்த ஆட்சி தொடங்கப்பட்டு, இந்த ஆட்சி நிறைவு விழாவைக் கண்டுகொண்டு, மீண்டும் தொடர்ச்சியாக தமிழகத்தினுடைய முதல்வர்தான் இந்த ஆட்சிப் பொறுப்பை அலங்கரிப்பார் என்ற நம்பிக்கையோடுதான் மக்கள் இருக்கிறார்கள். இதற்கு ஒரு காரணம் உண்டு. நீங்கள் இவ்வளவு நாளும் இவ்வளவு பேசிவிட்டு நாளை தெருவிற்குச் சென்று, முந்தைய ஆட்சியாளர்களைப் பற்றி இவ்வளவு பேசிய நீங்கள் கைகோர்த்துச் சென்றால் அந்த ஊழலில் உங்களுக்குப் பங்கு இருக்கிறது என்று சொல்ல மாட்டார்களா? அந்தக் கேள்வி வரும். ஆகவே களத்திலே சந்திக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் மக்கள் என்பதை...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எல்லாம் ஊழலைப் பற்றிப் பேசிவிட்டு அவர்களுடன் கைகோர்த்துக்கொண்டு மக்களிடத்திலே போய் வாக்கு கேட்டால் உங்களையெல்லாம் எதிர்த்துக் கேட்கமாட்டார்களா என்று சொல்கிறார்கள். உங்களைப் பார்த்தும் கேட்பார்கள். பண்டார சன்னியாசிகள் எல்லாம் இந்த நாட்டிலே காவித் துண்டை அணிந்துகொண்டு போகிறார்களே அப்படி என்று சொல்லி நீங்களும் பேசியிருக்கிறீர்கள். உங்களைப் பார்த்தும் அந்தக் கேள்வியைத் திரும்பக் கேட்பார்கள்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. பழனிசாமி அவர்கள் சொன்னதை மறுக்க வேண்டும் என்று எனக்கு ஒன்றும் வேகமோ, ஆர்வமோ, கோபமோ எதுவும் இல்லை. போயும் போயும் நாங்கள் பரதேசியோடுதான் போகிறோம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) பரதேசியோடு போகிறவர்களைப் பார்த்து எல்லோரும் பரிதாபம்தான் படுவார்கள். ஆனால் நீங்கள் போகிற இடத்தில் எவ்வளவு வசதி, வருமானம் என்று கேட்டால் நாங்கள் என்ன சொல்ல முடியும் (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பெ. ஆசையன்:** எனவே நாங்கள் தவறான வழியில் போகவில்லை என்று காட்டுகின்ற வகையில்தான் கடந்த பாராளுமன்றத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்திருக்கிற கூட்டணிதான் மக்களால் முன் நிறுத்தப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி, என்னுடைய தொகுதியிலே ஏறத்தாழ 3 ஒன்றியங்களைக் கொண்டிருக்கிற தொகுதியில் 100 கோடி ரூபாய்க்கு நிகராக வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 90 சதவீதப் பணிகள், தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. வரலாற்றில் இது ஒரு பொற்காலம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லி, இந்த வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

*முற்பகல் 11-35*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதி, மதப்பித்து என்னும் சனி தொலைந்தால்தான் சமத்துவம் என்னும் ஞாயிறு பிறக்கும் என்பது கலைஞருடைய பொன்மொழி. இது எல்லா பேருந்துகளிலும் மற்ற இடங்களிலேயும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு தொலைநோக்குப் பார்வையோடு அந்தக் கருத்துக்களை வெளியிட்ட கலைஞர் நேற்று முன்தினம் அவையிலே ஒரு செய்தியைச் சொன்னார். அயோத்தியிலே இராமர் கோயில் கட்டப்படுமானால் தி.மு.க. பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது என்று. எங்களுக்கே அது மகிழ்ச்சிதான். ஆனால் நேற்றையதினம் மத்திய அமைச்சராக இருக்கின்ற உமாபாரதி, சென்னை வந்தவர் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். இராமர் கோயில்

கட்டுவது குறித்து என்னுடைய முழு ஆதரவும் அதற்கு உண்டு என்று மத்திய அமைச்சர் சொல்கிறார். விஸ்வ இந்து பரிஷத் சொல்லியிருந்தால் பரவாயில்லை. இந்து முன்னணி சொன்னால் பரவாயில்லை. பஜ்ரங்தளம் சொல்லியிருந்தால் பரவாயில்லை. இங்கே நம்முடைய சகோதரர் வேலாயுதன் அவர்கள், வாஜ்பேயி அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை, மறுத்து அறிக்கை விட்டிருக்கிறார், இதை இந்த அரசு பார்த்துக்கொண்டிருக்காது என்று பாரதிய ஜனதா கட்சி ஆட்சி சொன்னது என்று சொன்னார். ஆனால் அந்த பாரதிய ஜனதா கட்சியிலே அங்கம் வகிக்கிற உமாபாரதி சொல்கிறார், கோவில் கட்டுவதிலே எனது முழு ஆதரவு உண்டு என்று. கலைஞர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைச் சேர்ந்த நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கத்தைச் சொன்னார். இதற்கு என்ன நீங்கள் கருத்து சொல்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அமைச்சரும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்கள் தங்கள் ஆசையை எந்த இடம் கிடைக்கிறதோ அந்த இடத்திலே வெளியிடுகிறார்கள். அது உலகத்திலே எல்லா நாட்டு அரசியலிலும் இருப்பது. நம்முடைய நாட்டு அரசியலிலும் அது இன்னும் அதிகமாக இருக்க இயல்பான வாய்ப்பு இருக்கிறது. இரண்டு கம்யூனிஸ்டுகள்கூட ஒரே குரலில் பேசுவது கிடையாது. கம்யூனிஸ்ட் கொள்கைதான் இருப்பதற்குள் Regimented. முறைப்படுத்தப்பட்ட ஒரு வாய்ப்பாட்டுக்குள் அடங்குவது. அவர்களே ஒன்றாகப் பேசுவதில்லை. கலைஞர் அவர்கள் சொன்ன அந்த அடிப்படை மத வாதத்தையும் மத வெறியையும் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்பது அந்த அடிப்படையிலே ஜாதி வெறி மத வெறி அவைகளுக்கு எதிர்ப்பானது. பாரதிய ஜனதா கட்சியிலேயே மத வெறியை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள். மத வெறிக்கு ஆட்பட்டவர்களும் இருக்கிறார்கள். இப்பொழுது நாம் எவ்வளவுதான் கம்யூனிஸ்டாக இருந்தாலும், தி.மு.க. வாக இருந்தாலும் நாம் ஜாதியை விட்டு வெளியிலேயா வந்துவிட்டோம்? வந்ததாக எனக்கு இன்னும் தெரியவில்லை. அது உலக சூழ்நிலை. ஆகவே அந்த உணர்வுகள் இருக்கும். ஆனால் பாபர் மசூதியை இடித்தபோது அன்றைக்கு இந்தியாவினுடைய பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்கள் அதைப்



பார்த்துக்கொண்டிருந்ததைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் பார்த்துக்கொண்டிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் இந்த ஆட்சியினுடைய கொள்கை நிலையைத் தெளிவுபடுத்தியதைப் பத்திரிகையிலே பார்த்த நிருபர்கள் கேட்கிறார்கள். கேட்ட கேள்விக்கு உமாபாரதி இந்த பதிலைச் சொல்கிறார். இதைப்போலத்தான் குஜராத்திலே தேவாலயம் இடிக்கப்பட்டபோது அதைக் கண்டித்து உண்ணாவிரதம் இருப்பதற்காக இங்கிருந்து எஸ்றா சற்குணம் சென்றார். அந்த மாநிலத்தினுடைய உள் துறை அமைச்சருக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கடிதம் கொடுத்து அங்கே அனுப்பினார். அந்தக் கடிதத்தைக்கூட ஏறெடுத்துப் பார்க்க மறுத்து திருப்பி அனுப்பிய கதை நடந்தது. இது ஒரு முதிர்ந்த அனுபவம். படைத்த நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குக்கூட மனவேதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதுதான் உண்மை. ஆகவே பாரதிய ஜனதா கட்சியினுடைய அடிப்படைக் கொள்கைகளும் கோட்பாடுகளும் என்னவாக இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிற வகையிலேதான் இது அமைந்திருக்கிறது.

இங்கே சட்டமன்றத்தில் அதிகமான முறைகள் வீரப்பன் விஷயத்தைப்பற்றி தொடர்ந்து பேசினாலும்கூட அது இன்னும் மர்மமாகவே இருக்கிறது. அந்த வீரப்பன் இப்பொழுது காட்டிலே இருக்கிறானா, நாட்டுக்குப் போய்விட்டானா என்று தெரியவில்லை. இப்பொழுது அதை குறித்து முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்ற செய்தி இங்கே பொருத்தமான முறையிலே சட்டமன்றத்திற்கு வழங்கப்படுகிறது. ஆனாலும் ராஜ்குமார் விடுதலை செய்யப்படுவதற்கான முயற்சிகளை எடுக்கிறபோது எல்லா எதிர்க கட்சிகளுமே ஏற்றுக்கொண்டோம். அதிலே ஏதாவது ஒரு பாதிப்பு வந்துவிடக்கூடாது என்ற காரணத்தினாலே கருத்து மாறுபாடுகளை வெளியிடக் கூடாது என்று அனைத்து அரசியல் கட்சிகளுமே ஒத்துழைத்தார்கள். ஆனால் அந்த ராஜ்குமார் விடுதலை செய்யப்பட்டது எப்பொழுது நடந்தது, எப்படி நடந்தது, யாரால் நடந்தது என்பதே புதிராக இருக்கிறது. அப்பொழுது வீரப்பன் கோரிக்கைகள் வைக்கிறபோது கோரிக்கைகளோடு தீவிரவாத கருத்துக்களைக்கூட அவர் வெளிப்படுத்தினார். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை என்று தெரியவில்லை. உயர் அதிகாரிகள், பாலச்சந்தர் போன்றவர்கள், இன்னும் மற்ற அதிகாரிகளை எல்லாம்--- இங்கே நாட்டிலே பல கொள்ளை, கொலை எல்லாம் நடந்து

கொண்டிருக்கிறபொழுது அதைத் தடுப்பதற்குரிய முயற்சி எடுக்க வேண்டிய காவல் துறை அதிகாரிகளை எல்லாம் அங்கே காட்டுக்கு அனுப்பி இருக்கிறோம். அவர்கள் போய் அந்தத் தேடுதல் வேட்டையில் என்ன செய்கிறார்கள், என்ன பண்ணுகிறார்கள் என்றே தெரியாத மர்மமாக, புதிராக இருக்கிறது. இதைத் தெளிவுபடுத்துவதற்கான முயற்சியை நம்முடைய அரசு செய்யவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு பெரிய காடாக இருக்கின்ற காரணத்தினால் ரொம்ப நாளாக மர்மக் கதைதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த மர்மக் கதையிலேயிருந்து வெளியிலே வருவதற்குத்தான் அரசாங்கம் பணியாற்றிக்கொண்டு இருக்கிறது. இன்று காவலர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இப்பொழுது நம் தமிழகத்திலே இருக்கிற இந்து முன்னணித் தலைவர் ராமகோபாலன் அவர்கள் எங்கே போனாலும் ஒரே கலவரத்தைத்தான் கிளப்பிக்கொண்டிருக்கிறார். கோயில்களைப் பாதுகாக்கின்றேன் என்று சொல்கிறார். ஆனால் அவருடைய பேச்சுக்களும் அவருடைய நடத்தைகளும் கலவரத்தை உண்டுபண்ணுவதற்கான முயற்சிகளாகத்தான் இருக்கின்றன. ஆனால் இப்பொழுது சமீபத்தில் வந்திருக்கிற செய்தி, முதலமைச்சருக்கும் அவருக்கும் ரொம்ப நல்ல சுமூகமான, இணக்கமான உறவு நிலைகள் வந்துவிட்டன என்று பாரதிய ஜனதா கட்சியினுடைய பொதுச் செயலாளர் இல. கணேசன் அறிவிக்கிறார்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சுமூகமான உறவு என்றால் என்ன? மாண்புமிகு மூப்பனார் அவர்களும் கலைஞர் அவர்களும் மிக நெருங்கிய நண்பர்கள் என்று இரண்டு பேரும் சொல்கிறார்கள். அதற்கு என்ன அர்த்தம் என்பது உங்களுக்கே தெரியும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் மூப்பனார் அவர்களுக்கும் இருக்கிற அந்த உறவு நிலைகளைச் சொல்வதைப் புரிந்துகொள்ளலாம். ஆனால் ராமகோபாலனுக்கும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் இருக்கிற நெருங்கிய சுமூக உறவு என்பதுதான் என்ன என்பதுதான் கேள்வி.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நெருங்கிய என்கிற வார்த்தைக்கு அங்கே அதிகம் இடம் இல்லை. ஆனால் சுமூகம் என்கிற வார்த்தைக்கு அதிகம் இடம் உண்டு.

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தொடர்ந்து இங்கே விவசாயிகளுடைய பிரச்சினை சொல்லப்படுகிறது. அதைக் கேட்டவுடனே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தினமும் என் துறைபற்றித்தான் பேச வேண்டுமா என்று கையைக் காட்டிச் சொல்வார்கள். இருந்தாலும், துறை அவர்களிடத்திலே இருக்கிறதே, அதனால் வேறு வழியில்லை. கூட்டுறவுக் கடன் சம்பந்தமான விஷயங்களுக்கு கண்டுபிடித்துச் சொல்கிற காரணங்கள் இருக்கின்றன பாருங்கள், அவைபற்றி கண்டுபிடிக்க முடியாத புதிராக அந்தச் செய்திகள் சொல்லப்படுகின்றன.

குறிப்பாக 1993-94-ல் பெரு வெள்ளம். 1994-95-லேயும் 1996-லேயும் கடும் வறட்சி, 1998-99-ல் மறுபடியும் வெள்ளம். இந்த 3, 4 ஆண்டுகளுமே இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டது என்பதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு வரியைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். நில வரியை ரத்து செய்தோம். இந்த அரசாங்கமே கூட்டுறவுக் கடன்களை ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்லியது. அப்படி என்றாலே இயற்கைப் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிற விவசாயிகளாலே திரும்பக் கடனைச் செலுத்த முடியாது என்பதை அரசாங்கமே ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலேதானே வரியை ரத்து செய்தோம், கடனை ஒத்தி வைத்தார்கள். அப்படி ஒத்தி வைத்ததைத் திரும்ப அதே விவசாயிகளைச் செலுத்த வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது எந்த வகையிலே நியாயம்? இதற்குக் காரணம் கண்டுபிடித்து விஷயங்களைச்சொல்லிக் கொண்டேயிருக்கலாம். NABARD வங்கி சொல்வதும் மற்றவர்கள் சொல்வதும், நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் பணத்தைக் கட்டுவதற்கு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் NABARD வங்கி மறுக்கிறது என்பதுதான். இந்தக் காசுக்கும் அந்தக் காசுக்கும் என்ன வித்தியாசம்? அது வேறு நோட்டா? அது என்ன டாலராகக் கொடுக்கிறோமா அல்லது இதை வேறு நாணயத்திலே கொடுக்கிறோமா? வித்தியாசம் என்ன என்று தெரியவில்லையே! இந்த அரசாங்கம் கொடுத்தால் என்ன, யார் கொடுத்தால் என்ன? கொடுக்கிற பணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதானே NABARD?



18481

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூங்குகிறவர்களை எழுப்பலாம், ஆனால் தூங்குவதுபோல் நடிக்கிறவர்களை எப்படி எழுப்புவது? நாங்கள் தினமும் இந்த விளக்கத்தைச் சொல்கிறோம். விளக்கத்தைப் புரிந்துகொண்டு விட்டு மீண்டும் மீண்டும் தன்னுடைய பேச்சைப் பதிவுசெய்ய வேண்டுமென்பதற்காகவே இங்கே பதிவுசெய்தால் அதற்கு நான் சொன்ன பதிலையேதான் திரும்பச் சொல்ல வேண்டிவரும். 1993-94 மற்றும் 1996-97-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளச் சீற்றத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது தமிழ்நாடு அரசு அந்தக் கடனைத் தள்ளி வைத்தது. கடனை வசூல் செய்யத் தேவையில்லை, அடுத்த ஆண்டு வசூல் செய்துகொள்ளலாம் என்று சொல்லி தள்ளி வைத்தது. இப்போது 2000 ஆண்டு. அதிலே 6.5 சதவீதம் வட்டியைத் தள்ளுபடி செய்து கொடுத்தது. இப்போது 7 சதவீதம் வட்டியைத் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறது. அவர்கள் ஒத்துக்கொள்ளாததை நாம் செய்தோமானால் திரும்ப நிதி தரமாட்டார்கள். இதுதான் நிதர்சனமான உண்மை. ஆனால் ஒன்று, இன்றைக்குக் கட்டாயப்படுத்துகிறோம் என்று சொல்கின்றார்களே, 6 வகை கடன்தாரர்களை மட்டும்தான் நாங்கள் பணம் தாருங்கள் என்று கேட்கிறோம். அரசு வேலையிலே இருந்து விவசாயம் செய்யக் கடன் வாங்கியிருப்பவர்கள் அல்லது டிராக்டர் போன்ற வாகனங்களை வாங்கியிருப்பவர்கள், பல்வேறு தொழில்களைச் செய்கின்ற விவசாயிகள், விவசாயத்தோடு பல தொழில்களைச் செய்கின்றவர்கள், இப்படி வருமானமுள்ள விவசாயிகளிடம் மட்டும்தான் பணம் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறோமே தவிர, ஏழை விவசாயிகளிடம் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. ஒருசில இடங்களில் நடவடிக்கை எடுத்து அது குறிப்பிட்டுக் காட்டப்பட்டபோது அவர்கள்மீது நடவடிக்கை எடுத்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்து அதை நிறுத்தச் சொல்லி அரசு சார்பாகச் சொல்லியிருக்கிறோம். இதுதான் இன்றைய நிலைமை. சிவபுண்ணியம் அவர்கள் மீண்டும் மீண்டும் இதையே பேசினாலும் இதே பதில்தான்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிறைய குறுக்கீடு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப அதே பதிலைச் சொல்கிறார்கள். நாங்களும் திரும்பத் திரும்ப அதையே கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்றும் சொல்கிறீர்கள். இது ஒரு தீவிரமான மிக முக்கியமான ஒரு கோரிக்கை என்ற காரணத்தினால்தான் திரும்பத் திரும்பச் சொல்கிறோம். இதற்குத் தீர்வு



இப்படித்தான் என்று சொன்னால், இந்தத் தீர்வு வெளியிலே அரசியல் தீர்வாகவேதான், முடிவாகத்தான் வரப்போகிறது. அதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத்தான் நான் இதிலே சொல்ல விரும்புகிறேன்.

குத்தகை விவசாயிகள் பிரச்சினையையும் நாங்கள் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்திலே பேசிக்கொண்டிருக்கிறோம். தனியார் குத்தகை, கோவில் மற்றும் மடங்கள், தர்ம ஸ்தாபனங்களினுடைய நிலங்களில் சாகுபடி செய்யக்கூடிய குத்தகை விவசாயிகளும் இதே மாதிரியான பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். நில வெளியேற்றம் நடக்கிறது. ஆகவே இதே காரணங்களால் அந்தக் குத்தகை விவசாயிகளை நில வெளியேற்றம் செய்வதையும் தடுக்க வேண்டும். அவர்களுக்குரிய அந்தக் குத்தகைகளைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அதேபோல தென் மாவட்டங்களும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** துணைத் தலைவர் அவர்களே, அதாவது தள்ளுபடிதான் பண்ண வேண்டும்; வெளியேற்றவும் கூடாது, ஆனால் நிலத்திற்குக் குத்தகையே கொடுக்கக் கூடாது. அப்படியொரு கொள்கையா உங்களுக்கு? அல்லது கோவிலுக்குக் குத்தகையே கொடுக்கக்கூடாது, வெளியேற்றவும் கூடாது, தள்ளுபடியும் பண்ண வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** விளைந்த ஆண்டுகளுக்கு விவசாயிகள் கொடுப்பதை யாரும் மறுப்பதில்லை.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** துணைத் தலைவர் அவர்களே, என்றைக்காவது அவர்கள் கொடுத்திருக்கிறார்களா என்று கேட்கிறேன் நான். நானே புள்ளி விவரத்தைச் சொல்கிறேன். திருவாரூர் தியாகராஜசுவாமி கோவிலிலே ஓர் ஆண்டிற்கு வர வேண்டிய நெல் 1049 குவிண்டால். கடந்த 11 ஆண்டுகளாக ஒரு படி நெல்கூட வரவில்லை. இதற்கு என்ன பதில்?

முற்பகல் 11-45

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதற்கு இயற்கைச் சீற்றம்தான் பதில்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** 11 ஆண்டுகளாக விளையவே இல்லையா அங்கே?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாறி, மாறி அந்த மாவட்டம் தொடர்ந்து பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் முதலிலே

புரிந்துகொள்ள வேண்டும். நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை மாவட்டம்...

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** *11* ஆண்டுகளாக திருவாரூரிலே விளையவே இல்லையா என்று கேட்கிறேன். விளைந்த ஆண்டுகளில் கொடுத்திருந்தீர்களென்றால் இன்றைக்கு உங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** விளைந்து இருக்கிறது, விளைந்திருக்கிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** கோவில்களும் வாழ வேண்டும் என்றால் முதலிலே குத்தகையை ஒழுங்காகக் கொடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கோவில்களும் வாழ வேண்டும். தெய்வமும் வாழ வேண்டும். இது இரண்டும் வாழ வேண்டுமானால், விவசாயி உயிரோடு இருந்தால்தான் தெய்வமும் வாழும்...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இவ்வளவு பெரிய பழியை சுமத்தக் கூடாது அமைச்சர் அவர்கள். நானே கோயில் குத்தகை விவசாயிதான். விளைந்த வருடங்களில் நானே கொடுத்திருக்கிறேன். இந்த வருடம்கூட கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** திருத்துறைப்பூண்டியில் கொடுத்திருக்கிறீர்கள், நாகப்பட்டினத்திலும் கொடுத்திருக்கிறீர்கள். அது வேறு. நான் கேட்பது திருவாரூர் தியாகராஜசுவாமி கோவிலில் *1049* குவிண்டால் நெல் வரவேண்டியிருக்கிறது. *11* ஆண்டுகாலமாக ஒரு படி நெல்கூட வரவில்லை. இது புள்ளிவிவரம். இதற்கு என்ன பதில் இருக்கிறது என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இப்படி ஒரு சில இடங்கள் இருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகள் எல்லோரையுமே நிலத்தைவிட்டு வெளியேற்றுவது என்றால் முடியுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மற்ற மாவட்டங்களில் எல்லாம் ஒழுங்காகத்தான் வந்துகொண்டிருக்கிறது. திருவாரூர், நாகப்பட்டினம், திருநெல்வேலி, தஞ்சாவூர் இந்த *4* மாவட்டங்களில்தான் இந்தப் பிரச்சினையே.



**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்த நான்கு மாவட்டங்களிலேதான் கோவில் தர்ம ஸ்தாபனங்களுக்கு அதிக நிலமே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அவர்களைப் பாதிக்கச் செய்யாத முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அடுத்தது தூர்வாருகிற பணிகள். இந்த விவரங்களை எல்லாம் இங்கே கொடுத்து நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இப்போது நமது தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஆற்றுப் பாசனம் பகுதியிலே *65* இலட்சம் ஹெக்டேர், ஏரிப் பாசனப் பகுதியிலே *20* இலட்சம் ஹெக்டேர், கிணற்றுப் பாசனப் பகுதியிலே *25* இலட்சம் ஹெக்டேர், மொத்தம் *110* இலட்சம் ஹெக்டேர் பாசனப் பகுதிகள் இருக்கின்றன. ஆனால் அதில் தூர்வாரியிருப்பது வெறும் *12.5* ஹெக்டேர் நிலத்தில்தான், பாசனப் பகுதிக்குத்தான் தூர்வாரப்பட்டிருக்கிறது. இன்னும் நிறைய தூர்வார வேண்டியிருக்கிறது. இதிலே பல பிரச்சினைகளும், முறைகேடுகளும் இருக்கின்றன. அதை விசாரிப்பதற்கு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், (குறுக்கீடு) *13* நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறுக்கீடுகள் நிறைய வந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகள் வராமல் பேச வேண்டும். பேசியதையே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதேபோல, உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி வழங்கவில்லை என்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இது உடனடியாக வழங்கப்பட வேண்டும். நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. இன்றைக்குக்கூட உள்ளாட்சி எழுத்தர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அதில் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கொடுக்க வேண்டிய நிதி மூன்றாவது தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த தவணைபற்றி பிறகு பேசிக்கொள்ளலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலப் பணியாளர்கள் போராட்டத்தைப்பற்றியும் கவனிக்க வேண்டும். அதுபோல, நாகப்பட்டினம் மீனவர்கள் இரண்டு பேர் துப்பாக்கிச் சூடு. இது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. இலங்கை கடற்படையால் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி உயிர் இழப்பு ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. நிவாரணம் கொடுத்தோம் என்று அமைச்சர் அறிவிப்பு சொன்னாலும்கூட இதிலே இந்த மாதிரியான பாதிப்பு ஏற்படுகின்றபோது அந்த மீனவர்களுக்குரிய பாதுகாப்புபற்றி நமது மாநில அரசாங்கம் என்ன முயற்சிகளை எடுத்தது என்பது பற்றியும் நான் அறிய விரும்புகிறேன்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பேசியதிலிருந்தா?

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை, இந்தப் பாயின்ட்டை ஒட்டிப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிற உள்ளாட்சித் துறை எழுத்தர்களால் தொடர்ந்து பல்வேறு கோரிக்கைகள் சொல்லப்பட்டு வருகின்றன. அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து சம்பந்தப்பட்டவர்களை, போராடுகிறவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஏதாவது ஒரு சுமூகத் தீர்வு காண்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முறை அவர்கள் என்னை வந்து பார்த்திருக்கிறார்கள். அதுசம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறேன். அதற்குப் பிறகு ஒரு முடிவு எடுத்து சில கோரிக்கைகளை நிறைவேற்றி இருக்கிறோம். மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக அவர்கள் கோரிக்கைகளைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அது நிதித் துறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. துறையிலிருந்து செய்யப்பட்ட சிபாரிசுகளை முடித்திருக்கிறோமே தவிர, அதிலே எதுவும் விடப்படவில்லை. அவர்கள் கோரிக்கைகளை



மறுபடியும் பரிசீலிக்க வேண்டுமென்றால் இன்னொரு முறை அவர்கள் பேச விரும்பினால் அதுபற்றி பிறகு பேசிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், (குறுக்கீடு) 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், தனியாகப் பேசிக்கொள்ளுங்கள், திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"

என்ற திருக்குறளை நினைவுபடுத்தி குடிமக்கள் அஞ்சும்படியாக ஆட்சி செய்யும் அரசு நிச்சயமாக விரைவிலே அழியும் என்பதைத் தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்னுடைய ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியானது மிகச் சிறப்பாக ராசியான ராசிபுரமாக இருந்தது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு எங்களுடைய ராசிபுரம் தொகுதி ராசியில்லாதபுரமாக மாறிவிட்டது.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சியிலேதான் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் அலைந்தார்கள். இப்போது 40 லிட்டருக்குக் குறையாமல் தண்ணீர் பெற்றுக்கொண்டு நிம்மதியாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகாலமாக இந்த மாமன்றத்திலே நான் பேசிக்கொண்டிருக்கிறேன். தொழில் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இராசிபுரம் தொகுதியில் ஒரு பெரிய தொழிற்சாலை அமைக்கப்படும், அமைக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்துக்கொண்டேதான் இருந்தார்கள். ஆனால் இதுவரை அந்த வாக்குறுதி செயல்படுத்தப்படவே இல்லை. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய தொகுதி முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகின்றது. இதுதான் உங்களுடைய ஆட்சியின் சாதனை.

அதேபோல இராசிபுரத்தில் பை-பாஸ் ரோடு வேண்டும் என்று கேட்டேன். அந்தப் பகுதி நெரிசல் நிறைந்த பகுதி. பை-பாஸ் ரோடு வேண்டும் என்று உங்களிடம் பல முறை கோரிவிட்டேன். ஒரு முறையாவது தொகுதிக்கு வந்து பாருங்கள் என்று உங்களிடம் கூறிவிட்டேன். இன்னும் அந்த மாற்றுவழிப் பாதையை அமைப்பதற்கு அமைச்சர் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. (குறுக்கீடு) அடுத்தபடியாக, ...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுந்தரம் அவர்கள் சொல்வதை மறுக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை; நியாயமும் இல்லை. அவர் கேட்பது நியாயம்தான். இராசிபுரமே நெடுஞ்சாலையிலேயிருந்து விலகி ஒரு பை-பாஸ் போன்றுதான் இருக்கிறது. அதனால் பை-பாஸ் வேண்டும் என்று சொல்லக்கூடிய அந்த நிலைமை இல்லை. இடையிலே போகிற பாதைக்குச் சற்று விலகி பாதை தேவை என்பதைத்தான் கேட்கிறீர்கள். உள்ளபடியே சேலம், நாமக்கல் சாலையே பை-பாஸ் சாலைபோலத்தான் அமைந்திருக்கிறது; இராசிபுரம் ஒதுங்கியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் தொகுதிக்கே வரவில்லை என்று என்னிடத்திலேயே சொல்கிறார். குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு நிகழ்ச்சிக்கு நாங்கள் ஏற்பாடு செய்து, குடிநீர்த் திட்ட trial பார்ப்பதற்காக நான் போயிருந்தபோது—இந்த இடத்திலேயே நான் அவரிடம் சொன்னேன், இன்ன தேதிக்கு நான் அங்கே வருகிறேன், நீங்களும் வாருங்கள் என்று சொன்னேன். நான் போனேன்—அவர் வரவில்லை. ஒரு நிகழ்ச்சிக்கே அவர் பெயர் போடவில்லை என்றார். தனியாகவே அச்சடித்து ஒரு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டு, நேரடியாக அதிகாரிகள் மூலமாக அவருக்குத் தெரிவித்து, அவரிடத்தில் நானும் அவரை வரவேண்டும் என்று கேட்டேன். அவர் வரவில்லை. வராததற்கான காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர் வரமாட்டார். அவர் மேல் குற்றம் இல்லை. வரமுடியாது அவரால். இதையெல்லாம் சொல்லாமல் இருக்கிறார். பை-பாஸ் ரோடு வேண்டும் என்று சொன்னார். அந்த ரோடு தேவையானதுதான் என்று அவர் விரும்பிச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இரண்டு முறை நான் போய்ப் பார்த்திருக்கிறேன்.

நில ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று அவரிடத்திலே தெரிவித்தேன். அதற்குக் காலம் ஆகும். நீங்கள் அதிலே consent எழுதி வாங்குங்கள். அதற்குரிய தொகையை நீங்கள் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி



மேம்பாட்டு நிதியிலேயிருந்து கொடுங்கள்; அரசாங்கம் மீதித் தொகையைப் போட்டு, பார்ப்போம் என்று தெரிவித்துள்ளேன். இதுவரை பதில் இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக, ஒவ்வொன்றையும் அடுக்கிக்கொண்டே போகலாம். வெண்ணந்தூர் ஒன்றியத்தில் மணிமுத்தாற்றின் குறுக்கே ஒரு பெரிய பாலம். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் இங்கே இருக்கிறார். அவர் எப்போது புதியதாக அமைச்சர் பதவி ஏற்றாரோ, அன்றிலேயிருந்து கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அவர், NABARD என்கிறார். Part II Scheme என்று சொல்கிறார். C.E.ஐ-ப் பாருங்கள் என்பார். அப்படித்தான். இதுவும் அப்படியேதான்.

அதேபோல போக்குவரத்துத் துறை அமைச்சர் சேலத்திலே ஒரு Conference நடத்தினார். Conference-ல் சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்ட இரண்டு பஸ் வழித்தடங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன என்று சொன்னேன். அவர் அப்போதே M.D.-யிடம் பேசினார். அவரும் உடனே செய்கிறேன் என்று சொன்னார். எதுவும் நடக்கவில்லை. அங்கே நிறைய பஸ்கள் ஓடவில்லை. ரோடு வேலை செய்து முடிக்கவில்லை என்று சொன்னார்கள். வேலை செய்து முடிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னேன். பலமுறை சொல்லி விட்டேன். என்னிடத்திலே செய்கிறேன் என்றார்கள். அதுவும் செய்யப்படவில்லை. இந்த அரசு செயலிழந்த அரசு என்பதற்கு இது ஒன்றே போதும். இன்னும் நிறைய சொல்வேன்.

அதேபோல இராசிபுரம்—எடப்பாடி திட்டத்தின்கீழ் 155 வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் கொடுக்கப்படவில்லை. நீங்கள் 2 ஆண்டிற்கு முன்பு வந்து சொன்னீர்கள். இன்னமும் அந்த வழியோரக் கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை.

சுகாதாரத் துறை அமைச்சர் இங்கே இல்லை. போதமலையில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று சொன்னார். ஆர்டர் போட்டார்கள்; இன்னும் அந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2 வருடமாக எந்தவிதமான நிதியுதவியும் கொடுக்கப்படவில்லை; இவற்றை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த நான்கே முக்கால் வருடத்திலே நீங்கள் எல்லாம் எதையுமே செய்து முடிக்கவில்லை. இனிமேலா நீங்கள் செய்யப்போகிறீர்கள்? கிராமத்திலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள் . . .

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கே முக்கால் வருடத்திலே நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று சொன்னீர்கள். ஆனால் சென்ற 5 வருடத்திலே என்ன செய்தார்கள் என்ற பட்டியலைச் சொன்னால் அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எடப்பாடி குடிநீர்த் திட்டமே எங்களுடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்டதுதான். எங்கள் புரட்சித் தலைவர் காலத்திலே போடப்பட்டதுதான். அதனாலே நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. கிராமத்திலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள்.

"கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன்,
வானம் ஏறி வைகுண்டத்தைப் பார்க்கப் போகிறான்."

என்று சொல்வார்கள். அப்படி நீங்கள் ஒன்றும் செய்யப்போவதில்லை. இந்த நான்கே முக்கால் வருடத்திலே நீங்கள் என்ன செய்தீர்கள் என்றால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வை அழிக்க வேண்டும்; எங்கள் கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை அரசியலிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்; ஓரங்கட்டும் திட்டம்தான். அதற்காகத்தான் பொய் வழக்குப் போட்டு அவர்களைச் சிறையிலே அடைக்க வேண்டுமென்று கங்கணம் கட்டி சிறையிலே அடைப்பதற்கு வழிவகைகள் செய்து, தேர்தலிலே நிற்காமல் செய்து நீங்கள் அடுத்த முதல் அமைச்சர் பதவியை அடைந்துவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறீர்கள். கண்டிப்பாக அந்த எண்ணம் ஈடேறாது. எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தலில் நிற்பார்கள், வெல்வார்கள், ஆட்சியில் அமர்வார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-55*

இங்கே பேசியவர்களெல்லாம் கூறினார்கள். அடுத்த முறை 5-வது முறையாக இந்த முதலமைச்சர் முழுமையான பட்ஜெட்டை வாசிப்பார்கள் என்று கூறினார்கள். நான் சத்தியம் செய்து கூறுகின்றேன். இந்த மாமன்றத்திலே வருகின்ற மே மாதம் எங்களுடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக வருவார்கள் ஆட்சி அமைப்பார்கள், முதலமைச்சர் .... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உறுப்பினர்கள் அமைதி காக்கவும். அவர் பேசுவதற்குப் பதில் சொல்வதற்கு முன்வரிசையிலே அமைச்சர்கள் இருக்கிறார்கள்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மிக அமைதியாக இருக்க வேண்டும். சுந்தரம் அவர்கள் கடைசியாகப் பேசுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் உங்கள் மூலமாக அவை முன்னவருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த முதல்வர் வாசிக்கின்ற கடைசி பட்ஜெட் இதுதான். கடைசி இடைக்கால பட்ஜெட்டும் இதுதான். எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் முழுமையான பட்ஜெட்டை இங்கே வாசிப்பார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்துத் துறை மக்களுடைய வெறுப்பையும் ஒட்டுமொத்தமாக நீங்கள் சம்பாதித்து விட்டீர்கள். உங்களுடைய பேச்சாற்றலால், எழுத்தாற்றலால் இனி இந்தத் தமிழக மக்களை ஏமாற்ற முடியாது. ஒரு ஆட்சி—ஆட்சிக்கு வந்தால் 100 நாள் விழாக் கொண்டாடுவார்கள். நீங்கள் எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். சரியாக இன்னும் 100 நாட்கள் இந்த தேதியிலிருந்து இன்னும் 100 நாட்களில் உங்களுடைய ஆட்சி வீட்டுக்கு அனுப்பப்பட இருக்கின்றது. அதற்குப் பிறகு இப்பொழுது நீங்கள் என்னென்ன செய்தீர்களோ, அதைப் போல ஆனால் உண்மையான வழக்குகளை உங்கள்மீது தொடருவோம். உங்களுக்காக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது இதெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறதா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லையில்லை.

**திரு. சைதை கா. கிட்டு:** இது பொதுக்கூட்டமா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இது எங்களுடைய உரிமை. இதை நான் பேசுவேன். ஏன் நீங்கள் பேசவில்லையா? (குறுக்கீடு) இல்லையில்லை. என்னுடைய உரிமை, என்னுடைய கருத்துக்களைப் பேசுவதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. இது உங்கள் சட்டமன்றம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சுந்தரம், நீங்கள் இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள். நேரடியாக உறுப்பினர்களைப் பார்த்துப் பேசக் கூடாது. இங்கே இருக்கையைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடு) அதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுகிறேன். நீங்கள் இந்த ஐந்து ஆண்டுகளாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த 4½ வருஷமாகப் பாதுகாப்பாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர் சுந்தரம்:** இன்றைக்குக் கொஞ்சம் வேகமாக இருக்கிறது. அதனாலே சொல்கிறேன். இந்த ஐந்தாண்டுகளில் நீங்கள் அடித்த கொள்ளைகளைப்பற்றி நாங்கள் பதவிக்கு வந்தவுடன் உங்கள்மீது உண்மையான வழக்குத் தொடருவோம். உங்களுக்காக மத்திய சிறைச்சாலையினுடைய கதவுகள் எப்பொழுதுமே திறந்து இருக்கும். நம்முடைய முதல்வரவர்களுக்கு ஒரு சின்னச் சின்ன ஆசை. அவருக்கு உள்ளூர ஒரு ஆசை. அவருக்குத் தொல்காப்பியத்திற்கு உரை எழுத வேண்டுமென்று அவருடைய நீண்ட நாளைய ஆசை. அவருடைய நீண்ட நாளைய ஆசையை எங்களுடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய சிறைச்சாலையில் நிறைவேற்றித் தருவார்கள் என்று (குறுக்கீடு) என்ன, என்ன, என்ன அங்கே, என்ன ஐயா, என்ன ஐயா? நீங்கள் மாத்திரம், நீங்கள் மாத்திரம் எங்கள் அம்மா....(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இங்கே என்னைப் பார்த்துப் பேச வேண்டும். அதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னேன். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லீங்க. இவர்கள் மட்டும் பேசுவார்கள். தீர்ப்பு வராததற்கு முன்பே, ஜெயிலிலே அடைப்போம். தேர்தலிலே நிற்க மாட்டார்கள் என்று இவர்களுக்கு மட்டும் இப்படிப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** உங்களைத்தான் பார்த்துப் பேசுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இவரேதான் பேசினாரே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னைப் பார்த்துப் பேசுங்கள்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, அந்த வாய்ப்பை எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு, இந்த ஐந்தாண்டுக் காலத்தில் நீங்கள் சாதித்தது என்ன? இறுதியாக நீங்கள் போலியான அடையாள அட்டையை வைத்து கள்ள ஓட்டு போட்டு, வெற்றி பெறலாம் என்று கனவு கண்டுகொண்டிருக்கிறீர்கள். அது நடக்காது. இன்றைக்குத் தேர்தல் கமிஷனர் அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு நேரம் நீங்கள் பேசினீர்கள். நான் எதுவுமே குறுக்கிடவில்லை. தயவு செய்து நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள். சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசுகிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் கமிஷனர் கில் அவர்கள்கூடக் கூறியிருக்கின்றார்கள். தேர்தல் நடக்கும்போது அந்தச் சட்டமன்றம் விலகி, கவர்னர் ஆட்சியை ஏற்படுத்தினால், தேர்தல் நேர்மையாக நடைபெறும் என்று. அதை ஏற்று........

நண்பகல் 12·00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கில் அவர்கள் நிறையச் சொல்லியிருக்கிறார்கள். கிரிமினல்கள் எல்லாம் தேர்தலிலே நிற்கக்கூடாது என்றுகூடச் சொல்லியிருக்கிறார். நீங்கள் மற்ற subject-க்கு வாருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தேர்தலுக்கு முன்பாக, நியாயமாக ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமென்றால் நீங்கள் பதவி விலகி, கவர்னரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு, தேர்தலைச் சந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** துணைத் தலைவர் அவர்களே, இப்போதே தோல்வி பயம் வந்துவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சு குறிப்பிடுகிறது. பொய் வழக்கு, பொய் வழக்கு என்று சொல்கிறவர்கள், நீதிமன்றம் தண்டனை கொடுத்த பிறகும், இன்னமும் பொய் வழக்கு என்று சொல்வதை இந்த அவையின் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இன்னும் மேல் கோர்ட் இருக்கிறது; மற்ற கோர்ட்டுகள் இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** எந்த நீதிமன்றமும் இதுவரை பொய் வழக்கு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பொய் வழக்கு, பொய் வழக்கு; தண்டனையை கலைஞர் வாங்கிக் கொடுத்தார் என்ற ஒரு தவறான பிரச்சாரத்தை சட்டசபைக்குள்ளேயும் சொல்ல விரும்புகிறார். கடந்த தேர்தலின்போது ஐயா மூப்பனாரின் கட்சியாக இருந்தாலும், கம்யூனிஸ்ட் இயக்கங்களாக இருந்தாலும், எல்லோரும் ஒன்று சேர்ந்து ஜெயலலிதா அம்மையார் ஊழல் செய்திருக்கிறார், அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வழக்கு போட வேண்டும் என்று ஞானசேகரன் உட்பட இங்கு போர்க்குரல் எழுப்பி, அதன் அடிப்படையிலே ஆதாரங்களைத் திரட்டி, சட்டத்தின் அடிப்படையிலே வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றம் விசாரித்துத்தான் இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிறதே தவிர முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொய் வழக்கு போடவில்லை; வேண்டுமென்றே சிறையில் தள்ளவும் இல்லை. ஆனால் அவர்கள்தான் சிறையில் தள்ளுவோம் என்று முன்கூட்டியே ஒரு அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு ஒரு தவறான காரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 4½ ஆண்டுகளாக இந்த அரசு சாதித்தது என்ன? திருவள்ளுவர் படிப்பகம் என்று அறிவித்தீர்கள். செயல்படவில்லை. நூல்களே அங்கு இல்லை. ஏழாயிரம் விளையாட்டு மையங்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்தத் திருவள்ளுவர் படிப்பகம், எந்த இடத்திலே செயல்படவில்லை என்பதை நீங்கள் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய தொகுதியில், என்னுடைய சொந்தக் கிராமத்தில் செயல்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைச் சொன்னால்தானே அவர்களால் பதில் சொல்ல முடியும்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஏழாயிரம் விளையாட்டு மையங்கள். அந்த விளையாட்டு மையங்களில் விளையாடுவதற்கு எந்தவிதமான வசதியும் இல்லை.

அதேபோல, கரும்புக்கு 1,000 ரூபாய் என்று, 1,000 பேர் 1,000 தடவை பேசியாகிவிட்டது. தேர்தல் வாக்குறுதி கொடுத்தீர்கள். விவசாயிகள் உங்களை நம்பி வாக்களித்தார்கள். அந்த விவசாயிகளை வஞ்சித்து விட்டீர்கள். நெசவாளர்களை வஞ்சித்துவிட்டீர்கள். ஒன்றே ஒன்று. எங்கும் மஞ்சள், எதிலும் மஞ்சள், முதல்வர் பேசும் மைக்கும் மஞ்சள்; முதல்வர் அண்ணா சிலைக்கு மாலை போட்டாலும் அதுவும் மஞ்சள்; இந்தக் கஜானாவும் மஞ்சள். இதுதான் உங்களுடைய 4½ ஆண்டு ஆட்சிக் காலத்தினுடைய சாதனை.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பழங்குடியினருக்கு, அரசமைப்பு சட்டத்தில் உள்ள உரிமைகளைப் பறிக்கும் வகையில் நீங்கள் அரசு ஆணை எண் 44-ஐ நீக்கியிருக்கிறீர்கள். அதுபோல எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் கூறியபடி, அரசுக்குத் தேவையற்ற புறம்போக்கு நிலங்களில் குடியிருந்தவர்களை, கிட்டத்தட்ட ஏழாயிரம் பேர்களை அதிரடியாக வெளியேற்றியிருக்கிறீர்கள்.

4½ ஆண்டு காலத்தில் 2000 ஆண்டு வரை பஸ் கட்டணத்தை உயர்த்தமாட்டோம் என்று கூறிவிட்டு, இரண்டு முறை நீங்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள்.

2 ரூபாய் அரிசி 3½ ரூபாய் ஆகி இருக்கிறது. இதுதான் இந்த அரசினுடைய சாதனை. இன்னும் ஒரு சாதனை. சிமெண்ட் விலை மட்டும் குறையாமல் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

எப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்தாலும் சரி, தீவிரவாதிகள் தலையெடுத்து விடுகிறார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் தீவிரவாதிகள் இங்கே வளர்க்கப்படுகிறார்கள். தமிழ் தேசம் என்ற ஒரு தீவிரவாத அமைப்பு ஆரம்பிப்பதற்கே நீங்கள் உங்களுடைய ஆட்சியில் வழிகோலியிருக்கிறீர்கள்.

அதேபோல, இன்றைக்கு எதிலும் விளம்பரம், எங்கும் விளம்பரம். இலவச பஸ் பாஸா, அதில் விளம்பரம். (குறுக்கீடு) உங்கள் பையில் வைத்திருக்கிறீர்கள். உங்கள் முதலமைச்சர் படம், அதைப்பற்றிக் கவலையில்லை எங்களுக்கு. அதை உங்கள் பாக்கெட்டில் வைத்துச கொள்ளுங்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. இலவச பஸ் பாஸா, அதிலே விளம்பரம். அதிலும் இன்றைக்கு அமைப்புச் சாரா

தொழிலாளர்களுக்குப் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை கொடுத்திருக்கிறீர்கள். அதில் எல்லாக் கட்சிக்காரர்களும் இருப்பார்கள். அதிலும் உங்கள் முதல்வருடைய புகைப்படம். அதிலும் விளம்பரம். எதற்குப் பார்த்தாலும் விளம்பரம்.

இந்த பட்ஜெட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படும் என்று சொன்னீர்கள். எங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்திருக்கிறீர்கள்? இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும் என்று சொன்னீர்கள். இளைஞர்களுக்கு என்ன திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள்?

தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதைக் கேட்டால் பட்டியலைக் கொடுங்கள் என்பீர்கள். எந்த எந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது என்ற பட்டியலைக் கொடுங்கள் என்பீர்கள். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை; அதேபோல பின்னி தொழிற்சாலை. நீங்கள் அறிவித்தீர்கள், திறக்கிறோம் என்று திறந்தீர்களா? என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? நூற்றுக்கணக்கான நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. நூற்பாலைபற்றிப் பட்டியலைக் கேட்பீர்கள். பட்டியல் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

தொழில் வளம், தொழில் வளம், தொழில் வளம் என்று புள்ளிவிவரத்தையே காட்டி, அடுக்கு மொழியிலே பேசி, தமிழகத்தையே ஏமாற்றிவிட்டீர்கள். இதுதான் உங்களுடைய ஆட்சியின் சாதனை.

அண்ணன் தம்பிக்கு இடையே சண்டை வந்தால் பஸ் எரிகிறது அங்கே. இது உள்கட்சிப் பிரச்சினை என்பீர்கள். பஸ் அங்கே எரிகிறது. ஆனால் அந்த பஸ்ஸை எரித்தவனை, உண்மையானவனைப் பிடிக்கமாட்டீர்கள். அங்கே யார் உண்மையானவனைப் பிடித்தார்களோ, அவனைப் போய் லாக்-அப்-லிருந்து கூட்டிக்கொண்டு வருவீர்கள். இதுதான் இன்றைக்கு இந்த நாட்டினுடைய.....(குறுக்கீடு) இதுதான் இந்த நாட்டினுடைய நிலைமை. ** அதுபோல.....

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் சுந்தரம் அவர்கள், ஏதோ அவர் ஒரு கற்பனையாக வைத்துப் பேசினார். **அது ஏதோ அவருக்குச்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சம்பந்தப்பட்டதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி இல்லையென்றால் அந்தத் தொடரை விலக்க வேண்டும். ஏனென்றால் அப்படி ஒரு கருத்தோ, அப்படி ஒரு செய்தியோ இந்த அவையிலே இடம் பெறுவது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலவச வேஷ்டி கொடுக்கிறீர்கள். இலவச வேஷ்டி கொடுப்பதிலேயும் விளம்பரம். மானாமதுரைக்கு அருகில் அரசனேந்தல், ஆதூர் கிராமங்களில்.....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிவிடுகிறேன், விளம்பரம், விளம்பரம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார், ஜே.ஜே. டிரான்ஸ்போர்ட் என்ற ஒரு போக்குவரத்துக் கழகத்தை வைத்திருந்தீர்கள். ஏறியவர் பூராவும் அண்ணா தி.மு.க.காரர்களா? யார் வேண்டுமானாலும் ஏறலாம். அந்த மாதிரி பஸ். அதற்கு ஜே.ஜே. டிரான்ஸ்போர்ட் என்று பெயர். அந்தப் பேருக்குத் தகுந்த மாதிரி தொழிலையும் வைத்துக்கொண்டு அந்த மாதிரி நடத்துகிறபோது இந்த மாதிரி பெயரை அட்டையிலே போட்டுக்கொள்வதில் எந்தவிதத் தவறும் இருக்க முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எந்தத் தவறும் சொல்ல முடியாது. உங்கள் வீட்டுப் பணம் இல்லை. நீங்கள் உங்கள் வீட்டுப் பணத்தில் எல்லோருக்கும் கொடுக்கவில்லை. அதனாலே.....

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** ஜே.ஜே. டிரான்ஸ்போர்ட் பணம், உங்கள் அம்மா சம்பாதித்து வந்த பணமா? அதுவும் போக்குவரத்துக் கழகத்தின் பணம்தான். பெயர் வைத்தீர்களே, ஜே.ஜே. டிரான்ஸ்போர்ட், ஜே.ஜே. நகர் என்று. அதையெல்லாம் எப்படி வைத்தீர்கள்? (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், சீக்கிரம் பேசி முடியுங்கள். அதிக நேரம் எடுத்துக்கொண்டீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மானாமதுரைக்கு அருகில் அரசனேந்தல், ஆதூர் கிராமங்களில் இலவச வேஷ்டி, சேலை கொடுத்திருக்கிறார்கள். அந்த இலவச வேஷ்டி சேலையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பார்டர் போட்டது, கருப்பு சிவப்பு (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பேசிவிட்டீர்கள், நான் சொல்ல வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்தச் சேலையை தங்கமணி என்னிடம் காண்பித்தார். அதை அவருடைய ரூமில் வைத்துவிட்டு வந்திருக்கிறேன். இல்லையென்றால் கொண்டுவந்து காண்பித்திருப்பேன். இப்படி கருப்பு சிவப்பு பார்டர் போட்ட.....

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது கைத்தறியிலே நெய்யப்பட்ட சேலையாக இருந்தாலும் சரி அல்லது பவர்லூமிலே நெய்யப்பட்டு சாயம் அச்சிடப்பட்ட சேலையாக இருந்தாலும் சரி, இலவச வேஷ்டி சேலையிலே எங்கேயாவது கருப்புச் சாயம் என்ற ஒன்று இருந்தால் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். இல்லையென்றால் உறுப்பினருடைய நிலை என்ன என்பதை இங்கே தெரிவிக்க வேண்டும். கருப்புச் சாயமே இல்லை. சிகப்பு சாயம் இருக்கலாம். கருப்புச் சாயமே இல்லை என்ற அடிப்படையிலேதான் அந்த டிசைன் போடப்பட்டது. (குறுக்கீடு) நீங்கள் தயார் செய்து வைத்திருக்கலாம். இதற்காகவே தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானாமதுரை என்னுடைய சொந்த தொகுதி. அதனுடைய சட்டமன்ற உறுப்பினர் தங்கமணி. தங்கமணி சொன்னார் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் சொல்கிறார். எனவே தங்கமணி அவர்களைக் கேட்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீதிமன்றமா இது? நீங்கள் போய் தங்கமணியைக் கேட்பதற்கு?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தியை ஜூனியர் விகடனிலே பார்த்தேன். ஜூனியர் விகடனிலே படம் போட்டிருந்தது. சி.பி.எம்.-னுடைய தோழர்கள் இதுசம்பந்தமாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததாக 14-1-2001 அன்று வந்த ஜூனியர் விகடனிலே அந்தச் செய்தி வந்தது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். சுந்தரம், நீங்கள் பேசும்போது என்ன சொன்னீர்கள், அவர் என்னிடம் காண்பித்தார், அவருடைய அறையில் வைத்துவிட்டு வந்தேன் என்று சொன்னீர்கள். இப்போது இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? தவறான தகவலை அவைக்குத் தருகிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது தெளிவாகச் சொன்னீர்கள், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்.... (குறுக்கீடு)—இங்கே நான் பேசும்போது மைக் உங்களுக்கு வராது. மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்—என்னிடம் காண்பித்தார். அவருடைய அறையில் வைத்துவிட்டு வந்திருக்கிறேன் என்று சொன்னீர்கள். அவர் இல்லை என்று மறுத்து பத்திரிகையிலேதான் செய்தி வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே நீங்கள் ஒரு தவறான தகவலை சபைக்குத் தந்திருக்கிறீர்கள். அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை. ஜூனியர் விகடனிலே வந்தது. நான் அவரைக் கேட்டேன், அவர் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் நண்பர்கள் கேட்டார்கள், அதுபடி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அதை எடுத்துக்காட்டினேன். சொன்னதைத்தானே சொல்ல முடியும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இறுதியாக....(கூச்சல்-குழப்பம்) ஏன், இருய்யா, என்னய்யா? உன்னோட பெரிய......(குறுக்கீடு.) பெரிய நீங்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். திரு. சுந்தரம், இங்கே என்னைப் பார்த்துப் பேச வேண்டும். கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் பேசுகிறார், உட்காருங்கள்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாக இந்த அவையிலே சொல்லிவிட்டேன். கருப்புச் சாயம் எந்த இலவச வேட்டி சேலையிலும், கைத்தறியாக இருந்தாலும், பவர்லூமாக இருந்தாலும், கருப்புச் சாயமே உபயோகப்படுத்தப்படவில்லை. நான் சொல்வது அப்படி ஒன்றைக் காட்டினால் அதற்கு நான் முழுப்பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். அல்லது இவர்களே திட்டமிட்டு - ஏனென்றால் பல இடங்களில்

இவர்களுடைய கட்சிக்காரர்களெல்லாம் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தேவைக்காக 10 சேலைகளை வேண்டுமானால் இவர்கள் தயார் செய்து இருப்பார்களே தவிர, கருப்புச் சாயம் இலவச வேட்டி சேலையிலே இல்லை என்பதை உறுதியாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒரே ஒரு கோரிக்கை இந்த அரசுக்கு. பாளையங்கோட்டையில் அப்துல் ரஷீத் கொலை செய்யப்பட்டது பற்றியும், மேலப்பாளையத்தில் சத்தியசீலன் கொலை செய்யப்பட்டது பற்றியும், தென்காசி பள்ளிவாசல் கொட்டகை எரிந்தது தொடர்பான வழக்குகள் சி.பி.சி.ஐ.டி., சிறப்புப் புலனாய்வுக்கு இந்த அரசு உத்தரவு இட்டதைப்போல, திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையம், கொட்டிக்குளம் பஜாரிலுள்ள செல்வ விநாயகர் சிலை மற்றும் ஈரோடு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம். (குறுக்கீடு) திரு. பி. இராசமாணிக்கம் (குறுக்கீடு) திரு. பி. இராசமாணிக்கம் (குறுக்கீடு)

திரு. பி.ஆர். சுந்தரம்: **

(திரு. பி.ஆர். சுந்தரம் இடைக்கால நிதிநிலை அறிக்கையைக் கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. இராசமாணிக்கம், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைசி நாளைக்கு முதல் நாள் நீங்கள் இந்தமாதிரி அவையிலே முறைகேடாக நடக்கக்கூடாது. குப்பைத் தொட்டியில் கிழித்துப் போடுகிற மாதிரி, உங்கள் இஷ்டத்திற்கு நடப்பதற்கு இந்தச் சபையில் இடம் கிடையாது. (குறுக்கீடு) இல்லை என்பதற்காக. அது தப்பு. ஏற்கெனவே நீங்கள் தவறான தகவலை சபைக்குக் கொண்டுவந்து கொடுத்திருக்கிறீர்கள். அது சம்பந்தமாகவும் எங்களால் நடவடிக்கை எடுக்க முடியும். இந்த மாதிரியெல்லாம் நடந்துகொள்ளக் கூடாது, உட்காருங்கள். திரு. பி. இராசமாணிக்கம். சுந்தரம், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குப்பையைக் கொட்டுகிறவர்கள் அந்தக் குப்பை கொட்டுகிற வேலையைத்தான் செய்வார்கள். அதனால் நாம் கோபப்பட வேண்டிய அவசியமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், நீங்கள் உட்காருங்கள், அவர் பேசட்டும். திரு. இராசமாணிக்கம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விழைகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை 'சில பெரிய மனிதர்களுக்கு உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் மிகப் பெரிய பள்ளம் இருக்கிறது' என்று சொன்னார்கள். ஐந்தாண்டு காலம் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி, மக்களுடைய எண்ணங்களை, கருத்துக்களைப் புரிந்து திட்டங்களை நிறைவேற்றி, மக்களுடைய விருப்பத்திற்கு இணங்க ஆட்சி அமைத்திருக்கிறார்கள். அந்த ஆட்சியை கலைஞருடைய பொற்கால ஆட்சி என்று மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆட்சி இந்த நாட்டில் மிகப் பெரிய கிராம மறுமலர்ச்சியை உண்டாக்கித் தந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு ஆட்சியை இங்கே நம்முடைய எதிர்க்கட்சிகள் குற்றம் காண முயல்கிறார்கள், குறை சொல்ல முயற்சிக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கடி ஒன்றைச் சொல்வார்கள். 'மனசாட்சி உறங்கும்போது, மனக் குரங்கு ஊர் சுற்றப் போகும்' என்று. இன்றைக்கு சில அரசியல் கட்சிகள் ஊர் சுற்றிக் கொண்டிருக்கின்றன. விரைவிலே அந்தக் கடைசி இடத்திற்கு அவர்கள் வந்து சேருவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே சட்டமன்றத்தில் சொன்னார்கள். என்ன நடந்திருக்கிறது, இந்த ஆட்சியில் என்ன நடைபெற்றிருக்கிறது என்று கேட்டார்கள். இந்த ஆட்சி ஒரு சிறப்பான ஆட்சி என்பதற்கு இரண்டே எடுத்துக்காட்டைச் சொல்லலாம். ஒன்று, சட்டமன்ற வரலாற்றில் இரண்டு பிரச்சினைகள். ஒன்று, உணவுப் பிரச்சினை. கடந்தகால

வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் தெரியும். இந்த நாட்டிலே உணவுப் பஞ்சம் இருந்தது. சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இந்த நாட்டில் உணவுப் பிரச்சினை இருக்கிறது, அரிசி கிடைக்கவில்லை, எனவே அமைச்சர்கள் என்ன செய்கிறார்கள் என்று கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இதுதான் அன்றைய தினம் சட்டமன்றத்திலே பதிவாகியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி. வெங்கடசாமி தலைமை)*

நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சியில் உணவுப் பஞ்சம் இல்லை. இந்தியாவிலேயே தமிழகம்தான் உணவு உற்பத்தியில் முதலிடம் என்று சொல்லும் அளவுக்கு இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் இல்லை. மக்களுடைய எண்ணம், விருப்பம், தட்டுப்பாடு இல்லாமல் உணவை வழங்குவது; அதைத்தான் கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-15*

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினை. ஐந்து ஆண்டு காலத்தில் நம்முடைய தலைவர் அவர்களுடைய தீவிர முயற்சியால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கடும் முயற்சியால் இந்த நாட்டில் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. மக்களுடைய அடிப்படைப் பிரச்சினை, உணவு, குடிநீர்ப் பிரச்சினை. இவை இரண்டுமே இப்போது தீர்க்கப்பட்டிருக்கிறது. அதை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இங்கே நம்முடைய முன்னாள் தோழமைக் கட்சிகள், பொதுவுடைமைக் கட்சிகள் சொன்னார்கள், வ்.வசாயிகளுடைய பிரச்சினையைப்பற்றி. விவசாயிகள் பிரச்சினை என்பதில் பல இருக்கின்றன. ஆனால் நம்முடைய தோழமைக் கட்சிகள் கேட்பது கடனைத் தள்ளுபடி செய்வது. இப்போது இந்த நாட்டிலே தூர் வாரும் பணி நடைபெற்றிருக்கிறதே, கிட்டத்தட்ட 120 கோடி ரூபாய்க்கு. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் எங்கேயாவது வெள்ளமும், புயலும் ஏற்பட்டிருக்கிறதா? தூர் வாருகிற பணி முறையாக நடைபெற்றிருக்கிறது. அதிலே முறைகேடு நடந்திருக்குமேயானால் வெள்ளமும், புயலும் அல்லவா பாதித்திருக்கும்! அதற்கு நிவாரணமும் கேட்டிருப்பார்கள் நம்முடைய தோழமைக் கட்சிகள். வெள்ளமும் ஏற்படவில்லை, புயலால் பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த அரசு நிவாரணமும் வழங்கவில்லை. இதுதான் தூர்வாருகிற பணியினுடைய மகத்துவம். விவசாயிகளுடைய பிரச்சினை அங்கே தீர்க்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, சாலைகள், பாலங்கள். மக்களுடைய தேவைகள் என்ன என்பதை உணர்ந்து செயல்பட்டிருக்கிறது. இந்த அரசுதான் உண்மையான ஜனநாயக அரசு, மக்களுடைய அரசு, மக்களுடைய எண்ணங்களைச் செயல்படுத்துகிற அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சொன்னார்கள், இந்த அரசினுடைய சாதனை என்ன என்று. தந்தை பெரியாருடைய கொள்கை, இலட்சியம், ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால், இந்த நாட்டிலே இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டும் என்பது தந்தை பெரியாருடைய கொள்கை. பெரியாருடைய பிள்ளை என்பதால் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள், பெரியார் நினைவு சமத்துவபுரம். இந்தியாவிலே மிகப் பெரிய புரட்சி அது. கொள்கைகளை, இலட்சியங்களைச் சொல்வது எளிது. ஆனால் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்வது, நடைமுறைப்படுத்துவது என்பது சற்றுக் கடினம். எனவேதான் பெரியாருடைய பிள்ளை என்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரியாருடைய நினைவு சமத்துவபுரத்தை நாடு பூராவும் உருவாக்கித் தந்தார்கள். அதை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அதேபோலத்தான் பேரறிஞர் அண்ணாவினுடைய ஒரு உண்மையான தம்பி, அந்தத் தம்பி கொண்டுவந்த திட்டம்தான் கிராமங்கள் தன்னிறைவு பெறுகிற அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இன்றைக்கு தொகுதிக்கு நான்கு ஊராட்சிகளில் நடைபெற்றிருக்கிறது. ஆண்டுதோறும், ஊராட்சியைத் தேர்வுசெய்து, அந்த ஊராட்சியினுடைய அடிப்படை வசதிகளைச் செய்துகொடுத்து, அந்தக் கிராமங்களை முன்மாதிரி கிராமங்கள் என்று சொல்கிற அளவுக்கு உருவாக்குகிற திட்டம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அந்தத் திட்டம் எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியிலும் நான்கு ஊராட்சிகளில் நடைபெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆட்சியினுடைய சாதனை வெறும் விளம்பரமாக நடைபெறுகிறது என்று சொன்னார்கள். கடந்தகால வரலாறுகளை எண்ணிப் பாருங்கள். கட்-அவுட்டுக்கு முன்னால் மாதக் கணக்கில், நாள் கணக்கில், மணிக் கணக்கில் காவலர்கள் நின்ற நிலைமை உண்டா? இன்றைக்கு முதல்வர் செல்கிறார், ஏதேனும் கட்-அவுட் உண்டா? ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பட்டுச் சேலை வாங்கப்பட்ட கணக்கு உண்டா இன்று? அன்று கணக்கில் எழுதினார்களே, முதலமைச்சர் வந்தால் அல்லது ஏனைய அமைச்சர்கள் வந்தால் கட்-அவுட்கள் செலவுக் கணக்கு,

பட்டுச் சேலை வாங்கிய செலவுக் கணக்கு என்று. இன்றைக்கு நம்முடைய ஆட்சிக் காலத்தில் நம்முடைய அமைச்சர்கள் ஊராட்சி ஒன்றிய வரவேற்பிலேயே கலந்துகொள்வதில்லை. காரணம், தவறுகள் நடக்கக்கூடாது. ஒரு தூய்மையான நிருவாகம் நடைபெற வேண்டும். அதுதான் கலைஞர் தலைவருடைய இலட்சியம். ஒன்றும் நடக்கவில்லை, ஒன்றும் நடக்கவில்லை என்று இங்கே சொல்கிறார்கள். எல்லாமே நடந்து இருக்கிறது. என்னுடைய தொகுதியில் 100 கோடி ரூபாய்க்கு மேல் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. மின்சார வாரியமா 10 கோடி ரூபாய். தூர்வாருகிற பணியா 15 கோடி ரூபாய். நெடுஞ்சாலைத் துறையா 30 கோடி ரூபாய். கிராமச் சாலைகள் திட்டத்தின் மூலம் 35 கிலோமீட்டர். NABARD திட்டத்தின் மூலம் 30 கிலோ மீட்டர். பாலங்கள் 7, 6 கோடி ரூபாய். இப்படி அந்தப் பட்டியலைப் போட்டுக்கொண்டே போகலாம், நேரம் இல்லை. 80 பள்ளிக்கூடங்கள். ஊராட்சி ஒன்றியப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றுக்கு நிரந்தரக் கட்டடங்கள்; 80 பள்ளிகளுக்குக் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய்.

*பிற்பகல் 12-20*

அதேபோல, காவல் நிலையம் 36 இலட்சம் ரூபாய். தீயணைப்பு நிலையம் 19 இலட்சம் ரூபாய். காவலர் குடியிருப்பு 50 இலட்சம் ரூபாய். ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 7, 52 இலட்சம் ரூபாய். இவை எல்லாம் மக்கள் பணிகள். மக்கள் வைத்த கோரிக்கைகள். மக்கள் வைத்த கோரிக்கைகளை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது. குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க என்னுடைய தொகுதியில் 300 ஆழ் குழாய்க் கிணறுகள் போடப்பட்டு, பாதுகாக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்த தொகுதியாக ஒரத்தநாடு தொகுதி விளங்குகிறது. குடிநீருக்காக செலவிடப்பட்ட மதிப்பீட்டுத் தொகை கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய். எனவே இவை எல்லாம் சாதனைகள். இவை எல்லாத் தொகுதிகளிலும் நடைபெற்றிருக்கின்றன. இவை எல்லாத் தொகுதிகளிலும் நிறைவேற்றப்பட்டு இருக்கிறன்றன என்பதற்கு நம்முடைய மூத்த த.மா.கா. உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய பேச்சே சாட்சி இந்த அவையில். அந்த அம்மையார் வாழ்த்தினார்களே, இந்த அரசைப் பாராட்டினார்களே, இது ஒன்று போதாதா? உள்ளபடியே மனச்சாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



தார்ச் சாலைகள், சிமெண்ட் சாலைகள்பற்றிச் சொன்னார்கள்; இங்கே விளையாட்டாகச் சொன்னார்கள். ஆதிதிராவிட மக்கள் சிமெண்ட் சாலையில் மாலை நேரத்தில் உட்கார்ந்துகொண்டு உணவு அருந்துகிற காட்சி, குழந்தை குட்டிகளோடு பேசிக்கொண்டிருக்கிற காட்சியைப் பார்த்தால், அந்த சிமெண்ட் சாலைத் திட்டம் வீட்டை விட அழகாக இருக்கிறது என்பதைத்தான் நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதை கிராமங்களுக்குச் சென்று பார்த்தால்தான் உண்மை விளங்கும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இருப்பதற்கே ஒரு காலத்தில் அவர்களுக்கு வீடு இல்லை. அப்படிப்பட்ட ஜனங்கள் இன்றைக்கு சிமெண்ட் சாலையில் உட்கார்ந்துகொண்டு மனமகிழ்ச்சியோடு குழந்தைகளோடு பேசிக்கொண்டிருக்கிற காட்சி, அந்த சோடியம் விளக்குக்கு அருகாமையிலே கீழே உட்கார்ந்துகொண்டிருக்கிற காட்சியைப் பார்த்தால், (மணி அடிக்கப்பெற்றது) இன்றைக்கு இந்த அரசு செய்து இருக்கிற சாதனைகள் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளாகும்; இந்த ஆட்சி கலைஞர் அவர்களுடைய ஆட்சி பொற்கால ஆட்சி என்பதையும் எடுத்துச்சொல்லி விடைபெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எங்களுடைய கட்சி சார்பில் திரு. ஜி. நிஜாமுதீன் பேசுவார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுவோர் பட்டியலில் உங்களுடைய பெயர் போட்டிருக்கிறது. சரி, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால பட்ஜெட் மீதான விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பு தந்த எங்கள் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இடைக்கால பட்ஜெட் உரையை ஒட்டிச் சில பொதுக் கருத்துக்களையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

கோர்ட்டுகளிலே வழக்குகள் தேக்கம்-Pendency of cases-இருக்கின்ற காரணத்தால், வழக்காடு மன்றங்களை 6 நாட்களுக்கு நடத்துவது

என்று தீர்மானிக்கப்பட்டு, அதன்காரணமாக வழக்காடு மன்றங்களில் எல்லாம் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால், உண்மை என்னவென்று சொன்னால், கீழ்நிலை வழக்காடு மன்றங்களில் ஒரு வருடம், இரண்டு வருடங்கள்தான் Pendency cases இருக்கின்றன. ஆனால் உயர் நீதிமன்றத்திலேதான் 11 வருடங்கள், 12 வருடங்கள் தேக்க நிலை இருந்துகொண்டிருக்கின்றது. உயர் நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகளின் பதவியை நிரப்பினாலே Pendency cases தானாகவே தீர்ந்துவிடும். அதைவிடுத்து, உயர் நீதிமன்றத்தின் வேலை நாட்களை நீட்டிக்காமல், அங்கே காலிப் பணியிடங்களை நிரப்பாமல், கீழ்நிலை நீதிமன்றங்களில் வேலை நாட்களைக் கூட்டி, வேலைப் பளுவைக் கூட்டுவது முறையல்ல. அது மேலும், Pendency case நிலையைத்தான் ஏற்படுத்தும்; ஏனென்றால், கீழ்நிலை நீதிமன்றங்களில் கேஸ் எல்லாம் சீக்கிரம் முடிந்து ஹைகோர்ட்டுக்குப் போனால், அங்கு எல்லா கேஸ்களும் தேங்கிவிடும். கீழ்நிலை நீதிமன்றங்களில் இப்போது தற்காலிகமாக வேலைநிறுத்தத்தை நிறுத்தி வைத்து இருக்கிறார்கள். மீண்டும் இந்தப் பிரச்சினை எழக்கூடும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அப்படி நீதிமன்றத்தின் வேலை நாட்களை நீட்டித்தால், அது அனைத்து நீதிமன்றங்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டுமே தவிர, கீழ்நிலை நீதிமன்றங்களுக்கு 6 நாட்கள், மேல்நிலை நீதிமன்றங்களுக்கு 5 நாட்கள் என்று இருக்கக்கூடாது. பணியிடத்தைக் காலியாக வைத்துவிட்டு.......

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களினுடைய வேலைப் பளுவை, காலத்தை நீடித்து இருப்பது அரசாங்கமே அல்ல; சென்னை உயர் நீதிமன்றமே இதில் முடிவு எடுத்து இருக்கிறது. அரசாங்கத்திற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அதை நான் மதுரையிலே பேசும்போது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

Government is not at all a party. It is a dispute between the Lawyers and the Court, not the Government; I have clearly explained.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** உயர் நீதிமன்றம்தான் முடிவு எடுத்து இருக்கின்றது. ஆனால், அங்கு vacancy இருக்கின்ற காரணத்தினால்தான் இதுபோன்ற பிரச்சினைகளே எழுகின்றன.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, vacancy என்பது எப்போதும் தொடர்ந்து ஒரு நிர்வாகத்தில் சில இடங்கள் நிரப்பப்படாமலேயேதான் இருக்கும். புதிய இடங்கள் வந்துகொண்டு இருக்கும். இது சம்பந்தமாகக்கூட நான் ரிஜிஸ்திரார் இடத்திலே பேசி இருக்கிறேன். ஏன் இதற்காக நம்முடைய தேர்தல் ஆணையத்திலே Panel-லில் இருக்கிற நீதிபதிகளை எடுக்கக்கூடாதா என்று கேட்டு இருக்கிறேன். இல்லை, நாங்கள் அப்படி எடுக்க முடியாது; ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு நாங்கள் ஒதுக்கி, அதன்மூலம் ஆளைத் தேர்ந்து எடுத்துவிட்டால், அதிலே யாரும் வராமல் இருந்தால்தான், அதற்கு எடுப்போமே தவிர, அதற்குப் பின்னால் வருகிற இடங்களுக்கு, இடங்கள் வருமானால்—மரணத்தின் மூலமாகவோ, மாற்றத்தின் மூலமாகவோ ஏதாவது எடுப்போமானால், புதிதாகத்தான் நாங்கள் ஆள் எடுப்போமே தவிர இந்த Panel-லில் இருந்து எடுக்கிற பழக்கம் எங்களுக்குக் கிடையாது என்று அந்த ரிஜிஸ்திரார் எனக்குப் பதில் அளித்தார்.

*பிற்பகல் 12-25*

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலப்பாளையம், பாளையங்கோட்டை கிரசன்ட் நகர் பள்ளி வாசலில் அப்துல் ரஷீத் படுகொலை செய்யப்பட்டது குறித்தும் மேலும் 2 வழக்குகள் குறித்தும் காவல் துறை நடத்திய விசாரணை சரியில்லை என்ற காரணத்தால் அந்த வழக்கின் மேல் விசாரணையை C.B.C.I.D. வசம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் முதல்வர் அவர்களே, அந்தக் காவல் துறையின் நடவடிக்கை சரியில்லை என்பதைத் தெரிந்து, உணர்ந்த காரணத்தால்தான் காவல் துறை மீது முதல்வருக்கே நம்பிக்கை இல்லை என்ற காரணத்தால்தான் அந்த வழக்கின் மேல் விசாரணைக்காக சி.பி.சி.ஐ.டி.-யிடம் வழக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, மேலப்பாளையம் சிலை உடைப்பு, தாராபுரம் சிலை உடைப்பு போன்ற வழக்குகளையும் சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றோம். ஏனென்று சொன்னால் முதல்வர் அவர்களே, மூன்று வழக்குகளிலே அவர்கள் விசாரணை சரியில்லை என்று உறுதிபடத் தெரிவித்திருக்கிற காரணத்தால், அவற்றை மேல் விசாரணைக்காக C.B.C.I.D. வசம் ஒப்படைத்த காரணத்தால் இந்த வழக்குகளை மட்டும் ஏன் தனியாக வைத்திருக்க வேண்டும் என்பதுதான் புரியவில்லை. இதுவும் பொய்யாக, காவல் துறையால் ஜோடிக்கப்பட்ட

வழக்கு என்று நாங்கள் மட்டுமல்ல, பல்வேறு கட்சிக்காரர்களும் கருதுகின்றார்கள். ஆகவே அந்த 2 வழக்குகளையும் C.B.C.I.D. வசம் ஒப்படைக்க வேண்டுமென்று வலியுறுத்தி நான் கேட்டுக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு இடங்களில் சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள். விரைவில் அது செய்து தரப்படும் என்றும் கூறினார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மேலப்பாளையம் கொலை அல்லது சிலை உடைப்புகள், இவை குறித்து அரசு, போலீஸ் துறை, முதலிலே ஒரு நிலை மேற்கொண்டது. அந்த நிலையிலே ஊனம் இருக்குமோ என்ற சந்தேகம் வந்த காரணத்தினால், அரசு அதை சி.பி.சி.ஐ.டி.-க்கு மாற்றியிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில், அந்த அடிப்படையில் கைது செய்யப்பட்ட அப்பாவிகளைத் தேவையில்லாமல் ஏன் சிறைச்சாலைகளிலே வைக்க வேண்டும்? சி.பி.சி.ஐ.டி.-யினுடைய விசாரணைக்குப் பிறகு ஒரு முடிவு எடுத்துக்கொள்ளலாம். எனவே அந்த அப்பாவிகளை, அதுவும் எந்தப் பாவமும் செய்யாத, பால் மணம் மாறாத பிள்ளைகள், அந்தப் பிள்ளைகளைச் சிறைச்சாலையில் வைப்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. உங்கள்மீது எனக்கிருக்கிற அனுதாபத்தின் காரணமாக நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து, சி.பி.சி.ஐ.டி. விசாரணை வரையில் அந்தப் பிள்ளைகளைச் சிறையில் வைக்காமல், விசாரணைக்குப் பிறகு எந்த முடிவும் எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்காக மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் அனுதாபப்படுவதாகச் சொன்னார்கள். நாங்கள் அவரைப் பார்த்துத்தான் அனுதாபப்பட்டுக்கொண்டிருக்கிறோமே தவிர, எங்களைப் பார்த்து அவர் அனுதாபப்பட்டால், பின்னாலே வருத்தப்படுவார். அவர் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார். ஏற்கெனவே காவல் துறை போட்ட வழக்கினை மாற்றி இப்போது சி.பி.சி.ஐ.டி. விசாரணை போட்டிருப்பதாகச் சொன்னார். முதலிலே காவல் துறை எடுத்த நடவடிக்கைகளை அரசு பரிசீலித்தது. பிறகு பல்வேறு கோரிக்கைகள் மக்களிடத்திலேயிருந்து வந்த காரணத்தால் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு



இடையில் கைது செய்யப்பட்டவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். சி.பி.சி.ஐ.டி. முதல் அறிக்கை தந்தவுடனே அது குறித்து முதல்வர் முடிவு செய்வார்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், 'உங்களுக்காகத்தான் நாங்கள் அனுதாபப்பட்டுக்கொண்டிருக்கிறோம்' என்று சொல்கிறார். அனுதாபப்படும் அளவிற்குச் சிந்தனை இல்லாமல் எந்தச் செயலையும் இந்த லத்தீப் செய்யமாட்டான். உங்களுக்காக நான் அனுதாபப்படுவதற்குக் காரணம் தகாத இடத்தில் சேர்ந்து தகுந்த நேரத்தைக் கெடுத்துக்கொண்டீர்களே என்பதற்காகத்தான் நான் அனுதாபப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, யார் தகாத இடத்தில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் விரைவில் நாட்டிற்குத் தெரிவிப்பார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தகாத இடம் என்று சொல்கிறார். அதைத் தகுந்த இடமாக மாற்றுகின்ற முழு முயற்சியும் செய்து, அதில் வெற்றி பெறுவேன் என்பதை மாண்புமிகு நண்பர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவரல்ல. அவரைப் போல இன்னும் 1,000 பேர் முயற்சி செய்தாலும் நாட்டிலே ஒன்றும் நடக்காது. ஏனென்றால் லத்தீப் அவர்களாலே இந்த அவையிலே 4 ஆண்டு காலமாக பேசப்பட்ட பேச்சுக்கள் எழுத்து வடிவிலே இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் பேசிய பேச்சு மட்டுமல்ல. நீங்கள் பேசிய பேச்சும் குறிப்பேட்டிலே இருக்கிறது. ஆகையினாலே உங்களுடைய பேச்சுக்கு மாறாக நீங்கள் நடந்தீர்களா அல்லது நான் மாறினேனா என்பதை நாடு மிக நன்றாக அறியும். அன்றைக்கும் இன்றைக்கும் எந்தக் கொள்கையோ அந்தக் கொள்கையில் உறுதியாக இருக்கிறேன். எனவே குறிப்பேட்டில் இருப்பது எங்களுடைய நிலையை உணர்த்துகின்ற குறிப்பேடுகள். உங்களுடைய நிலையை உணர்த்துகின்ற குறிப்பேடுகளும் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. இரண்டும் மக்களிடம் சமர்ப்பிக்கப்படும். மக்கள் ஏற்கெனவே அது குறித்து முடிவு செய்துவிட்டார்கள் என்பதைத்தான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டார்கள் என்று அவர் எந்த ஜோசியரிடத்திலே கேட்டாரோ அவரை நான் இன்னும் சந்திக்கவில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஜோசியம் அவசியம் இல்லை. மக்களுடைய நாடிகளை நாம் அறிந்திருக்கிறோம். அந்த நாடித் துடிப்பை அறியாமல் நீங்கள் போய்விட்டீர்களே என்றுதான் உங்களுக்காக நான் அனுதாபப்பட்டு நான் அறிந்ததை உங்களுக்குச் சொல்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நான் இடையிலே ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன். பாளையங்கோட்டை, மேலப்பாளையத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு நம்முடைய அரசு (C.B.C.I.D.) விசாரணை அனுமதித்து இருக்கிறார்கள். அதில் வேறு சில கேஸ்கள், அதாவது சிலை உடைத்தது போன்றவையும் சேர்க்க வேண்டுமென்று அங்கே பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் என்னிடம் குறை சொல்லி இருக்கிறார்கள். தயவுசெய்து அதையும் அது சம்பந்தப்பட்ட எல்லா வழக்குகளையும் C.B.C.I.D.-க்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பினை அளித்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லத்தீப் உட்காருங்கள். அவரை உட்காரச் சொல்வதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. நிஜாமுதீன் பேச ஆரம்பித்து, மீதி நேரத்தை நீங்களே எடுத்துக்கொண்டீர்கள். முதலில் உங்களைத்தான் பேசக் கூப்பிட்டிருந்தேன். (குறுக்கீடு) திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் தொடர்ந்து பேசுங்கள்.



**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையானது தமிழகத்தில் இருக்கிற ஒட்டுமொத்த விவசாயிகளையும் ஏமாற்றியிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லத்தீப் உட்காருங்கள். அனுமதியின்றிப் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் பேசுங்கள், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** முற்றிலும் நெல் விவசாயத்தை நம்பி இருக்கிற தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினத்தைச் சேர்ந்த ஒட்டுமொத்த நெல் விவசாயிகள் சென்ற மூன்றாண்டுகளில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லத்தீப் உட்காருங்கள். அனுமதியின்றிப் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. திரு. திருஞானசம்பந்தம் நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) அவர் பேசுவார் என்று நீங்கள் சொல்ல முடியாது. அதை நான்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) முடியாது. அந்த உரிமை உங்களுக்குக் கிடையாது. என்னிடம்தான் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. திருஞானசம்பந்தம் நீங்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு) அந்த உறுப்பினரைப் பேசச் சொல்லக்கூடாது என்று நீங்கள் சொல்லக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவரைப் பார்த்து உரத்த குரலில் பேசுவதாலேயோ, மிரட்டுவதுபோல பேசுவதாலேயோ, தன் பக்கம் நியாயம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கருதக்கூடாது. இந்த அவையிலே நீண்ட காலமாக உறுப்பினராக இருந்தவர். எனவே அவையினுடைய நேரம், அவையினுடைய நிலைமை ஆகியவற்றை எண்ணிப் பார்த்துத்தான் அவர் சொல்ல வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு, இன்னும் ஒரு இரண்டு நிமிடங்கள் கொடுங்கள் என்று கேட்பது வேறு; கேள்வி கேட்பது என்பது, எல்லோரும் கேள்வி கேட்டால் பிறகு துணை சபாநாயகர் எப்படி அவையை நடத்த முடியும்?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** **

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2001 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் மிரட்டும் தொனியில் பேசுவதைக் கண்டு நான் ஆவேசப்படவில்லை. மாறாக, அனுதாபப்படுகிறேன். (குறுக்கீடு) ** பேசுவது நன்றாக இருக்காது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் முறைகேடாக நடக்கக்கூடாது. மரபு தெரிந்த மூத்த உறுப்பினர் முறையாக நடந்து கொள்ள வேண்டும். (குறுக்கீடு) உங்கள் ஒருவருக்காக நான் சபையை நடத்த முடியாது. திரு. திருஞானசம்பந்தம், நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசவில்லை என்றால் நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட வேண்டிவரும்.

(இந்திய தேசிய லீக் கட்சியின் உறுப்பினர்களான திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஜி. நிஜாமுதீன் மற்றும் திரு. முகம்மது கோதர் மைதீன் ஆகியோர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** பெரிதும் விவசாயத்தை நம்பி இருக்கிற தஞ்சை மாவட்டம், நாகை மாவட்டம், திருவாரூர் மாவட்ட நெல் விவசாயிகள் மூன்றாண்டுகள் தொடர்ந்து இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டு, அவர்களுடைய விவசாயக் கடனையும் வட்டியையும் ரத்து செய்யச் சொல்லி சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே ஒரு மாபெரும் மறியல் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த மறியல் போராட்டத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கலந்துகொண்டு அன்று பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கைதுசெய்யப்பட்டார்கள். அதேபோல, கோட்டையிலே, விவசாயக் கடனை ரத்து செய்யச் சொல்லி இந்த மாமன்றத்தினுடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் மறியல் செய்ததோடு, மறுநாள் இந்த மாமன்றத்திலே விவசாயிகளுடைய அனைத்து கடனையும் ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களும் அனைத்து எதிர்க்கட்சியினரையும், அனைத்து தரப்பினரையும் கலந்துபேசி இதற்கு ஒரு நல்ல முடிவை எடுப்பதாகச் சொன்னார்கள். தற்போது அபராத வட்டியை மட்டுமே குறைத்திருப்பது விவசாயிகளுக்கு கண்துடைப்பாக இருக்கிறது. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் விவசாயிகளுடைய வட்டியையாவது முழுமையான அளவிலே ரத்து செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 பிப்ரவரி 1] [திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்]

பிற்பகல் 12-35

தற்போது தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு மையத்திலும் தினந்தோறும் 500 மூட்டைகளுக்கு மேலே நெல் கொள்முதல் செய்வதற்கு மறுக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில்கொண்டு ஒவ்வொரு மையத்திலும் ஏறக்குறைய 5 இலட்சம் ரூபாய் மதிப்பிலாவது தினந்தோறும் நெல் கொள்முதல் செய்யப்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு நிலைகளில் பொருளாதாரம் உயர்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் நெல்லுக்கான ஊக்கத்தொகை தற்போது குவிண்டாலுக்கு 40 ரூபாய் வழங்கப்படுவதை 60 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டையிலே இயங்கிவரும் அரசினுடைய நவீன அரிசி ஆலை அந்தப் பகுதியினுடைய சுற்றுச்சூழலைப் பாதிக்கிறது என்று சொல்லி, அதை அருகில் இருக்கின்ற புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாற்றப்போவதாகச் சொல்லப்படுகிறது. தொடர்ந்து பட்டுக்கோட்டையிலேயே அந்த நவீன அரிசி ஆலை இயங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது 10 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதாக அரசு அறிவித்திருக்கிறது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் ஏறக்குறைய 4 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அத்தனை சர்க்கரை ஆலைகளுக்கும் உட்பட்ட கரும்புகள் ஏறக்குறைய 8 சதவீதம் பிழிதிறன் உள்ள கரும்புகளாகத்தான் இருக்கின்றன. ஆனால் உற்பத்திச் செலவானது 10 சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கான உற்பத்திச் செலவாக இருக்கின்ற காரணத்தாலே முழுமையாக விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தனை கரும்பு விவசாயிகளுக்கும், எல்லா வகை கரும்புககும் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் உள்ள குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கு வழங்கப்பட்ட கரும்புக்கு உரிய பணம் ஏறக்குறைய 5 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதையும் விரைவிலே விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தற்போது தேங்காய் விலை மிக மோசமான நிலையில் 10 ரூபாய்க்கு 10 தேங்காய் என்று விற்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசும் தற்போது NABARD மூலமாக தேங்காய் கொப்பரை கொள்முதல் செய்தாலும் விவசாயிகள் எல்லாம் முழுமையான அளவிலே அந்தப் பயனை அடைய முடியாமல் இருக்கிறார்கள். காரணம் சிறு விவசாயிகள், சாதாரண விவசாயிகள் எல்லாம் கொப்பரை உற்பத்தி செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் பெரிய வியாபாரிகள் எல்லாம் அந்த வசதியைப் பெற்றிருக்கிறார்கள். எனவே அரசின் சார்பாக நேரடி தேங்காய் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அதோடு அந்தத் தேங்காய்கள் அதிகமாக உற்பத்தி ஆகின்ற பகுதிகளிலே அரசின் சார்பாக தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் எல்லாம் தற்போது ஒரு மருத்துவர் மட்டும்தான் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதுவரையில் கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியில் ஏறக்குறைய 9 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடர்ந்து ஒரு மருத்துவர் மட்டும்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார். 24 மணிநேர மருத்துவமனைகளாக செயல்படும் என்று அறிவிக்கப்படும் மருத்துவமனைகளிலேகூட இன்னும் போதுமான மருத்துவர் நியமனமும் வசதிகளும் செய்யப்படாமல் இருக்கின்றன. பேராவூரணியில் இருக்கின்ற தலைமை மருத்துவமனைக்கு கண் மருத்துவரையும், E.N.T. Specialist-ஐயும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆதிதிராவிட மக்களுக்கு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் முன்பு கட்டப்பட்ட வீடுகள் எல்லாம் இன்று மிகவும் மோசமான நிலையில், பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டபோது ஒரு சில பகுதிகளுக்குத்தான் குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த வீடுகள் எல்லாம் பழுது நீக்கம் செய்யப்படுகின்றன. முழுமையான அளவிலே அனைத்து ஆதிதிராவிடர் வீடுகளும் பழுது நீக்கம் செய்யப்பட வேண்டும். அனைத்து ஆதிதிராவிடர்களுக்கும் இன்னும் கூடுதலாக வீட்டுவசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு மீனவ கிராமங்களில் இணைப்புச் சாலைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் ஏறக்குறைய 35 மீனவர் கிராமங்கள் இருக்கின்றன. அத்தனை கிராமங்களிலும், அரசு பொறுப்பினை ஏற்ற இந்த 4 ஆண்டு காலத்திலே இதுவரை எந்தவிதமான சாலை வசதியும் செய்யப்படாமல் இருக்கிறது.

பிற்பகல் 12-40

அடுத்து தற்போது தமிழக அரசின் சார்பாக தமிழகத்தின் கடலோரப் பகுதியிலே இருக்கிற மீனவர்கள் திசை தவறிச் செல்கின்றவர்களை மீட்பதற்காக ரூ.5 கோடி மதிப்பீட்டிலே 5 விரைவுப் படகுகள் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஓராண்டு காலமாக அந்த விரைவுப் படகுகள் செயல்படாமல் இருக்கின்றன. அதற்குரிய பணியாளர்கள் இன்னும் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியாக இருக்கின்ற பேராவூரணி, பட்டுக்கோட்டைப் பகுதிகளிலே தண்ணீர் திறக்கப்பட்டு காலதாமதமாக வருவதால், பட்டுக்கோட்டை ஒன்றியத்திலே இருக்கின்ற இராஜாமடம் பகுதியிலே மிகவும் மோசமான நிலையிலே விவசாயம் இன்னும் முழுமையான அளவிலே செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மகாராஜாசமுத்திரம் ஆற்றிலே நீரேற்றும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அரசுக்கு பல்வேறு முறை கோரிக்கை வைத்து, தஞ்சை மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை தந்து, நிச்சயமாக இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்த வசதி இதுவரை செய்து தரப்படவில்லை. அதோடு, தஞ்சை மாவட்டத்தின் கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதியாக இருக்கின்ற பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எனது தொகுதியிலே பேராவூரணி மற்றும் திருச்சிற்றம்பலம், திருமுகளூர் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் தொடங்குவதற்காக அரசுக்கு அந்தஅந்தப் பகுதியிலே இருக்கின்ற பொதுமக்கள் சார்பாக நான்கு, நான்கு ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகாலம் ஆகியிருக்கிறது. இதுவரை அங்கே துணை மின்நிலையத்திற்கான பணி தொடங்கப்படவில்லை. தாலுகா அளவிலே செயல்படும் கூட்டுறவு

வீட்டுவசதி சங்கங்களில் சென்ற ஆண்டு முதல், ஓராண்டு காலமாக முழுமையான அளவிலே மானியத்துடன் கூடிய சிறிய வீடுகள் கட்டுவதற்கு வழங்கப்படுகின்ற கடன் தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதையும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த அரசு 4 ஆண்டு காலத்திலே பல்வேறு முறை, பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது. மண்ணெண்ணெய் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. டீசல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. இதுபோன்று பல்வேறு சுமைகள்தான் பொதுமக்களுக்கு ஏற்றப்பட்டிருக்கிறன்றன என்பதைச் சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் வை. இராமசாமி.

***டாக்டர் வை. இராமசாமி:** சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது நடக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு, கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

30-11-2000 அன்று கடலூர் மாவட்டத்தையும் மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளையும் பாதிக்கக்கூடிய அளவில் அடித்த புயலினால், என் தொகுதியில் பாதிக்கப்பட்ட நிலையை எடுத்துக் கூறி, தலைவர் அவர்களின் கருணை உள்ளத்தையும், கனிவான பார்வையையும் கோருவதற்காக முதலிலே என்னுடைய தொகுதியைப்பற்றி, புயலால் பாதிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சியை எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட பயிரினங்களையும், பரப்பளவையும் சுமாராக அதனுடைய மதிப்பையும் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கு முன்னாலே இயற்கைச் சீற்றங்களால் புயல் அடித்தாலும் அல்லது மழை அதிகமாகப் பெய்து நெல், வாழை, கரும்பு முதலியன சேதமுற்றிருப்பின், அவற்றிற்கு ஏக்கருக்குத் தகுந்தவாறு, அல்லது ஹெக்டேருக்குத் தகுந்தவாறு இவ்வளவுதான் வழங்குவது என்று இதற்கு முன்னாலே வழக்கத்திலே இருந்தாலும், இந்த சமயத்திலே அடித்த புயலினால், என்னுடைய தொகுதியிலே பெரிதும் பலாவும், முந்திரியும் பாதிக்கப்பட்ட அந்த நிலையை நான் எடுத்துக்கூற



விரும்புகிறேன். எங்கள் பகுதியில் ஒரு ஹெக்டேரில் முந்திரி பயிரிட வேண்டுமானால், குறைந்தது 200 மரங்கள்; அதேபோல, பலா வைப்பதானால் 100 மரங்கள் இருக்கும். இவற்றைக் காய்க்கக்கூடிய அளவிலே கொண்டுவந்து நிறுத்துவதற்கு நான்கு, ஐந்து ஆண்டுகள் ஆகும். எங்கள் மக்கள் தலையிலே தண்ணீரைச் சுமந்து கொண்டுபோய் இந்த மரங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்குவார்கள். அந்த மரங்களெல்லாம் கடந்த புயலின் காரணமாக வேரோடு வீழ்ந்தும், முந்திரி மரங்களெல்லாம் சிதைந்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு, இதுவரை பலாவாக இருந்தாலும், முந்திரியாக இருந்தாலும், காய்க்கத் தொடங்கவில்லை என்ற அந்த நிலையை எடுத்துச் சொல்லி எங்களுடைய பகுதிக்கு, அந்த மாவட்டத்திற்கு வழங்கியிருக்கிற புயல் நிவாரண நிதியைத் தலைவர் அவர்கள், தாய் உள்ளத்தோடு, உயர்த்தித் தர வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

4-2-2001 கல்கி வார இதழிலே ஒரு தலையங்கம் வந்திருக்கிறது. அது அவ்வளவையும் படிப்பதற்கு நேரம் இல்லாத காரணத்தால், மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் அவர்கள் நம்முடைய மாநிலத்தைப்பற்றி சொல்கின்றபோது, ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக தனது ஆற்றலை வளர்த்துக்கொண்டிருக்கும் தமிழகத்தை Silent Power House என்று பாராட்டியுள்ளார்கள். அவர்களிடத்திலேயிருந்து பாராட்டு பெறுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்றாலும், அவர்கள் இங்கே பாராட்டியுள்ளார்கள்.

*பிற்பகல் 12-45*

அதுபோல தொழில் வர்த்தக அமைப்பான F.I.C.C.I.-ம் மாநில அமைப்பான M.C.C.I.-ம் நடத்திய மாநிலங்கள் முன்னேற்ற கருத்தரங்கில் பல அறிஞர்களும் மத்திய அமைச்சரோடு பேசியிருக்கிறார்கள். அதிலே ஹார்வேர்டு பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கையின்படி, சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதில், பாரதத்திலேயே முதன்மை இடத்திலே இருப்பது தமிழகம்தான் என்ற கருத்து வெளியாகி இருக்கிறது. உற்பத்திப் பொருளை 100 சதவிகிதம் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கை தமிழகத்தில்தான் அதிகம் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

1914 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள தகவல் தொழில்நுட்ப மென்பொருள்கள் தமிழகத்திலிருந்து, கடந்த நிதியாண்டில் ஏற்றுமதியாகி இருக்கின்றன என்றும், ஹார்வேர்டு பிரதிநிதியான, பேராசியர்

ஜெஃப்ரிசாக்ஸ், சமுதாய முன்னேற்றப் பணிகளிலும் தமிழகம் சளைத்துவிடவில்லை என்ற கருத்தையும் கூறி, இறுதியாகக் கூறுகின்ற அந்தக் கருத்தோடு, நான் பேசி முடிக்கலாம் என்று கருதுகின்றேன். இந்த முன்னேற்றம் தொடருவதும், மேம்படுவதும், வரவிருக்கும் தேர்தல்களின் முடிவுகளைப் பொறுத்தே அமையும் என்று தலைவர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கைகளிலே கூறுகின்றபோது, இது ஒரு இடைக்கால நிதிநிலை அறிக்கை, மற்ற மொத்த செலவினங்களைப்பற்றியும், மற்ற திட்டங்களைப்பற்றியும் தேர்தலுக்குப் பிறகு வருகின்ற அந்தச் சட்டமன்றம், அந்த நிதிநிலை அறிக்கையில் அளிக்கும் என்று சொல்லியிருக்கின்றார். அதுபோல வருகின்ற காலங்களிலும் தலைவர் அவர்கள்தான் 5-வது முறையாக முதல்வராக பொறுப்பேற்று, இந்த அவையிலே அவர் தன்னுடைய நிதிநிலை அறிக்கையை அளிப்பார்கள் என்று கூறிக்கொள்ள நான் மிகவும் ஆசைப்படுகிறேன்.

சுந்தரம் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, ஏதோ எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இப்படித்தான் பேச வேண்டுமென்ற முறையிலே பேசினார்களே தவிர, அவர்கள் மனசாட்சியைத் தொட்டுப் பேசியதாக நான் நினைக்கவில்லை. அவர்கள் சொன்னார்கள். அடுத்து வரப்போவது அவருடைய தலைவிதான், இங்கே முதல்வராக அமர்ந்து பட்ஜெட்டை படிக்கப் போகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். இது உள்ளபடியே அவருடைய தலைவியைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் சொன்ன வாசகமே தவிர, நடக்கப் போவதில்லை என்பதை நாங்கள் போய் வ..ருகிற இடங்களிலே எல்லாம் இந்த நாட்டு மக்கள் நன்றாகத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே சுந்தரத்திற்கு...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது உங்களுடைய கருத்தைச் சொன்னீர்கள். அவர் அவருடைய கருத்தைச் சொல்கிறார். அதற்கெல்லாம் பதிலுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதேமாதிரி..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.



**டாக்டர் வை. இராமசாமி:** சுந்தரம் அவர்கள், இந்த நான்கரை ஆண்டுகாலத்திலே அவர்கள் கடைபிடித்து வந்த, அந்தத் தந்திரத்தினுடைய ஒரு பகுதியாகத்தான் இது இருக்கும் என்று கருதுகிறேன். இதோடு விடுத்து...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒன்றே ஒன்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சரி. பரவாயில்லை. திரு. இராமசாமி, நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் வை. இராமசாமி:** என்னுடைய தொகுதியில், புயலடித்து ஏற்பட்ட சேதத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறபொழுது, சுந்தரத்தைப்பற்றிய நினைவு வந்துவிட்டது. மன்னிக்கவும். அவர்கள் அந்த அளவிற்கு இங்கே பேசினார்கள். புயல் அடித்த அந்த நேரத்தில் தலைவர் அவர்கள் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் இரகுமான்கான் அவர்களையும், மாவட்ட அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களையும் அங்கே அனுப்பி மற்றும் வருவாய்த் துறைச் செயலாளர் அவர்களையும் அனுப்பி, ஒரே நாளில் 12 மணி நேரத்தில், நாங்கள் அந்த மாவட்டம் முழுவதும் சுற்றி வந்து பார்த்து, நிலைமைகளை நேரிலே அறிந்து, தலைவர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்தார்கள். புயல் அடிக்கின்ற இந்த நிலையை முன்கூட்டியே அறிந்த காரணத்தினால், கடலூர் மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் இணைந்து பணியாற்றிய காரணத்தினால், 24 மணி நேரத்திற்குள் எல்லாம் சீர்செய்யப்பட்டு, நிகழ்வுகள் சீர்செய்யப்பட்டு நிலைமை திருத்தி அமைக்கப்பட்டது.

பிற்பகல் 12-50

வேளாண் விற்பனைக் குழுவினுடைய தேர்தல் 22 ஆண்டுகளாக நடைபெறாமல், மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் தனி அலுவலர்கள் மூலமாகச் செயலற்றுக் கிடந்த இந்த வேளாண் விற்பனைக் குழுவினுடைய தேர்தலை தலைவர் அவர்களும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கடந்த ஓராண்டிற்கு முன்னாலே, அதற்கு ஒரு தேர்தலை ஏற்படுத்தி, அந்தத் தேர்தல் மூலமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், இப்போதெல்லாம் நல்ல முறையிலே நிர்வாகம் செய்துகொண்டு வருகிறார்கள். அரசு விவசாயிகளுக்கு ஒன்றும் செய்யவில்லை, செய்யவில்லை என்று சொல்கின்ற இதே சபையிலே இந்த வேளாண்மைத் துறை மூலமாகச் செய்கின்ற ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துச்சொல்ல நான் விரும்புகிறேன்.

விளைபொருட்களைக் கொண்டுவரும் விவசாயிகளுக்குச் சேர வேண்டிய முழுத் தொகையையும் அன்றே செலுத்தி விட வேண்டும் என்று தலைவர் அவர்கள் தன்னுடைய திட்ட அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் எடுத்துச் செல்லும் விளை பொருட்களுக்கு விற்பனைக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. அதுபோல, குறைந்த வட்டியிலும் அல்லது வாடகை இல்லாமல் வியாபாரிக்கு பொருட்களைச் சேர்த்துவைக்கின்ற அந்த வசதிகளை செய்து கொடுத்திருக்கின்றார்கள். தலைவர் அவர்கள் தெரிவித்த அல்லது இந்த நாட்டிலே கொண்டுவந்த திட்டங்கள் எல்லாம் இப்போது பெரிதும் விவசாயிகள் மத்தியிலே இருந்தாலும் அல்லது உடல் உழைப்புத் தொழிலாளர்கள் மத்தியிலும் பேசப்படுகின்ற தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர், சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியங்களைக் கண்ட தலைவர் அவர்களுக்கு விவசாயத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், காலணி தயாரிப்போர், கைவினைஞர்கள், தையல் தொழிலாளர்கள், அத்தனை பேரும் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதிக எண்ணிக்கை கொண்ட சில வகைத் தொழிலாளர்களுக்காக இந்த அரசு தனித் தனியாக நல வாரியங்கள் கண்டுள்ளது என்ற முறையிலே தங்களுடைய வாசகங்களை அமைத்து இந்தத் திட்டங்களை எல்லாம் செய்துகொண்டு இருக்கிறார்கள். அவற்றிலே விபத்து நிவாரண நிதி, திருமண உதவி, மகப்பேறு நலன், குழந்தைகள் படிப்பு வசதி ஆகியவற்றை இந்த வாரியங்கள் வழங்கும் என்று வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். 100 ரூபாய் கட்டி அதிலே உறுப்பினரானால், இத்தனை வசதிகளும் கிடைக்கும் என்ற எண்ணத்தில் மக்கள் வரவேற்கிறார்கள், வாழ்த்துகிறார்கள். தலைவர் அவர்கள் மீண்டும் 5-வது முறையாக பொறுப்பு ஏற்று இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையை வாசிக்க இருக்கிறார்கள், அளிக்க இருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை மனமார, உளமார நான் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 2001-2002 இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது சில விவரங்களைச் சொல்லக் கருதுகின்றேன். டீசல் விலை உயர்வு, சமையல் கேஸ் விலை உயர்வு, மண்ணெண்ணெயினுடைய விலை உயர்வு, மருந்துப் பொருட்களுடைய விலை உயர்வு, சிமெண்டினுடைய விலை உயர்வு காரணமாக கிராமப் பகுதியிலே இருக்கின்ற சாமானிய மக்கள்



பாதிக்கப்படுகின்றார்கள். அந்த வகையிலே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கான கருத்துக்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகம் இல்லை. எனவே அதைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெய்யார் இடைநிலைக் கால்வாய். இந்தக் கால்வாய் வெட்டுவதற்கு சுமார் 1¼ கோடி ரூபாய் உலக வங்கிக் கடனைப் பெற்று சுமாராக முடித்திருக்கிறார்கள். இப்போது தண்ணீர் தரப்படுகின்றது. எனவே அந்தத் துறைக்கும், இந்த அரசுக்கும் என்னுடைய நன்றியை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று மடிச்சல் கால்வாயிலே தூர்வாருவதற்கு 10 இலட்சம் ரூபாய் வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதை அனுமதித்தால், இந்த இடைநிலைக் கால்வாயில் வருகின்ற தண்ணீரைக் கொண்டு, அந்தப் பகுதி நிறைவடையும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று குமரி மாவட்டத்தில் தூத்தூர் பகுதியில் சுமார் 8 மீனவர்கள் காணாமல்போய் மாலத் தீவிலே அவர்கள் கைது செய்யப்பட்டு 3 மாதங்கள் தாண்டிவிட்டது. பல முயற்சிகள் மேற்கொண்டும், கடைசியாகக் கேட்கின்றபோது பேச்சுவார்த்தைகள் நடக்கின்றது என்று சொன்னார்களே தவிர, அவர்கள் மீட்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுடைய 8 குடும்பங்களும் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே அவர்களை விரைவிலே மீட்டுத் தருவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவக் கடலோர கிராமங்களிலே கடந்த 6 மாதங்களுக்கு முன்னாலே கல்லைப் போட்டார்கள், கடல் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக. குறிப்பாக மார்த்தாண்டம் துறையிலிருந்து இரையும்மன் துறை, பூத்துறை வரையிலே 4½ கிலோ மீட்டருக்கு கல் போடாததன் விளைவாக 6 மாதங்களுக்கு முன்னால் கடல் ஆக்கிரமிப்பினால் 100-க்கும் அதிகமான வீடுகளை இழுத்துக் கொண்டுபோய் இருக்கிறது. ஒரு மனித உயிரும் அதிலே பலியாகி உள்ளது. அந்தப் பகுதியிலே கல் போட்டு அதைப் பாதுகாக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தூண்டில்வளைவு என்று சொல்கின்ற அந்தக் கடலுடைய தாக்கல் இருப்பதற்கான பல்வேறு பகுதிகளிலே அதனுடைய ஆய்வை எல்லாம் நடத்தினார்கள். ஆனால் வேலைகள் ஒன்றும் நடக்கவில்லை. அந்த நிலைக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தூண்டில் வளைவுகளை உடனே அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பகுதியிலேதான் பூத்துறை பாலம் என்ற ஒரு பாலம் இருக்கிறது. அது உடைந்துபோய் உள்ளது. மீனவ மக்கள் பெருவாரியாக கரையோரப் பகுதிக்குள் செல்கின்ற பகுதி அது. ஆகவே அந்த பூத்துறை பாலத்தைக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுபோன்று அந்த மீனவ மக்கள் பொதுவாக மிகப் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருக்கிற காரணத்தினாலே இன்று கன்னியாகுமரி மாவட்டத்திலே பெரிய ஆர்ப்பாட்டம் அல்லது உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும், அதுபோன்று இந்த மாதிரி சமூகத்தைச் சார்ந்தவர்களை-செக்காளா சமூகம் என்று சொல்வார்கள்-அவர்களையும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்து ஏற்கெனவே பல முறை இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்ட ரப்பர் பேக்டரியினுடைய பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாமல், இந்த அறிக்கையிலே இடம் பெறாமல் இருக்கிறது. எனவே ரப்பர் பேக்டரியைப் பொறுத்தமட்டிலே அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டும். ரப்பர் இன்றைக்கு அதிகமாக இறக்குமதி ஆகின்ற காரணத்தினாலே கட்டுப்படியாகாத விலை என்ற ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவேதான் ரப்பருக்குப் போட்டிருக்கின்ற அனைத்து வரிகளையும் ரத்து செய்வதோடு ரப்பரை பெருவாரியாகப் பயன்படுத்தி நம்முடைய நெடுஞ்சாலையிலும், தேசிய நெடுஞ்சாலையிலும் ரப்பர் ரோடுகளை நாம் போடுகின்றபோது, ஒரு முறை போட்டால் 10 ஆண்டுகளுக்கு திரும்ப அதை நாம் பழுதுபார்க்க வேண்டி வராது. அந்த வகையிலே ரப்பரை பாதுகாத்துக்கொள்வதற்கு நம்முடைய தார்ச்சாலைகளுக்குப் பதிலாக ரப்பர் சாலைகளைப் போடுவதால் நம்முடைய சாலைகள் சரியாகப் பராமரிக்கப்படும். அந்த வகையிலே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று அரசுக்குச்



சொந்தமான ரப்பர் தோட்டத்திலே சுமார் 500-க்கு அதிகமான ஏக்கராவிலே மரத்தை முறித்துவிட்டார்கள். ஆனால் re-plantation செய்யப்படவில்லை. இந்த நிலை நீடிக்குமேயானால் 4000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே re-plantation நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினை என்று சொல்கின்றபோது கன்னியாகுமரி மாவட்டத்திலே வலிய ஏலா என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்த வலிய ஏலாவிலே இருக்கின்ற விவசாயிகள் 50 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருக்கிறார்கள். தவறுதலாக 1955-லிருந்து அதை வனப் பகுதியாக மாற்றிய காரணத்தினால் இன்று அவர்களுக்கு பட்டா கிடைக்கவில்லை, மின்சாரம் இல்லை, வழிப்பாதை இல்லை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. 1955-க்கு முன்னால் அது ரெவின்யூ நிலமாக இருந்தது. அந்தத் தன்மையை ஏற்றுக்கொண்டு அந்தப் பகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டா வழங்குவதிலே இலவசமாக பட்டா வழங்கப்படும் என்று சட்டமன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. ஆனால் 3 செண்ட் நிலத்திலே ரூ. 10,000 மதிப்புள்ள வீட்டைக் கட்டியிருந்தால் அதற்கு என்று கிரயமாக அல்லது வரியாக 10,000 ரூபாய் செலுத்தினால் மட்டும்தான் அதற்கு இலவச பட்டா என்று வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே ரூ.5 இலட்சம் மதிப்புள்ள ஒரு கட்டடத்தைக் கட்டியிருந்தால் அவர்களிடத்திலே வரி ஏதாவது வாங்கினால் அதை ஏற்றுக்கொள்ள முடியும். சாதாரண 10,000 ரூபாய்க்கு 15,000 ரூபாய்க்கு ஒரு வீட்டைக் கட்டியிருந்தால் அவர்களிடத்திலிருந்து இந்தக் கிரயம் வாங்குவது என்பது சரியாக இருக்காது. எனவே இலவச பட்டா என்று சொல்கின்றபோது 1957 ஆம் வருடத்திலே கேரளாவிலே EMS.-அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நகர்ப் பகுதியிலே 5 செண்ட் நிலத்தை இலவச பட்டாவாகவும், அதுபோன்று கிராமப்புறத்திலே 10 செண்ட் நிலத்தை இலவச பட்டாவாகவும் கொடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே ஒரு நடவடிக்கை மேற்கொள்வது ஏழை எளிய மக்களைப் பாதுகாக்க உதவிகரமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இலவச பட்டா வழங்குவதுபற்றி சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அரசு நிலங்களிலே

ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்துவரும் அரசு ஊழியர்கள் அல்லாத அனைத்துப் பொது மக்களும் இதற்குத் தகுதி பெற்றவர்கள். இவர்களில் குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறமாயின் 16,000-க்குள்ளும், நகர்ப்புறமாயின் 24,000-க்குள்ளும் இருக்க வேண்டும் என்று சொல்லி குறிப்பிட்ட நிலம் அவர்களுக்கு eligibility-படி இலவசமாகத்தான் கொடுக்கப்படுகிறது. இந்த விதிகளுக்கு அப்பாலே வருகிறபோதுதான் market guidelines-லே அவர்களிடத்திலே பணம் வசூலிக்கின்றோம்.

**திரு. டி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்து சொன்னார்கள். ஆனால் யதார்த்தமாக கிராமப் பகுதிகள் என்று சொல்கின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலே 4 நகராட்சிகள் நீங்கலாக மற்ற பகுதிகள் பூராவும் கிராமப் பகுதிகள். அந்தக் கிராமப் பகுதிகளிலே 20, 30 ஆண்டுகளாகக் குடியேறியிருக்கிறார்கள். அவர்களிடம் சென்று இப்போது 10,000 அல்லது 20,000 ரூபாய்க்கு வீடு கட்டிவிட்டார்கள் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி நாம் இப்படி வசூலிப்பது என்பது சரியாக இருக்காது. அந்த வகையிலே அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல தொழில் வளர்ச்சி சம்பந்தமாக சில பிரச்சினைகள் அதிலே எழுகின்றன. சில பகுதிகளில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையாக இருந்தாலும் மாநிலம் பூராவும் சீரான தொழில் வளர்ச்சி உண்டா என்றால் இல்லாத ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம். அந்த வகையிலே வேலை இல்லாதவர்களுடைய எண்ணிக்கை ஒரு பக்கத்திலே பெருகி, இன்னொரு பக்கத்திலே ஆலைகளை மூடுகின்ற ஒரு சூழ்நிலையும் நம்முடைய மாநிலத்திலே இருக்கிறது. அதையும் அரசு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தமட்டிலே ஒரு பெருவாரியான சிக்கல் இருக்கின்ற நேரம். பொதுவாக கல்வித் துறை என்பது பெருவாரியாக நம்முடைய அரசினுடைய கையிலிருந்து தனியார் துறைக்குச் செல்கின்ற ஒரு சூழ்நிலைக்கு நாம் சென்றுகொண்டிருக்கிறோம். அதனுடைய விளைவு என்னவென்று சொன்னால் ஒரு தனியார் பள்ளியிலே சென்று ஒரு வேலை வேண்டும் என்று கேட்டு வேலை கிடைத்துவிட்டால், மேல்நிலைப் பள்ளி என்று சொன்னால் அந்த வேலைக்காகக் கொடுக்கின்ற பணம் என்பது 6 இலட்சம் ரூபாய்.



இந்த அளவிலே விலை போகுமானால் நம்முடைய கல்வியை நாம் எப்படிப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது.

பிற்பகல் 1-00

அடுத்து, அந்த மாவட்டத்திலே 4 இலட்சத்திற்கும் அதிகமாக மலையாள மொழி பேசுகின்ற மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கென்று அந்த மலையாள மொழியைப் பாதுகாப்பதற்கு ஒரு சூழ்நிலை வேண்டும். போதுமான ஆசிரியர்கள் இல்லாத ஒரு சூழ்நிலையும் இருக்கின்றது. ஆகவே அதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தமட்டில் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கருத்தைச் சொல்லிவிட்டார்கள். காலம் தாழ்ந்தாகிலும் அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்துகின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்ததற்கு (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய நன்றியை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மருத்துவமனைகளில் நம்முடைய சென்னைக்குள்ளே இருக்கின்ற மருத்துவமனையானாலும் சரி, கோட்டாறிலே இருக்கின்ற மருத்துவமனையானாலும் சரி, குழித்துறையிலே இருக்கின்ற மருத்துவமனையானாலும் சரி, அங்கெல்லாம் போதுமான மருந்துகள் உண்டா என்று கேட்டால், இல்லை. அதேபோன்று பாதுகாப்பான நடவடிக்கைகள் இருக்கின்றதா என்று கேட்டாலும் இல்லாத ஒரு சூழ்நிலைதான் இருக்கின்றது. ஆகவே இதையும் நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து உள்ளாட்சிகள். உள்ளாட்சிகளைப் பொறுத்தமட்டிலும் கடைசி முறையாகச் செலுத்த வேண்டிய 3-வது முறையாகச் செலுத்த வேண்டிய சிற்றூராட்சிகளுக்கான பணமும் போய்ச் சேராத நிலை இருக்கிறது. அதிலேயும் குறிப்பாக இந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்ற ஒரு கருத்தைப்பற்றி நாம் சொல்லி வருகின்றோம். நான் ஒரு பேரூராட்சியினுடைய பெருவாரியான பகுதிகளைப்பற்றிச் சொல்கிறேன். பேரூராட்சியினுடைய பெருவாரியான பகுதிகளிலே கடையாலுமூடு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்கப்படவில்லை. அது கோதையாறிலே

ஆரம்பித்து, Zero-point-டிலே வந்து மருதம்பாறையிலே போய், பத்து காணியிலே போய், ஆறு காணியிலே போய் வருகிறது. இந்தப் பகுதி முழுவதற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே ஒரு பெரிய major scheme-ஐ நாம் எடுத்துக்கொண்டால் மட்டும்தான் அந்தப் பகுதி மக்களுக்குச் சீரான குடிநீரைத் தர முடியும்.

அடுத்து, தேங்காய் விலை வீழ்ச்சியினுடைய பிரச்சினை. நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இறக்குமதி காரணமாக, நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான தேங்காயை நாம் உற்பத்தி செய்கின்றோம். எனவே அப்படிப்பட்ட நிலையிலே இன்னும் தேங்காய் கொப்பரை இறக்குமதி செய்யப்படுவதனுடைய விளைவாக-பிலிப்பைன்சிலிருந்தும், இலங்கையிலிருந்தும் இந்தக் கொப்பரை இறக்குமதி செய்வதனுடைய விளைவாக நம்முடைய கொப்பரையினுடைய விலையும் இடிந்துபோய் தேங்காயினுடைய விலையும் இடிந்துபோய்விடுகின்றது. எனவே கிராமப்புற விவசாயிகளுடைய நிலை படுமோசமான நிலையாக இருக்கின்றது. எனவே கொப்பரை இறக்குமதியைத் தடை செய்ய வேண்டுமென்று மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

அதுபோன்று, நல்ல மிளகு, தேயிலை விலை வீழ்ச்சி, மஞ்சள் விலை வீழ்ச்சி இவையெல்லாம் விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருக்கின்றது. அதைத் தடுப்பதற்கான சீரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, தேசிய நெடுஞ்சாலை. அந்தத் தேசிய நெடுஞ்சாலையை சமீபத்திலே களியக்காவிளையிலேயிருந்து ஆரம்பித்து கன்னியாகுமரி வரையிலும் அந்த வேலையை ஆரம்பித்தார்கள். ஆனால் குழித்துறை நகர எல்லைக்குள்ளே வருகின்றபோது, கொஞ்சம் செய்தார்கள். மீதி வேலைகள் அப்படியே கிடக்கின்றன. இப்போது கேட்டால் பணம் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். கடந்த 4 மாதங்களாகப் போக்குவரத்திற்கு இடைஞ்சல் வருகின்ற வகையிலேயிருந்து பல விமர்சனங்கள் சென்றுகொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்குள்ளேதான் வருகின்றது குழித்துறை ஆற்றுப்பாலம். அந்தக் குழித்துறை ஆற்றுப் பாலமும் கட்ட வேண்டிய ஒரு காலகட்டமும் கடந்துவிட்டது. எனவே மத்திய அரசை நிர்ப்பந்தித்து அந்த குழித்துறையாற்றுப் பாலத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.



அடுத்து, அரசாங்கம் சொல்கின்ற ஒரு பெரிய செய்தி என்பது தந்தை பெரியார் சமத்துவபுரம். கன்னியாகுமரி மாவட்டத்திலே முதல்முறையாக கலிங்கராயபுரத்திலே சமத்துவபுரத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் ஒரு வருடம் முடிவதற்குள்ளாகவே 10 வீடுகள் ஒழுக ஆரம்பித்துள்ளன. இந்த நிலையிலே அதனுடைய தரக் குறைவு என்பது பொதுவாக ஏற்பட்ட ஒரு நிலை. ஆகவே இந்தப் பிரச்சினையையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

அடுத்து, கயிறு தொழில். அந்தக் கயிறு தொழில் நசிந்து வருகின்ற, சீரழிந்து வருகின்ற ஒரு தொழில். கயிறு, கயிறு பாய், கயிறு மெத்தை போன்றவற்றை விற்பனை செய்கின்றபோது விற்பனை வரியை ஈடாக்குகின்றார்கள். அந்த வரி வசூலிப்பதை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். அந்த விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய காவல் துறையினுடைய ஊழியர்கள், ஒரு கோரிக்கையை நீண்டகாலமாக வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய அரசு ஊழியருக்கு இணையான சம்பளம் அவர்களுக்கும் வழங்கப்படும் என்று. ஆனால் இன்னும் வழங்காத ஒரு குறை இருக்கிறது. அதைத் தீர்த்துக்கொள்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்றுதான் நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே 10 ஆண்டுகாலம், 20 ஆண்டுகாலம் முதல்நிலைக் காவலராக இருக்கின்றவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை என்ற ஒரு நிலை இருக்கின்றது. அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, மாம்பழத்தாறு அணைத் திட்டம் ஏற்கெனவே 30, 40 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்த மாமன்றத்திலேயே விவாதிக்கப்பட்டிருக்கிறது. அனுமதியெல்லாம் தந்துவிட்டார்கள். ஆனால் அதற்கான வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்ற புகார் இருக்கின்றது. அதைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். பரக்குன்றுப் பகுதியிலே ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தினுடைய ஒரு பகுதி உடைந்துபோய் விட்டது. அதைச் சீர் செய்வதற்கு 10 இலட்சம் ரூபாய் வேண்டும். அதனால் போக்குவரத்து தடைபட்டிருக்கின்றது. ஆக அந்த அடிப்படையிலே அதற்குத் தேவையான நிதியைத் தர வேண்டும்.

கடைசியாக, ஓரேயொரு கோரிக்கையை மட்டும் சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். குமரி மாவட்டத்தினுடைய விடுதலைக்காகப் போராடிய அந்த வீரர்கள் அல்லது தியாகிகள், அவர்களுடைய பிள்ளைகள் வாரிசு அடிப்படையிலே வேலை தர வேண்டும் என்று நம்முடைய சென்னை கார்ப்பரேஷனிலே அப்படி ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே குமரி மாவட்டத்திலிருந்து விடுதலைப் போராட்டத்திலே பங்கெடுத்த அந்தத் தியாகிகளுடைய குடும்பங்களுக்கு—அந்தப் பிள்ளைகளுக்கு வாரிசு அடிப்படையிலே இந்த மாவட்டத்திலே வேலைவாய்ப்பை உள்ளாட்சி மன்றங்களில் தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.கே. வீரப்பன்.

***திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அனுமதித்த தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே நாமக்கல்-கரூர் மாவட்டத்தை இணைக்கும் வகையிலே மோகனூருக்கும் வாங்கலுக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும் என்று சொல்லி அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அதற்காகவும் அதேபோன்று நாமக்கல்-ஈரோடு மாவட்டத்தை இணைக்கும் வகையிலே மொடக்குறிச்சி ஒன்றியம் லக்கபுரம், பரிசல்துறை, திருச்செங்கோடு,' கொக்கராயன் பேட்டைக்குமிடையே காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காகவும் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கரும்பு விவசாயிகளைப்பற்றி இந்த அவையிலே பேசிய பல பேர் பல குறைகளை எல்லாம் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே கரும்பு விவசாயிகள் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இப்போது மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். 10 புள்ளி



ரெக்கவரிக்கு டன்னுக்கு 1,000 ரூபாய் என்று அறிவித்திருப்பது, இன்றைய நாளது வரையில் பாக்கி இல்லாமல் பணம் வழங்கப்பட்டிருப்பது, மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று. கடந்த சீசனிலே எங்களுடைய மோகனூர் சர்க்கரை ஆலையிலே 9.2 ரெக்கவரி வந்தது. இந்த சீசனிலே 9.5 ரெக்கவரி வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. குறையாமல் வரும். ஆக, நிருவாகம் சரியாக இருக்கிற காரணத்தினாலே கொழுத்தாடை, போத்து போன்ற கரும்புகளை எல்லாம் கழிக்கின்ற காரணத்தினாலே 9.5 விழுக்காடு ரெக்கவரி வரும் என்ற நிலையிலே 950 ரூபாய் டன்னுக்கு என்கின்றபோது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அதோடு வட்டிச் சலுகை. விவசாயிகளுக்கு 30-6-2000 வரை செலுத்த வேண்டிய கடனை 30-6-2001-க்குள்ளே செலுத்தினால் 3 சதவிகித அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி. அதேபோன்று, 1-7-2000 முதல் அபராத வட்டி 3 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. உரிய நேரத்திலே கடனைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு 7 சதவிகித ஊக்கத்தொகை, போனஸ் வழங்கப்படும் என்று சொல்லி அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. தொடர்ந்து இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. புறம்போக்கு நிலத்திற்கு அடியில் புதைத்துள்ள பைப் லைனுக்கு track rent தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பயிர் வாரியான தண்ணீர்த் தீர்வையை எடுத்துவிட்டு ஏக்கர் வாரியான தண்ணீர்த் தீர்வை விதித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. 2½ ஏக்கர் வரை வைத்துள்ள விவசாயிகள், சிறு விவசாயிகளுக்கு இப்போது நல வாரியம் அமைத்திருக்கிறார்களே, இதெல்லாம் விவசாயிகள் பாராட்ட வேண்டிய காரியங்கள் இல்லையா? ஆக இந்தச் சூழ்நிலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வருகிற ஆண்டும் முழு நிதிநிலை அறிக்கையையும் 5-வது முறையாக நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவா கலைஞர் அவர்கள்தான் முதலமைச்சராக வந்து தாக்கல் செய்வார்கள் என்ற உறுதியோடு என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒருசில கோரிக்கைகளை மட்டும் நான் இந்த நேரத்திலே வைத்து மேற்கொண்டு பேசவிருக்கிறேன்.

வேலூர்-மோகனூர் சாலை மிக மோசமாக இருக்கிறது. அதைத் தேர்தலுக்கு முன்பாக சரிசெய்து கொடுக்க வேண்டும் என்றும், பாலப்பட்டி-வள்ளிபுரம் சாலையையும் வரும் ஆண்டிலே போட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ராஜவாய்க்கால், குமாரபாளையம் வாய்க்கால், மோகனூர் வாய்க்கால் சீர்செய்யப்பட வேண்டும். பக்கவாட்டிலும் அடியிலும் சிமெண்ட் ஸ்லாப்ஸ் போட்டு remodel செய்து கொடுக்க வேண்டுமாய்த் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளேன். 2001-2002 ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாக்கல் செய்யும்போது இதற்கு நிதியொதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு இங்கே இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேள்வி நேரத்திலே கேட்டபோது அங்கே மோகனூரிலே இருக்கிற எரிசாராயத் தொழிற்சாலையைப் பயன்படுத்தி அங்கே ஒரு IMFL தயாரிக்கும் பாட்லிங் யூனிட் தொழிற்சாலை வேண்டும் என்று கேட்டேன். அதற்கு எரிசாராயத் தொழிற்சாலை தொடர்ந்து இலாபத்திலே இயங்கி வரும்போது பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். தொடர்ந்து இப்போது இலாபத்திலே இயங்கி வருகிறது. ஆகவே அந்தக் கூட்டுறவு நிறுவனத்தின் மூமாக IMFL தயாரிக்கும் பாட்லிங் யூனிட் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீயணைப்பு நிலையம். பரமத்தி அல்லது வேலூரிலே ஒன்று வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அதேபோன்று மோகனூர் நல்லூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடங்கள் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்.

அரசாங்கத்தால் மக்களுடைய அடிப்படைத் தேவைகளாக உள்ள குடிநீர் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, பள்ளிக்கூட வசதி, அதேபோல நியாயவிலைக் கடைகள் அருகாமையிலே அமைத்துக் கொடுக்கின்ற அந்த பணிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-10

தாழ்த்தப்பட்டவர்களுக்கு இதுவரை 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் இலவசமாக இந்த அரசிலே கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, 9 இலட்சம் பட்டாக்கள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பேருந்துகள், கிட்டத்தட்ட 9,923 புதிய பேருந்துகள் இப்போது வாங்கப்பட்டிருக்கின்றன. 3,030 மினி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. பேருந்தே பார்க்காத பல கிராமங்களுக்குப் பேருந்துகள் போய்



வருகின்றன. கல்வித் துறைக்கு 4,949 கோடி ரூபாய் என்பது 5,472 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆரம்பப் பள்ளிகள் இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அனைத்துக் கிராமங்களிலேயும் ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோல நியாயவிலைக் கடைகள், பகுதிநேர நியாயவிலைக் கடைகள், முழுநேர நியாயவிலைக் கடைகள் 5,291 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசு விலையைவிட மண்ணெண்ணெய் 1-1-2001-லேயிலிருந்து 60 காசு குறைத்து விற்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 3 இலட்சம் வீடுகள். அத்தோடு 3 இலட்சம் பட்டாக்கள். அதேபோல தேவையான இடங்களிலே சோடிய ஆவி விளக்குகள், தேவையான அளவிற்குச் சாக்கடைத் திட்டங்கள். ஆக இத்தனை அடிப்படை வசதிகள் மட்டுமல்லாமல் சிறப்புத் திட்டங்களாக, நம்முடைய தமிழ்நாட்டிலே மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கால்நடைப் பாதுகாப்பு முகாம்கள், உழவர் சந்தைத் திட்டம், வாழ்வொளித் திட்டம், மகளிர் சிறுவணிகக் கடன் வழங்கும் திட்டம், பூமாலைத் திட்டம், வணிகச் சின்னம் அளிக்கின்ற திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்று பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அதேபோல கம்ப்யூட்டர் கல்வி. பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்பிலே கம்ப்யூட்டர் கல்வி, 60 அரசு கல்லூரிகளிலே கணினி பயிற்சி மையங்கள். அதேபோல வணிகர்களுக்கு நல வாரியம். அத்தோடு வணிகர்களுக்கு மட்டுமல்லாமல், மூடிக்கிடக்கின்ற தொழிற்சாலைகளிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குவதோடு அல்லாமல், அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்களுக்கு, கட்டடத் தொழிலாளர்களுக்கு, மரம் ஏறுபவர்களுக்கு, நெசவுத் தொழிலாளர்களுக்கு, தையல் தொழிலாளர்களுக்கு என்று பலதரப்பட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும் இப்போது நல வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அகில இந்திய அளவிலே பொருளாதாரத்திலே முன்னேறிய மூன்று மாநிலங்களிலே தமிழகமும் ஒன்று என்பது மிகப் பெருமைக்குரிய ஒன்றாகும். நேற்றைக்கு ஏற்றுமதி மையத்தைத் திறந்துவைத்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1994-95-லே 12,454 கோடி ரூபாயாக இருந்த ஏற்றுமதி 1999-2000-லே 23,600 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்று வர்த்தக மையத்தைத் திறந்துவைத்து அந்தத் திறப்பு விழாவிலே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆக இப்படி அடிப்படைத் தேவைகளுக்கு மட்டுமல்லாமல், சிறப்புத் திட்டங்களான இத்தனைத் திட்டங்களும் இந்த நாட்டிலே, இந்த 5 ஆண்டுகால தலைவருடைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே நடைபெற்றிருக்கின்றபோது, அவர்கள்தான் மீண்டும், ஐந்தாவது முறையாக நிச்சயமாக இந்தத் தமிழகத்தின் முதல்வராக வருவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. ஆகவே அவர்கள் இந்த நாட்டிலே நீண்டகாலம், நல்ல ஆயுளோடு வாழ்ந்து—அவர்கள் நிச்சயமாக வாழ்வார்கள். அதேபோல ஐந்தாவது முறையாக முதலமைச்சராக வரவேண்டும்; வருவார்கள் என்று சொல்லி, எனது வாழ்த்துக்களையும் வணக்கத்தினையும் சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டினுடைய இடைக்கால நிதிநிலை அறிக்கை ஜனவரித் திங்கள் 29 ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த வரவு-செலவுத் திட்டத்தை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களை இந்த மாமன்றத்திலே எடுத்துவைக்க விரும்புகிறேன்.

"போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரி
தூற்றுவார் தூற்றட்டும்"

என்ற எண்ணம், செயல்பாடுகளைப் புறம்தள்ளி, எதிர்க்கட்சிக்காரர்களின் கருத்துக்கு மதிப்பு அளித்து, வாய்ப்பு அளித்து அதிக நேரத்தை ஒதுக்கிடு செய்து கொடுத்து, கடந்த 5 ஆண்டுகாலம் சிறப்பாக இம்மாமன்றத்தை நடத்திச் சென்ற மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் முதலிலே எனது நன்றியை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.



மத நல்லிணக்கத்திற்கு ஒருபக்கம் விருதுகள் வழங்குவதும், மற்றொருபுறம் மதச்சார்பு அமைப்புக்களுடன் கைகோர்த்து வன்முறைகளைக் கட்டுப்படுத்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதல்வர் எடுத்துச்சொல்லி இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையின்மீது குறை சொல்லியிருக்கிறார்கள். அவர்களது ஆட்சியிலே மீலாது விழா ஊர்வலம் நடத்த முடிந்ததா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். விநாயகர் சிலை ஊர்வலங்கள் நடத்த முடிந்ததா? இப்பொழுது தமிழகத்திலே சமத்துவ சமுதாய சகோதரத்துவம் பேணி தமிழகத்திலே இந்து, முஸ்லீம், கிறித்தவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றார்கள். தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்து வருகின்றது. மதவாதம் என்கிற மதம் பிடித்த யானையை மனிதநேயம் என்ற சங்கிலியால் கட்டிப்போட்டு வைக்கின்ற சக்திபடைத்த மாபெரும் தலைவர்தான் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். தேர்தலுக்காக கடந்த காலங்களிலே முழுக்க முழுக்க மதவாதிகளாக இருந்தவர்களை இன்று ஒன்று சேர்த்துக்கொண்டு மனிதநேய சங்கிலி நடத்துகின்றனர். மாநாடு நடத்தி மக்களைத் திசைதிருப்ப முயற்சிக்கின்றார்கள். இது யாரை ஏமாற்றும் வேலை? மக்கள் விழிப்புடன் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கடந்த கால நிலைமைகளை மறந்துவிட மாட்டார்கள். மாயை எடுபடாது என்பதை இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-15*

முதல்வர் கலைஞர் அவர்கள் மத்தியிலே பாரதிய ஜனதாவுடன் கூட்டு சேர்ந்துவிட்ட காரணத்தால் இஸ்லாமிய மக்கள் உங்களுக்கு வோட்டுப் போட மாட்டார்கள். கலைஞர் முஸ்லீம்களின் எதிரி என்றெல்லாம் கூறி திசைதிருப்புகின்ற தில்லுமுல்லுகள் நடந்தேறாது. கடந்த காலத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலே, நிரூபித்திருக்கிறார்கள். எனது தொகுதியிலே மட்டும் 5000 வாக்குகளை அதிகமாகப் பெற்றுக்கொடுத்திருக்கின்றேன். கலைஞர் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியே மதச் சார்பற்ற அணி, கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கும் கூட்டணியே எல்லாக் கட்சிகளும் மதச் சார்பற்றவை என்பதை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு சொல்லும், செயலும் சிறுபான்மை மக்களுக்கு அரணாக, கேடயமாக அமைந்து வருகிறது. தேசிய செயல் திட்டத்தில் சேர்க்கப்படாத எந்தச்

செயல் திட்டமும், குறிப்பாக சிறுபான்மையினருக்கு எதிரான எதுவும் தேசிய ஜனநாயக அணிக்குப் புறம்பானது; அதனைத் தி.மு.கழக அரசு முழுமையாக எதிர்க்கும்; முதல்வர் கலைஞர் அவர்கள் அதை எதிர்ப்பார்கள்; தமிழகத்தினுடைய சிறுபான்மை முஸ்லீம்களுக்கு ஆபத்து நேரிட்டால் பாதுகாவலனாக, அரணாக இருந்து குரல் கொடுக்கும் ஒரு ஒப்பற்ற தலைவர், முதல்வர் கலைஞர் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசிய ஜனநாயக அணிக்கு தமிழ்நாட்டிலே டாக்டர் கலைஞர் அவர்கள்தான் முதல்வர், தலைவர் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். சமுதாய ஒற்றுமை, மத நல்லிணக்கம், இங்கே பேணிகாக்கப்பட்டு வருகின்றது. முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இஸ்லாமிய சிறுபான்மை மக்களுக்காகச் செய்யப்பட்ட சில நன்மைகளை இங்கே நினைவுபடுத்தி நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சிறுபான்மையினர் நல ஆணையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மத்தியிலே பாரதிய ஜனதா ஆட்சியோடு கூட்டு இருக்கின்ற காரணத்தினால், வக்ப் வாரியத்தினுடைய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாக புனித ஹஜ்-க்குச் செல்கின்றவர்களுக்கு, 1,800 பேர்களுக்கு மேல் அனுமதி கொடுக்க முடியாமல், குர்ரா என்ற குலுக்கல் திட்டம் இருந்து வந்தது. அந்தக் குலுக்கல் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியிலே அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற வக்ப் வாரிய அமைச்சரவர்கள் எடுத்துச் சொல்லி இப்பொழுது, கடந்த மூன்றாண்டுகளாக, 3000-க்கும் மேற்பட்டவர்கள் ஹஜ்-க்குச் செல்லக்கூடிய வழிவகை செய்து கொடுத்தது மத்திய அரசு என்பதை இங்கே எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதேபோன்று, இந்த ஆண்டு 3,150 பேர்களை அனுப்ப மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இப்தார் நிகழ்ச்சியிலே அறிவிப்பு செய்தார்கள். உருது அகாடமியைத் திறப்பேன் என்று கூறினார்கள். சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற சொல்லுக்குச் சொந்தக்காரராக, சிறுபான்மை மக்களுக்கு உருது அகாடமியைத் திறந்து கொடுத்திருக்கின்றார்கள்.



அதேபோன்று, கோவையிலே இறந்துவிட்ட அமீர் அவர்களுடைய பெயரால் விருது வழங்குகின்ற ஒரு திட்டத்தை அறிவிப்பு செய்து, தஞ்சையைச் சார்ந்த சுல்தான் அவர்களுக்கு விருது வழங்கப்பட்டு, அவரது குடும்பத்தினருக்கு மாத ஓய்வூதியமும், அரசுப் பணியும் வழங்கப்பட்டிருக்கின்றது. இது கலைஞருடைய சாதனை.

அதேபோன்று கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு மணி மண்டபம் விரைவிலே கட்டப்படும் என்று அறிவிப்பு செய்து இருக்கின்றார்கள்.

உலமாக்களுடைய பென்ஷன் 400 ரூபாயாக இருந்ததை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோன்று வக்ப் போர்டினுடைய அலுவலகத்திற்கு இதுவரை சொந்தக் கட்டடம் இல்லாமல் இருந்தது. ஆனால் இன்றையதினம் வக்ப் போர்டுக்காக ஹார்பருக்கு அருகிலே பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள, மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு இடத்தை ஆர்ஜிதம் செய்து வக்ப் போர்டு கட்டடம் கட்டுவதற்கு இடம் ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து கொஞ்சம் நேரம் கொடுங்கள். பேசி விடுகிறேன். முக்கியம். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை. சொல்லியாக வேண்டும்.

மதுரை வக்ப் போர்டினுடைய கல்லூரிக்காக காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ரூபாய் 4.5 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கின்றார்கள்.

அதேபோன்று வக்ப் வாரியத்திற்கு மானியமாக 35 இலட்சம் ரூபாய் கொடுத்துக்கொண்டு இருந்ததை, சிறுபான்மை மக்களுடைய நலன் கருதி ரூபாய் 45 இலட்சமாக வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோன்றுதான் இட ஒதுக்கீடு பிரச்சினையிலே கோரிக்கை வைத்திருக்கின்றோம். விரைவிலே அதை நாங்கள் செய்து கொடுப்போம் என்று வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள். நம்பி இருக்கின்றோம். நிச்சயமாகச் செய்து கொடுக்கக்கூடிய ஆற்றல் படைத்த தலைவரைத்தான் முதல்வராகப் பெற்றிருக்கின்றோம். மீண்டும் 5-வது முறையாக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அமர இருக்கிறார்கள்; சிறுபான்மை சமுதாய மக்கள், நாங்கள் அவருக்கு வாக்களிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-20*

வசைபாடி, குறை கூறி வருகின்றவர்களும், குறை கூறுபவர்கள் கொள்ளையடிக்க வழியில்லாமல், Real Estate தொழில் செய்து வருகின்றவர்களும், Finance நடத்தி வருகின்றவர்களும், மோசடியில் ஈடுபட்டு வருகின்றவர்களும், அவர்களுக்கு கொள்ளையடிப்பதற்கு வழியில்லாத காரணத்தால் இந்தக் காலகட்டத்திலே பண நெருக்கடி ஏற்பட்டு பணப் புழக்கம் இல்லை என்று மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே லஞ்ச லாவண்ய ஆட்சி, அராஜக ஆட்சி, ஊழல் நிறைந்த ஆட்சி, அல்லிதர்பார் ராணியினுடைய ஆட்சியை, இந்த நாட்டை விட்டு, இந்தக் கோட்டையை விட்டு விரட்டுவதற்காகத்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சென்றமுறை கூட்டமைத்து, சாதாரண மக்கள், விவசாய மக்கள், வியாபாரிகள், படித்தவர்கள், பாமர மக்கள், அனைத்துச் சமுதாய மக்களும் பாராட்டும் வண்ணம் கடந்த 5 ஆண்டுகளாக சிறப்பாக ஆட்சியை நடத்திகொண்டிருக்கிறார்கள். ஆகவே ஏழை எளிய மக்களும் வியாபாரிகளும், அத்தனை பேரும் பாராட்டுகின்ற நிலையில் ஆட்சி நடைபெறுகின்றது.

நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு முதல்வரவர்கள் 28 தலைப்புகளிலே 10 திட்டங்களை அறிவிப்பு செய்து, அனைத்து மக்களும் பாராட்டுகின்ற வண்ணம் இன்றையதினம் வரி விதிப்பே இல்லாமல், புதிய வரிகளை விதிக்காமல், இருக்கின்ற வரியை, வியாபாரிகளுக்குப் போடப்பட்ட வரியை எல்லாம் குறைத்து, திறமையான ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால் பாராட்டாமல் இருக்க முடியுமா?

அதேபோல, விவசாயிகளுக்கு 14 மணி நேர மின்சாரம் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியதோடு மட்டுமல்லாமல், கொடுத்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

ஏரிகள், கண்மாய்கள் தூர்வாரிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 20 ஆண்டுகளாகத் தூர்வாரப்படாத கண்மாய்கள் தூர்வாரிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தமிழகம் தொழில் துறையில் முதலிடம் பெற்றிருக்கிறது. இன்றுகூட, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை இங்கே அழைத்துவந்து துறைமுகத்தை திறந்து கொடுத்திருக்கிறார்கள். எனவே தமிழகத்தினுடைய பெருந்தலைவர், பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு இன்று



நனவாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடம். ஆகவே எந்த ஆட்சியிலும் செய்ய முடியாத, சிறப்பான திட்டங்களை அறிவிப்பு செய்து இங்கே சாதனை படைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், உழவர் சந்தை, வருமுன் காப்போம் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம், ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமத் தெருக்களில் கான்கிரீட் போட்டு மாற்றித் தரும் திட்டம், பள்ளிகளில் கணினிமயம் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம், நல வாரியங்கள், மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் இவற்றையெல்லாம் செய்து கொடுத்திருக்கக்கூடிய முதல்வரவர்களைப் பாராட்டுகின்றோம். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், முதல்வரவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதலில் தொகுதியில் செய்த சாதனைகளுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புள்ளி மாறாத கோலமாக விளங்கும் முதல்வர் அவர்கள் ஆட்சியில் ஆற்காடு நகரத்திலே ஓர் எழில்மிகு கண் மருத்துவமனையும், ஆற்காடு கிராம வங்கியாக இருந்ததை நகர வங்கியாக உயர்த்துவதற்கு வழிவகை செய்தும், நகர மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, நகரத்தைச் சுற்றியுள்ள கால்வாய்களில் 40 இலட்சம் ரூபாய் செலவில் சுகாதாரச் சீர்கேட்டை அகற்றுகின்ற வகையில் தூர்வாரியும், கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தும், நகராட்சி மூலம் சிமெண்ட் சாலைகள் போட்டும், கலவை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றியும், விளையாத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்தும், மாம்பாக்கத்தில் துணை மின் நிலையத்தை அமைத்தும், வண்டிக்கல்லில் நீண்டநாள் கோரிக்கையான ரெட்டித்திப்பு தேவநாத அணையைக் கட்டுவதற்கு அனுமதித்தும், தொகுதியில் சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள் போட்டும், இப்படி பலப் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மழை பொய்த்ததால் பாலாற்றில் தண்ணீர் கடந்த இரண்டு வருடங்களாக வராததால், கிணற்றை நம்பித்தான் விவசாயிகள் பயிர் செய்ய வேண்டியுள்ளதால், தடையில்லா மின்சாரமும், அழுத்தக்குறைவில்லா மின்சாரமும் கிடைக்க ஆற்காடு நகரத்தில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமாய் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பாலாற்றில் தொடர்ந்து தண்ணீர் வருவதற்கு, கர்நாடக அரசோடு பேசி, பாலாற்றில் தண்ணீர் வர உதவிடுமாறு கோருகிறேன்.

ஆற்காடு தொகுதியில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவர்கள் குறைவாக இருப்பதால், கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

மனிதநேயத்தை உணர்ந்து செயல்படும் கலைஞர் அவர்கள், இந்தியத் திருநாட்டில் மக்கள் அல்லல்படும்போது உடனடி நிவாரணம் பெற நிதி உதவி செய்தார்கள். சீனப் படையெடுப்பின்போது நிதி உதவி, 1971-ல் இந்திய-பாகிஸ்தான் போரில் அன்றைக்கு 6 கோடி நிதி உதவி, கார்கில் போர் நிதி 50 கோடி, ஒரிஸ்ஸா புயல் நிவாரண நிதி, இப்போது குஜராத் நில நடுக்க நிதி 5 கோடி என்று அளித்து தமிழகத்தின் பெருமையை உயர்த்துபவர்தான் கலைஞர் அவர்கள். அண்ணா வழியில் அயராது உழைக்கும் கலைஞர் அவர்கள், பகுத்தறிவுத் தந்தை, தந்தை பெரியார் பெயரில் சமத்துவபுரங்கள்; விவசாயிகள் விளைபொருட்களை தரகு இல்லாமல் விற்க உழவர் சந்தைகள்; மக்களுக்காக, கிராமங்களிலே மருத்துவர்கள் சென்று, 'வருமுன் காப்போம்' என்ற பெயரில் மருத்துவ வசதி; கால்நடைகளுக்கு அந்தந்த ஊர்களில் மருத்துவ வசதி; காந்தி கண்ட கனவு ராம ராஜ்யம், அந்த ராம ராஜ்யமாக உயர்த்த வேண்டுமென்று சொல்லி அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள்; இப்படி கணக்கிலடங்கா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு கடந்த 4¾ ஆண்டில் சாதனை படைத்ததுதான் கலைஞர் அரசு.

ஜனநாயகத்தை மதிக்கும் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சிகள் சட்டமன்றத்தில் பேசும் வாய்ப்பை ஏற்படுத்தி, அவர்கள் சொல்கின்ற கருத்தை ஏற்று, உடனடியாக தீர்த்து வைப்பவர்தான் இன்றைய முதல்வர். புள்ளி மாறிய கோலங்களாக வழங்கிய கடந்தகால ஆட்சியில் எதிர்க்கட்சிகளின் குரல்வளையை நெறித்து, பேசுகின்ற கருத்துக்களுக்கு



மதிப்பளிக்காமல் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை ஏற்காது சபையை விட்டு வெளியேற்றி சட்டமன்றத்தில் பேசும் உரிமையைப் பறித்தவர்கள்தான் முந்தைய ஆட்சியாளர்கள். அன்று சட்டமன்ற உறுப்பினராக இருந்த இன்றைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் மற்றவர்களும் பட்ட அவலங்களும், அல்லல்களும் நாட்டு மக்களுக்குத் தெரியும்.

கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி பொங்கல் திருநாளின்போது சுமார் 110 கோடி ரூபாய் மதிப்புள்ள தரமான நீளம், அகலம் குறையாத சுமார் 155 இலட்சம் இலவச வேஷ்டி சேலைகளைத் தயாரித்து, நெசவாளர்களுக்கு வேலை கொடுத்து, நெசவாளர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 70 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளை ஏற்றுமதி செய்தது பாராட்டுக்குரியது. மேலும் கைத்தறி நெசவாளர்களின் நலன் கருதி கிழக்காசிய நாடுகளில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இன்று பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, அந்த நாட்டு மக்கள் கைத்தறித் துணிகளை வாங்கும் சக்தி உயர்ந்துள்ளது. ஆகவே அந்த நாடுகளில் கைத்தறித் துணி ஸ்டால்களை அமைத்து ஏற்றுமதி வர்த்தகத்தை அதிகப்படுத்தலாம்.

ஏற்றுமதி செய்யும் துணிகளில் கைத்தறிக்கு முதலிடம் கொடுக்கின்ற வகையில் விசைத் தறியில் தயாராகும் கைத்தறித் துணி என்று I.S.I. முத்திரை குத்தி ஏற்றுமதி செய்கிறார்கள். அதை அதிகாரிகள் மூலம் தடுத்து நிறுத்தி முறையாக ஏற்றுமதி செய்ய பணிவுடன் வேண்டுகிறேன். மேலும் சிட்டா நூலுக்கு ஆந்திர மாநிலத்தில் விற்பனை வரி இல்லை. கர்நாடகத்தில் 1 சதவிகித வரி இருக்கிறது. ஆகவே நெசவாளர்களின் நலன் கருதி சிட்டா நூலுக்கு விதிக்கப்படும் வரியை இரத்து செய்து கைத்தறி நெசவாளர்களுக்கு உதவிட வேண்டுகிறேன்.

தமிழ் வளர்த்த சான்றோர்களை பெருமைப்படுத்துகின்ற வகையில், அய்யன் திருவள்ளுவருக்கு சிலை, அம்பேத்கர் மணி மண்டபம், ஜீவா மணி மண்டபம், அமரர் ஜீவா, தியாகி விஸ்வநாத தாஸ், மாவீரன் பூலித்தேவேன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பெருந்தலைவர் காமராஜர் (மணியடிக்கப்பெற்றது) ஆகியோருக்கு மணி மண்டபங்கள் அமைத்தது கலைஞர் அரசு. இந்த நிதிநிலை அறிக்கையில் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு மணி மண்டபம் அமைக்க இருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் சுய மரியாதைச்

சுடர் சர். பி.டி. தியாகராயர் அவர்களுக்கு ஒரு நினைவு இல்லம் கட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, ஐந்தாவது முறையும் கலைஞர் அவர்கள்தான் முதல்வராக வருவார் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. புரட்சிமணி.

***திரு. ச. புரட்சிமணி:** சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தங்களுக்கும் எங்களுடைய தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் கரும்பு விவசாயிகள் மிக அதிகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று இங்கு பல சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே இதைக் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், கடலூர் மாவட்டத்தில், ரேஷன் கடைப் பொருள்கள், கிட்டத்தட்ட 80 சதவிகிதப் பொருள்கள்தான் அந்த மக்களுக்குக் கிடைக்கின்றன.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ச. புரட்சிமணி:** மீதம் 20% கிடைக்கப்பெறவில்லை. அதற்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்கிறபோது, அதற்கு சரியான பதில்களைத் தெரிவிக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சரவர்கள் இங்கே விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று Land Development Bank-ல், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் டயர் வண்டிகளுக்குக் கடன் தருகிறார்கள். கடன் தருகிறபோது அதற்கு இரண்டு ஏக்கர் surety வேண்டுமென்கிறார்கள். அதாவது டயர் வண்டிக்குக் கடன் வாங்கும்போது 2 ஏக்கர் surety வேண்டுமென்றால், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. அதைக் குறைத்து, அதாவது அந்த வண்டியினுடைய மதிப்பீட்டுத் தொகை என்ன ஆகிறதோ அதில் இரண்டு மடங்கு இருந்தால் போதும் என்பதை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று



இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று பகுதிநேரக் கடைகள். என் தொகுதியில் பல கிராமங்கள் சாதிக் கலவரம் மிக அதிகமாக இருக்கிற கிராமங்கள். அங்கே பகுதிநேரக் கடைகளை அமைக்கவேண்டுமென்று நான் அமைச்சரை பலமுறை கேட்டிருந்தேன். அதற்குக் கடிதம்கூட கொடுத்திருந்தேன். ஆனால் இதுவரை அமைக்கப்படவில்லை. இந்த ஆண்டாவது அதை அமைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் என் தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிற தொகுதி. அந்தத் தொகுதியில் ஏதேனும் ஒரு தொழிற்சாலையை இந்த அரசு ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், உயர்நிலை கூட்டுறவு பட்டயப் பயிற்சியை (HDCM) கிட்டத்தட்ட இருநூறு பேர் முடித்துள்ளார்கள். அவர்களுக்கு இதுவரை அந்தப் பணி கிடைக்கப்பெறவில்லை. அதைப்பற்றி கடந்த முறையே சட்டமன்றத்தில் பேசினோம். ஆனால் இதுவரை அந்தப் பணியும் கொடுக்கப்படவில்லை. அதை விரைவில் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஆதிதிராவிடர்களுக்கான அரசாணை எண் 44 மற்றும் 33 பற்றி அரசினுடைய நிலை என்ன? அரசு என்ன அறிவிக்கப் போகிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சம்பந்தமாக ஏற்கெனவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் கொடுத்து, அதற்கான கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதுதான். அடுத்த Subject-க்குப் போங்கள்.

**திரு. ச. புரட்சிமணி:** அதைப் பொறுத்தவரை சரியான முடிவு எடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய ஒரே கருத்து. அதைப்பற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறீர்கள், இதில் என்ன செய்யப்போகிறீர்கள், அதை இப்போதே தெரிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அரசாணை எண் 44 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிக முக்கியமாகப் பயன்படக்கூடிய ஓர் அரசாணை, அதை நீக்கிவிட்டு நீங்கள் அரசாணை எண் 33 என்று போட்டிருப்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்கின்ற ஒரு பெரிய துரோகம் ஆகும். எனவே அந்த அரசாணை 44-ஐயே நீங்கள் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணை 44 தான் வேண்டுமென்றால் எழுதிக் கொடுங்கள் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இதே அவையில் கூறியிருக்கிறார்கள். ஆகவே அரசாணை 44 மூலமாக அதிகமான இட ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பில்லை என்பதால் அரசாணை 33 வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக 11 ஆயிரம் பின்னடைவுப் பணியிடங்களை ஐந்தாண்டுகளில் நிரப்புவதாக வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது. 2,200 இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. மீதி இடங்களை இந்த அரசாணை மூலம் விரைவில் நிரப்புவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

**திரு. ச. புரட்சிமணி:** இதைப் பொறுத்தவரைக்கும் நாங்கள் எழுதிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. Government என்ன செய்யப் போகிறது? அதை மாற்றம் செய்யப் போகிறீர்களா, இல்லை அரசாணை 33-ஐயே அமல்படுத்தப் போகிறீர்களா என்பதை மட்டும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதற்கு எழுதிக் கொடுக்க வேண்டும்? இதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறீர்கள். இந்தக் குழு பல முறை கூடி பல முடிவுகளை எடுத்திருக்கிறது. இதுவரை எந்த முடிவுகளும் சரியாக அமல்படுத்தப்படவில்லை. Postings போடவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் கண்டிப்பாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தீவலூர் என்ற கிராமம் உள்ளது. அந்த தீவலூர் கிராமத்தில் ஓர் ஆதிதிராவிடர் நலப் பள்ளி உள்ளது. அந்தப் பள்ளிக்குப் போதுமான இடவசதி இல்லை. அந்தப் பள்ளிக்குத் தேவையான இடவசதியை இந்த அரசு உண்டாக்கித் தர வேண்டுமாய் இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-3.5

விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் (மணியடிக்கப்பெற்றது) காட்டுநாயக்கன் சமூகத்தவர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு அடையாள அட்டை இதுவரை கொடுக்கப்படவில்லை. அதையும் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





பெரம்பலூர் என்ற கிராமம் உள்ளது. அதில் அரசு உதவிபெறும் ஒரு நடுநிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி கிட்டத்தட்ட 7 மாதமாக, பூட்டுப்போட்ட நிலையிலே இருக்கிறது. நான் இதைப்பற்றி அமைச்சரிடம் தெரிவித்தேன். அதற்குத் தனி முக்கியத்துவம் கொடுத்து அங்கே ஓர் அரசுப் பள்ளியை அவர்கள் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கருவேப்பிலங்குறிச்சி என்ற கிராமத்திலிருந்து ஜெயங்கொண்டம் வரை உள்ள சாலை மிகவும் பள்ளமும் மேடுமாக உள்ளது. அந்தச் சாலையைச் சீர்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கீழ்க்கல்பூண்டி-சிறுபாக்கம் மற்றும் திட்டக்குடி-தொழுதூர் ஆகிய சாலைகள் இன்று மிகவும் மோசமாக உள்ளன. இந்தச் சாலைகளையும் சரிசெய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனது மங்களூர் தொகுதியில், மங்களூர் பகுதியில் ஒரு தொழிற்சாலை அமைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 4 பேர் பேசவேண்டியிருக்கிறது. திருமதி கோமதி சீனிவாசன்.

***திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பை நல்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். போற்றுவோர் போற்றட்டும், புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும், என் கடன் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பணி செய்வதே என்ற குறிக்கோளோடு, தந்தை பெரியார் சமுதாய கண்ணோட்டத்தோடும், அண்ணா வகுத்து அளித்த [illegible]மை, கண்ணியம், கட்டுப்பாட்டோடும், மாற்றுக் கட்சிக்காரர்கள் கருத்துக்கு மதிப்பு அளித்து தன்னடக்கத்தோடும், மத நல்லிணக்கத்தோடும், மனித நேயத்தோடும், மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாகவும் செயலாற்றி வருகின்ற ஒரே முதல்வர், அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர்தான் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்ற தமிழ் மாநில காங்கிரசைச் சார்ந்தவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நாங்கள்

பதவிக்காக கூட்டணியைவிட்டுச் செல்லவில்லை, பி.ஜே.பி. உடன் கூட்டு வைத்ததால்தான் சென்றோம் என்று கூறினார்கள். மதவாதத்தையும், ஊழலையும் எதிர்க்கும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று நீங்கள்தான் சொன்னீர்கள். ஆனால் ஊழல்வாதிகள் என்று குற்றம்சாட்டப்பட்ட அம்மாவுடன் கூட்டு வைக்க முற்படுவது எதற்காக என்பதை இந்த மாமன்றத்தில் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்பு ஆட்சி செய்தவர்கள் அரசியல் சட்டத்திற்கு முரணாக எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற நிலையில், மக்களுடைய வரிப் பணத்தைச் சுரண்டி கோடி கோடியாகச் சம்பாதித்த நிலை மாறி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் நியாயமான ஊழலற்ற ஒரு நல்லாட்சியை டாக்டர் கலைஞர் அவர்கள் நடத்தியதால்தான் தமிழகத்தில் தனி நபர் வருமானம் உயர்ந்துள்ளது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளான இருக்க இடம், உடுக்க உடை, குடிக்க தண்ணீர், இருள் நீக்க ஒளி, நலமாக வாழ சுகாதாரம் போன்றவற்றை, ஜாதி மத, இன வேறுபாடின்றி அனைத்து மக்களும் பெற்று பயன்பெறுகின்ற வகையில் செயல்படுகின்ற இந்த அரசை நாட்டு மக்கள் பாராட்டுகின்றார்கள். நாமும் பாராட்டுகின்றோம். மேலும் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அபராத வட்டியினை மூன்று சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாகக் குறைத்திருப்பதும் இந்த அரசுதான். நமது அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரமும், அதிக நிதியும் ஒதுக்கீடு செய்த காரணத்தால், நகர்ப்புறங்களைப் போல கிராம மக்களும் அனைத்து வசதிகளையும் பெற்றுத் தன்னிறைவு பெற்றுள்ளது இந்த ஆட்சியில்தான் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கால்நடைப் பாதுகாப்புத் திட்டம், கணினி பாடத் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்திக் கொடுத்த முதல்வர் டாக்டர் கலைஞர்தான் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருமுன் காப்போம்



திட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது, கிராமங்களில் வாழுகின்ற ஏழை எளிய பாட்டாளி மற்றும் விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் இந்தத் திட்டத்தின் மூலமாக பயன் பெறுகிறார்கள் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அதேபோல் விவசாயப் பெருங்குடி மக்களின் நிலையை எண்ணிப்பார்த்த இந்த அரசு, அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அரசு, மழை வெள்ளங்களால் பாதிக்கப்பட்டு, வாய்க்கால் இன்றி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அழிந்து கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டு, ஆறு, கால்வாய், ஏரி, குளம், குட்டைகள் போன்றவற்றில் உள்ள செடி கொடிகளை அகற்றி, தூர்வாரி விவசாயிகளின் உற்ற தோழனாக இருப்பவரும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்தான் என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-40

விவசாயிகளுக்குத் தடையின்றி மின்சாரம் தருகின்ற இந்த அரசுதான் ஒரே நாளில் மின் இணைப்பு என்ற சிறப்புத் திட்டத்தையும் தந்துள்ளது.

கிராமப்புற இளைஞர்களுக்கு எல்லாம் விளையாட்டு மையங்களை அமைத்து, அந்த மையங்களின் மூலமாக சாதி, மத, இன வேறுபாடு இல்லாமல், ஒரே இடத்தில் விளையாடி, உடற்பயிற்சி பெறும் வகையில் பொழுதுபோக்கு மையங்களை ஏற்படுத்திக் கொடுத்தவரும் அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

தமிழ் வளர்த்த சான்றோர்களுக்கும், நாட்டிற்கு உழைத்த நல்லவர்களுக்கும், தியாகச் செம்மல்களுக்கும், மொழிப்போர் தியாகிகளுக்கும் மணிமண்டபம் அமைத்துக் கொடுத்தவரும் அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர்தான் என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இளம்பிள்ளைவாத நோயை முற்றிலும் அகற்றுவதற்காக போலியோ சொட்டு மருந்தோடு, பள்ளிச் சிறார்களுக்கு நோயைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க வாழ்வொளித் திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக மகளிருக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கி, சமூகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு

சுயநிதி உதவிக் குழுக்கள் அமைத்து பெண்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ளவரும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்தான் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து 1995-96 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதி 194 கோடி ரூபாய்; ஆனால் நடப்பாண்டில் 626 கோடி ரூபாயாக அதை உயர்த்தி இருப்பதிலிருந்து இந்த அரசும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் எந்த அளவுக்கு ஆதிதிராவிட மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது நமக்கு நன்றாகப் புரிகிறது. அதேபோன்று ஆதிதிராவிட பெண்கள் கல்வியை ஊக்குவிக்கும்பொருட்டு 5 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு 500 ரூபாய் ஊக்கத் தொகையும், 6 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு 1000 ரூபாய் ஊக்கத் தொகையும் அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்த ஒரே முதல்வர் டாக்டர் கலைஞர்தான் என்பதை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தன்னைத் திட்டங்களையும் தீட்டி, செயல்படுத்தி நாட்டை பொற்கால ஆட்சியாக திகழ வைத்துக்கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் விருப்பம் என்று தெரிவித்து மீண்டும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து இந்த அவையிலே நிதிநிலை அறிக்கையை அளிப்பார் என்று சொல்லிக்கொண்டு, நமது அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்க என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரு. இ.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, முதலிலே இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட



கொக்கராயன்பேட்டை, லக்காபுரம் ஆகிய இரு நகரங்களுக்கும் இடையே காவிரியின்மீது உயர்மட்டப் பாலம் அமைத்துக் கொடுக்க ஆணை பிறப்பித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும் என் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர் வரிசையிலே இருக்கும் நம்முடைய முன்னாள் தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், என்னுடைய திருச்செங்கோடு தொகுதி 1991-லிருந்து 1996 வரை. முன்பு அமைச்சராக இருந்த நண்பர் திரு. செல்வகணபதி அவர்களுடைய தொகுதிதான். அவர் அந்த 5 ஆண்டுகளில் அந்தத் தொகுதிக்கு செலவு செய்த தொகை 19 கோடியே 93 இலட்சம் ரூபாய். ஆனால் இன்றைக்கு கலைஞர் தலைமையில் நடைபெறும் இந்த ஆட்சியில் நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் பாக்கியம் பெற்ற காரணத்தாலே, அந்தத் தொகுதிக்கு என்னால், இந்த அரசால், அமைச்சர் பெருமக்களிடமிருந்தும் அதிகாரிகளிடமிருந்தும், மிக முயற்சி எடுத்து அடிப்படைத் தேவைகளையும் ஏனைய வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நான் பெற்ற தொகை ஏறத்தாழ 185 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இதை மிகப் பெருமையோடு நான் கூறிக்கொள்கிறேன். ஓர் அமைச்சராக இருந்தவர் பெற்றுக் கொடுத்த தொகையைக்காட்டிலும் 6 மடங்கு, 7 மடங்கு தொகை வந்திருக்கிறது என்றால், அந்த 5 ஆண்டு ஆட்சியை இருண்ட ஆட்சி, களப்பிரர் ஆட்சி என்றுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 1-45*

எந்தத் துறையில் முன்னேற்றம் இல்லை? விவசாயத் துறையில் முன்னேற்றம் இல்லையா? இலவச மின்சாரம். அதற்கு அடுத்தாற்போல் நெருக்கடி ஏற்படுகிறபோது அபராத வட்டியிலே தள்ளுபடி; முறையாகக் கடன் தவணைச் செலுத்துபவர்களுக்கு 7 சதவீதம் வட்டியில் கழிவு; 10 சதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு 1,000 ரூபாய் என்று பலவாறாக நம்முடைய தலைவர் அவர்களுடைய அரசு விவசாயிகளுக்கு மிகப் பெரிய நன்மைகளைச் செய்து வருகிறது. இதனால் ஆண்டொன்றுக்கு நம்முடைய மின்சார வாரியத்திற்கு மட்டும் இழப்பீடு 1400 கோடி ரூபாய். இதற்கு மேலும், இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற நம்முடைய பொருளாதார முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி வீதம் ஆண்டொன்றுக்கு 6.05 சதவீதமாக இருந்தது 7.04 சதவீதமாக

அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் தனிநபர் வருமானம் 5 ஆண்டுகளுக்குள் 1½ மடங்காக உயர்ந்திருக்கிறது. மதிப்பிற்குரிய மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் 5 ஆண்டுகள் இடைவெளிக்குள்ளாக உயர்ந்திருப்பது இது சாதாரண முன்னேற்றம் என்று ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார். ஆண்டு ஒவ்வொன்றிலும் சிறிது சிறிதாகத்தான் முன்னேற்றம் அடைய முடியும். இந்திய துணைக் கண்டத்திலே பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ள, வளர்ச்சியடைந்துள்ள 3 மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் இருப்பது பெருமைக்குரியதில்லையா?

பதினோராவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் நமக்கு வருகிற 5 ஆண்டு காலத்தில் ஏற்படவுள்ள இழப்பு 4,711 கோடி ரூபாய் எனக் குறிப்பிட்டிருப்பது வருந்தத்தக்க ஒன்று. என்றாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமுயற்சி செய்து, ஊக்கத் தொகை பெற்று அதை நிறைவு செய்வேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிற தொகை 2,401 கோடி ரூபாய். என்னுடைய தொகுதியில் 2 நகராட்சிகள், 41 ஊராட்சிகள், 3 பேரூராட்சிகள் இருக்கின்றன. இதில் உள்ள அத்தனை பகுதிகளுக்கும் நம்முடைய அரசின் மூலமாக பல வழிகளிலும்—திருச்செங்கோடு நகராட்சிக்கு 12 கோடி ரூபாயும், குமாரபாளையம் நகராட்சிக்கு 6 கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதி 30 கிலோமீட்டர் தொலைவில் காவிரிக் கரையை ஒட்டியிருக்கின்ற (;நாகுதி. இரண்டு பெரிய ஊராட்சி ஒன்றியங்கள். ஒன்று திருச்செங்கோடு, 26 சிற்றூராட்சிகளைக் கொண்டது. வள்ளிமலை ஒன்றியம், 3 பேரூராட்சிகளையும் 15 ஊராட்சிகளையும் கொண்ட ஒன்றியம். இதற்காக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு இன்றைக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களிடத்தில் அந்தத் திட்டத்தினை தொடங்கிவைப்பதற்காக வர வேண்டுமென்று காலையில்கூட மிகப் பணிவோடு கேட்டிருக்கிறேன். 189 கிராமங்களுக்கு குடிநீர் தர ரூ. 16 கோடியே 90 இலட்சம், அதேபோல கொமாரபாளையம் நகராட்சிக்கு ரூ. 9 கோடியே 44 இலட்சம், வள்ளிமலை பேரூராட்சிக்கு ரூ. 86 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



திருச்செங்கோடு நகராட்சிக்கு 2 திட்டங்கள் இருந்தும்கூட 7 நாள், 6 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் என்று இருந்ததைத் தவிர்க்க 'பொன் விழாத் திட்டம்' என்று ஒரு திட்டம் தீட்டப்பெற்று ஏற்கெனவே 14 கோடியே 60 இலட்சம் ரூபாய் பெறப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் மிக வேகமாக turn key project என்ற அந்த அடிப்படையிலே, வருகிற அக்டோபர் திங்களுக்குள்ளாக முடியவிருக்கிறது. அதேபோல முளசி குடிநீர்த் திட்டம், புளோரைடு திட்டம், 94 கிராமங்களுக்காக 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில். திருச்செங்கோடு தார்ச்சனூர் கிராமத்திலே ரூ. 1 கோடியே 2 இலட்சத்தில் ஒரு திட்டம். பொன்னி சர்க்கரை ஆலை, எஸ்.பி.பி. காகித ஆலை ஆகியவற்றிலிருந்து வருகின்ற கழிவு நீரால் பாதிக்கப்பட்ட 22 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகிக்க என்று ஏறத்தாழ 1 கோடியே 2 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு, வேலை முடிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அதனுடைய pump house கட்டப்பட்டிருக்கிறது. ஒன்றை மறுபடியும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு திட்டங்கள் நடந்தும் இன்னும் 131 விடுபட்ட கிராமங்கள் இருக்கின்றன. அதற்காக ஒரு குடிநீர்த் திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

மிக முக்கியமான ஒன்று. நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கரியோடை விவசாயிகள் Lift Irrigation Society என்று வைத்து இன்று மின் இணைப்பு இல்லாமல் பல விவசாயிகள் Oil Engine வைத்து ஓட்டுகிறார்கள். அதனால் பல விவசாயிகள் மிகவும் அவல நிலையிலே இருக்கிறார்கள்.

அந்த 7 Lift Irrigation Societies-க்கு அனுமதி வழங்கி அவர்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்று மிகவும் அன்போடு கேட்டு, மீண்டும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்து மக்கள் மத்தியில் தமிழக மக்களின் விடிவெள்ளியாகத் திகழ வேண்டுமென்று வேண்டி வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 9. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாளை 2-2-2001 அன்று வினாக்கள்—விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 2-2-2001 (வெள்ளிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை 2-2-2001 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.



## 8. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 நிதியாண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலே சடையநேரி கால்வாய் வேலைகள் முடிவடைந்துவிட்டதாக முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே சொன்னார்கள். அந்தக் கால்வாய்ப் பணிகளில் 60% வேலைகள்தான் நடந்திருக்கின்றன. இன்னும் 40% வேலைகள் பாக்கி இருக்கின்றன. அதனால் தாமிரபரணி ஆற்றில் வீணாகச் செல்கின்ற தண்ணீரை புத்தன்தருவையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு இந்த ஆண்டிலே தண்ணீர் தருவதாகச் சொன்னார்கள். அந்தப் பணிகள் இன்னும் வேகமாக நடைபெறவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குன்னங்குறிச்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தடைப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளையும் செய்து முடித்து கூடியவிரைவில் தண்ணீர் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருங்குளம் பகுதிக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிதியில் இதுவரையில் என்ன பணிகள் நடைபெறுகின்றன என்பது தெரியவில்லை. அந்த அளவுக்கு பணிகள் அங்கே ரொம்ப தாமதமாக நடந்து கொண்டிருக்கின்றன. அதுபோல ஆழ்வார்திருநகர், ஆழ்வார்தோப்பு ஊரைக் கடக்கின்ற கால்வாயில் பாலம் கட்டுவதற்கு 6 கோடி ரூபாய்க்கு திட்டத்தைக் கொடுத்தார்கள். அந்தத் திட்டப் பணியும் கல்நாட்டு விழா செய்யப்பட்டு மூன்றாண்டுகள் ஆகியும் இன்னும் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன. அந்தப் பணிகளை விரைவாகச் செய்வதற்கு அரசு வேகப்படுத்தி செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக தண்ணீரைத் தருவதற்கு மிக விரைவில் ஆவன செய்ய வேண்டும். ஏனென்றால் அங்கே மக்கள் குடி தண்ணீருக்கு ரொம்ப பாதிப்பில் ஆழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு குடம் தண்ணீர் 4 ரூபாய், 3 ரூபாய் என்று விற்கிறது. நிச்சயமாக அந்தப் பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெல்லை மாவட்டம், நாங்குநேரியில் Hi-tech Park கூடிய விரைவிலே, சில தினங்களில் அங்கே பணிகள் தொடங்கி வைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மூன்று மாவட்டங்களில் அந்தப் பணியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டம், தூத்துக்குடி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் உள்ளடங்கிய ஒரு நல்ல பணி என்று எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே மூன்றாண்டுகளாக தொடங்கி வைக்கிறோம் என்று சொல்லி இதுவரைக்கும் இந்தப் பணிகள் தொடங்கி வைக்கப்படவில்லை. இப்போது இந்த நிதிநிலை அறிக்கையில் மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் சில தினங்களுக்குள் அந்தப் பணியை ஆரம்பித்து வைக்கிறோம் என்று சொன்னார்கள். கூடிய விரைவிலே அந்தப் பணியை விரைந்து செய்ய வேண்டும். ஏனென்றால் அந்த மூன்று மாவட்டங்களில் உள்ள மக்கள் நிச்சயமாக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பதால் அந்தப் பணியை ஆரம்பித்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

அடுத்து, நாசரேத்துக்கு இரண்டு கோடி ரூபாய் தண்ணீருக்காக ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட பணத்தில் இதுவரையில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் நீக்கி, அங்கே இருக்கின்ற பணிகளை செய்து தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, தென்காலிலே 24-12-2000 அன்று அடித்த புயலில் தென்காலில் தண்ணீர் வந்து ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் சரிந்து விவசாயிகள் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஸ்ரீவைகுண்டம், தென்காலில் மண் மேடாக உயர்ந்து தண்ணீர் சரிவர இறங்க முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அந்தக் கால்வாயைச் சீர்படுத்தித் தந்து, விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயிகளுக்கு உதவுகின்ற அரசு என்று சொல்லுகின்ற நீங்கள் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்ற இடங்களைப் பார்வையிட்டு அவர்களுக்கான ஊக்கப் பணிகளைச் செய்து தர வேண்டுமென்று நான் மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-2-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

44. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் இருபத்து ஆறாம் ஆண்டு அறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

45. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

46. 1999-2000 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-1) இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

47. 1999-2000 ஆம் ஆண்டிற்கான அரசு விரைவு போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-2) ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

48. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்-1) இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

49. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம், கோட்டம்-I) இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

50. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம், கோட்டம்-I) இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

51. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர், கோட்டம்-I) இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

52. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர், கோட்டம்-3) ஏழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

53. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம், கோட்டம்-4) நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

54. 1999-2000 ஆம் ஆண்டிற்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.**

&61. 2000-2001 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்).

&62. 2000-2001 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).



#63. 2000-2001 ஆம் ஆண்டின் இறுதி துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

64. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2000-2001).

65. மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து ஐந்தாவது அறிக்கை. (2000-2001).

66. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று பதினாறாவது அறிக்கை. (2000-2001).

67. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று பதினேழாவது அறிக்கை. (2000-2001).

68. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று பதினெட்டாவது அறிக்கை. (2000-2001).

69. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று பத்தொன்பதாவது அறிக்கை. (2000-2001).

70. பொதுக் கணக்குக் குழுவின் முன்னூற்று இருபதாவது அறிக்கை. (2000-2001).

71. மனுக்கள் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை. (2000-2001).

72. மனுக்கள் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2000-2001).

73. மனுக்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2000-2001).

84814

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.